# தொடர்பு இறையியல்
# ஓர் அறிமுகம்

மார்கிரேட் கலைசெல்வி லார்பியர்

தமிழ் இறையியல் நூலோர்க் குழு
தமிழ்நாடு இறையியல் கல்லூரி
அரசரடி, மதுரை.

நூல் : **தொடர்பு இறையியல் ஓர் அறிமுகம்**

ஆசிரியர் : முனைவர். மார்கிரேட் கலைசெல்வி லார்பியர்

பொதுப்பதிப்பாசிரியர்: அருள்பணி.முனைவர்.ம. ஞானவரம்

அட்டைப்படம் வடிவமைப்பு : திருமிகு. மஞ்சூரி

முதல் பதிப்பு : ஏப்பிரல் 2003
திருத்திய பதிப்பு : ஆகத்து 2013

படிகள் : 500

விலை : உரூ. 135/-

வெளியீடு : தமிழ் இறையியல் நூலோர்க் குழு
தமிழ்நாடு இறையியல் கல்லூரி
அரசரடி, மதுரை-16.

அச்சிட்டோர் : தமிழ்நாடு இறையியல் கல்லூரி அச்சகம்
அரசரடி, மதுரை-16.




**படைப்பு**

**அருள்திரு.சி.ஆர்.டபுள்யு. டேவிட் அண்ணனுக்கு...**

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | அணிந்துரை | v |
| | பதிப்புரை | vii |
| | உட்புகுமுன் | viii |
| 1. | அறிமுகம் | 1 |
| 2. | தொடர்பு | 5 |
| 3. | பொருள் சார்ந்த விளக்கங்கள் | 12 |
| 4. | இறையியல் சார்ந்த விளக்கங்கள் | 14 |
| 5. | தொடர்பு இயங்கும் முறை | 19 |
| 6. | தொடர்பு மாதிரிகள் | 38 |
| 7. | தொடர்புக்கான அடிப்படைக் கிறிஸ்தவக் கொள்கைகள் | 52 |
| | 1. இறைசெய்தி - (நற்செய்தி) அனைவருக்கும் உரியது | |
| | 2. இறை - தொடர்பு சமுதாயத்தைக் உருவாக்குகிறது | |
| | 3. இறை - தொடர்பு பங்கேற்பை உருவாக்குகிறது | |
| | 4. இறை - தொடர்பு விடுதலையளிக்கிறது | |
| | 5. இறை - தொடர்பு பண்பாட்டை வளர்க்கிறது | |
| | 6. இறை - தொடர்பு இறைவாக்குத் தன்மையுடையது | |
| | 7. இறை - தொடர்பு இருளை அகற்றுகிறது | |
| | 8. இறை - தொடர்பு ஆளுமையை உறுதிப்படுத்துகிறது | |
| | 9. இறை - தொடர்பு உரையாடலைத் தக்கவைக்கிறது | |
| | 10. இறை - தொடர்பு சுயத்தை விழிப்படையச் செய்கிறது | |
| | 11. இறை - தொடர்பு நீதியை நிலைநிறுத்துகிறது | |
| | 12. இறை - தொடர்பு கதை வடிவங்களை நமக்கு மீட்டுத் தருகிறது | |
| 8. | தொடர்பின் வகைகள்: | 71 |
| | 1. தனக்குள்தானே தொடர்பு கொள்ளுதல் | |
| | 2. இருவர் தொடர்பு | |
| | 3. குழுத் தொடர்பு | |
| | 4. வெகு திரள் தொடர்பு | |
| 9. | அருட்பணியும் தகவல் தொழில் நுட்பமும் | 106 |
| 10. | தொடர்பியல் கல்வி இறையியல் கல்லூரிகளில் பாடத்திட்டமான வரலாறு | 113 |
| 11. | தொடர்புத் தடைகள் | 119 |
| | கலைச்சொற்கள் | 122 |
| | துணைநின்ற நூல்கள் | 125 |


——)(——



# இந்தப் புத்தகத்த பத்தி (அணிந்துரை)

ஒரு காலத்தில் கிறிஸ்தவங்க தொடர்பை பத்தி ரொம்ப கவலைப்படல. ரொம்ப பேரு செத்த பிறகு என்ன ஆவோம்ன்னு கவலைபட்டாங்களே தவிர பொறந்த பொறவு என்ன ஆகிறாங்க என்ன அவதிபடராங்க ன்னு கவலைபடல.

ஆனா கடவுளு செத்தவனுக்கு மட்டும் சாமியல்ல, உசுரோடு இருப்பவனுக்கும் சாமிதானி ன்னு சொல்ற ஒரு கூட்டமும் இருந்திச்சி, இருக்குது. அதுல இந்தியாவுல தமிழ்நாடு இறையியல் கல்லூரியும் ஒண்ணு.

இந்த கல்லூரியில் படிச்சி, பிறகு பேராசிரியையா மாறின அருள்திரு. மார்கிரேட் கலைசெல்வி லார்பியர் இந்த புத்தகநூல்ல தொடர்பை இறையியல் பார்வையில பார்த்திருக்காங்க.

தொடர்பில் கிறித்தவங்க ரோம்ப முக்கியமா எடுக்கணும். ஏன்னா நற்செய்தி அறிவிங்கன்னு இயேசு சாமி கிறித்தவங் களுக்கு உத்தரவு போட்டிருக்காரு. அந்த அடிப்படையில் தான் நான் பாசத்தோட மாகிமா ன்னு கூப்பிடுற அருள்திரு.மார்கிரேட் கலைசெல்வி லார்பியர் இந்த புத்தகத்த எழுதியிருக்காங்க.

தொடர்பு ன்றது என்ன யுணருதல யிருந்து தொடர்பு வகைங்க. தொடர்பு ஊடகங்க, தொடர்பு தடையின்னு தொடர்புல்ல முக்கியமான எல்லாத்ததையும் இறையியல் பார்வையில் எழுத முயற்சி பண்ணியிருக்காங்க. நாங்கெல்லாம் வகுப்போட நிறுத்திக்கிட்ட இந்த முயற்சிய மாகிமா தான் மொத்தமாக புத்தகமா ஆக்கியிருக்காங்க.

தொடர்புன்றது வெறும் செய்தி பரிமாற்றமல்லன்னு விளக்கியிருக்காங்க. கடவுளு ஓலகத்தோட தொடர்பு கொண்டவரு. சில இறையியலாளருங்க இந்த தொடர்பை பத்தி

மட்டும் பேசுவாங்க. கடவுளு நம்ப பெத்தவரு. பெத்தவருக்கு பெத்த புள்ளங்களோட ஒற்றுஒறவும் முக்கியம் . இத்தை மாகிமா வலியுறுத்தியிருக்காங்க.

அப்புறம் தொடர்பு இறையியலுன்னு சில பேருடைய கருத்தைச் சொல்லியிருக்காங்க. அதுல சிலருடைய கருத்து பொருத்துமாயில்லை.

என்னிய பொருத்தவரைக்கும் தொடர்புகின்றது. இயேசு சாமி செஞ்சி காட்டுன அன்புறவு தான் . அதனாலே கதை மட்டுமல்ல பேசுறது. உணர்ச்சி வசப்படுகிறது. நம்பிக்கை வைக்கிறது, சடங்கு செய்றது, செயல்படுறது. ஏன் அடிக்கிறது கூட இயேசு காட்டிய அன்புறவா இருக்கணும். அதுதான் தொடர்பு இறையியலு.

அப்புறம் தொடர்பு வகைங்க பத்தியும் தடைகளை பத்தியும் இந்த புத்தகம் சொல்லுது. பல அறிஞர்கள் கருத்துரையும் எடுத்துச் சொல்லுது.

இந்த வெகுதிரள் தொடர்பூடகம் சக்தி வாய்ந்ததுன்னு இதுல வருது. என்ன கேட்டாஇந்த தொடர்பூடகங்களுக்கு சுயமா சக்தியில்லை. ஏன்னா ஐம்புலன்கள் மூலமா அதுங்க நம்மோடே தொடர்பு கொள்ள முடியாது. அதுங்க சக்தி வாய்ந்ததா இப்ப இருக்க காரணம் சனங்க அதை நம்புறதால்தான் ன்னு சொல்லுவேன்.

அருள்திரு. மார்கிரேட் கலைசெல்வி லார்பியர் ஒரு பெண் விடுதலை இறையியலாளர்யின்றது, எல்லாருக்கும் தெரியும். அவர் தொடர்பு பேராசிரியையின்றதும் தெரியும். இந்த புத்தகத்திலயிருந்து அவுங்க ஒரு தொடர்பு இறையியலாளர்ன்னு தெரியுது.

இவுங்க இன்னும் நெறைய புத்தகங்க உண்டாக்கணும், ரொம்ப நாளு வாழணும். கடவுளு அவுங்களுக்கு வேண்டிய எல்லாயுயர்வையும் குடுக்கனும்னு அந்த மாட்டுக் கொட்டியில பொறந்த சாமிகிட்ட வேண்டிக்கிறேன்.

*மதுரை – 16.*
*06-04-2003.*

**பரட்டை**



# பதிப்புரை

தொடர்பியல் என்பது இன்று முழுவீச்சுடன் சமுதாயத்தைப் பெருமளவு பாதித்து வருகின்றது. உலகம் தொன்று தொட்டுத் தொடர்புறவில்தான் இயங்கி வந்துள்ளது. எனினும் இன்றையத் தொழில் நுட்ப வளர்ச்சியினால் தொடர்புறவு இன்று விரைவு பெற்றுள்ளது. இதனால் நன்மைகளும் உள்ளன. தீமைகளும் உள்ளன. இறையியல் மாணாக்கராக மக்கள் தொடர்பு ஊடகங்களைக் குறித்து அறிந்திருக்க வேண்டியத் தேவை இன்றியமையாததாகிறது.

தொடர்பு உறவியல் என்பது தொடர்பு இறையியலாக வளர்ச்சியடைந்துள்ளது. இறையியல் பாடத்திட்டத்தையொட்டி தொடர்பிறையியல் ஓர் அறிமுகம் என்ற இந்த நூல் எழுதப் பெற்றுள்ளது. 2003ஆம் ஆண்டில் முதற்பதிப்பாக வெளிவந்தது. இன்று புதிய செய்திகள் சேர்க்கப்பெற்றுத் திருத்திய பதிப்பாக வெளிவருகிறது.

இந்நூலின் ஆசிரியர் அருள்பணி.முனைவர்.மார்கிரேட் கலைசெல்வி லார்பியர் அக்காள் தமிழ்நாடு இறையியல் கல்லூரியின் தொடர்பியல் துறை இயக்குநராகவும், பேராசிரியராகவும் பணியாற்றி வருகிறவர். இத்துறையில் புலமை பெற்றிருக்கும் இவர் மறு பதிப்புக்கு ஆயத்தம் செய்து வழங்கியிருப்பதற்கு மிகுந்த நன்றியுடையோம்.

இந்நூலுக்கு அட்டைப்படம் வரைந்தளித்துள்ள நூலாசிரியரின் மகள் திருமிகு.மன்சூரிக்கு நன்றி. தமிழ்நாடு இறையியல் கல்லூரியின் அச்சகப்பயிற்சி நிலையத்தார் சிறந்த முறையில் நூலினை அச்சிட்டளித்துள்ளனர். அன்னாருக்குத் தமிழ் இறையியல் நூலோர் குழுவின் நன்றி. வாங்கிப் பயனடைந்து தொடர்பு இறையியல் செய்திகளை அறிந்து செயல்பட இந்நூலினை மீண்டும் வெளிக்கொணர்வதில் மகிழ்ச்சியடைகிறோம்.

**இரா. செ. டென்சன் எக்டர்**
பதிப்பாசிரியர்

# உட்புகுமுன்

இந்நூல் ஓர் அறிமுகநூலே. பி.சி.எஸ். மற்றும் பி.டி. படிக்கும் மாணவர்களுக்கு தொடர்பியல் ஓர் அறிமுகம் என்னும் பாடம் கட்டாயப் பாடமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. அப்பாடத்துக்குச் சரியான பாடநூல் தமிழில் அதுவும் இறையியல் சார்ந்து இல்லாததால், இந்நூலைத் தொடர்பு இறையியல் ஓர் அறிமுகம் எனத் தொகுத்து வழங்கியுள்ளேன். என் இருபத்திரண்டு ஆண்டுகால ஆசிரியப் பணி மற்றும் கருத்தரங்குகள், நான் படித்த கட்டுரைகள், மாணவர்களுக்கு ஆய்வுக் கட்டுரையில் வழங்கிய ஆலோசனைகள், பிற நூல்களிலிருந்து நான் சேகரித்தத் தகவல்கள் இவையனைத்தையும் சுருக்கமாக இந்நூலில் தொகுத்து வழங்கியுள்ளேன். தொடர்பியல் ஓர் அறிமுகம் என்ற பாடத்திட்டத்திற்கு ஏற்கனவே செராம்பூர் பல்கலைக்கழகம் கொடுத்துள்ள நூல் பட்டியல் மிகவும் பழமையானதால், தற்காலத்திய நூல்களையும் துணைநூல் பட்டியலில் கொடுத்துள்ளேன். 2003இல் 'தொடர்பு இறையியல் ஓர் அறிமுகம்' எனும் பெயரில் வெளிவந்த இந்நூலில் இன்னும் பல கருத்துகள், குறிப்புகள் இவைகளை இணைத்து தற்போது இன்னும் பல தகவல்களும் கொடுத்துள்ளேன்.

என்னை, என் சிந்தனையை விழிப்படையச் செய்த தமிழ்நாடு இறையியல் கல்லூரிக்கும், உற்சாகப்படுத்திய ஆசிரிய அண்ணன்கள், அக்காளுக்கும், முன்னாள், இந்நாள் ஆசிரியர், நண்பர்கள் மற்றும் முதல்வர் அருள்பணி.முனைவர்.மா.ஞானவரம் அவர்களுக்கும், நான் தொடர்பியல் கல்வி பயில்வதற்கு ஊக்கப்படுத்திய அருள்பணி.சி.ஆர்.டபிள்யூ.டேவிட் அண்ணன் அவர்களுக்கும் என் நன்றி.

இப்பதிப்பிற்கு பதிப்புரை வழங்கிய பதிப்பாசிரியர் அருள்பணி. இரா. செ. டென்சன் எக்டர் அவர்களுக்கு நன்றி. இதனை அச்சேற்றிய தமிழ்நாடு இறையியல் கல்லூரி அச்சகத்தார் அவர்களுக்கும் நன்றி. என் உணர்வுகளுக்கு மதிப்பு கொடுத்து என் படைப்புத் திறமையை தடையின்றி வெளிக்கொணர ஒத்துழைப்பு வழங்கிய என் கணவர் முனைவர்.பா.மோகன் லார்பியர், மக்கள் மஞ்சூரி, உதவியாளர் குமுதா ஆகியோருக்கும் என் நன்றி. எல்லாவற்றிற்கும் மேலாக, நம்மைப் படைத்துப் பராமரித்துக் காத்து வழிநடத்தி, தொடர்ந்து நம்மோடு தொடர்பு(றவு) கொண்டுள்ள கடவுளுக்கு நன்றி.

மார்கிரேட் கலைசெல்வி லார்பியர்



# தொடர்பியல் இறையியல்

## 1. அறிமுகம்

'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்பது முதுமொழி 'தொடர்பின்றி ஓரணுவும் அசையாது' என்பது புதுமொழி. எந்த ஓர் உயிருக்கும் அடிப்படையாக இருப்பது இந்தத் தொடர்புதான். பிறந்த குழந்தையர் முதல் வயதான பெரியவர் வரை மனித உறவுக்கு அடிப்படையாக இருப்பதும் தொடர்பே. கடவுளுக்கும் மனிதருக்கும், மனிதருக்கும் உடன் மனிதருக்கும், மனிதருக்கும் இயற்கைக்கும் உள்ள உறவினை வலுப்படுத்துவதும், உறுதிப்படுத்துவதும் இந்தத் தொடர்பாகும். படைப்பின் தொடக்கம் முதல் இதைக் குறித்த கண்ணோட்டத்தைத் திருமறையின் வெளிச்சத்தில் புரிந்து கொள்கிறோம்.

தொடக்கத்திலே வெறுமையும், இருளும் உறவற்றதுமாய் இருந்த இவ்வுலகைக் (தொ.நூ. 1:1) கடவுள் நன்மையும் செம்மையுமாக்கினார். அதையே நல்லது என்றும் கண்டார் (தொ.நூ. 1:31) படைத்த கடவுள் உலகம் அதன் நிறைவைக் காண வேண்டும் என்று விரும்பினார். இதையே மையச் செய்தியாகவும் கற்றுக் கொடுக்க விரும்பினார். ஆனால் இந்தச் செய்திப் பரிமாற்றத்தில் சற்றுத்தொய்வு ஏற்பட்டு, உறவு விரிசல் உண்டாகின்றது. அதாவது, தம்முடைய சாயலில் படைக்கப்பட்டவர்கள் (தொ.நூ. 1:27) தாம் விரும்புகிறபடி முழுமையான நிறைவாழ்வை அடைய விரும்பவில்லை என்கிற செய்தியை, மனுக்குல வீழ்ச்சியின்மூலம் பின்னூட்டமாக (Feed back) கடவுள் பெற்றுக்கொள்கிறார். மனுக்குலம் உருவான காலமுதல், இன்றுவரை, கடவுளுக்கும் மனிதருக்கும் இருக்கின்ற இவ்வகைத் தொடர்பை ஒரு தொடர் நிகழ்ச்சியாகவே பார்க்கலாம். எடுத்துக்காட்டாக கடவுளின் நீதிக்கடுத்த செயல்களிலேயிருந்து நாம் பின் வாங்கும்போதெல்லாம், நமக்கும் கடவுளுக்கும் இடையில் உள்ள உறவிலிருந்து நாம் துண்டிக்கப்படுகின்றோம்.

இந்த இடைவெளியைப் போக்குவதற்குப் பல முயற்சிகளைக் கடவுள் மேற்கொள்கின்றார் என்பதையே திருவிவிலியம் நமக்குத்தெளிவாக விளக்குகிறது. கடவுளின் வாக்கு நம் பாதைக்கு ஒளியும், நம் காலடிக்கு விளக்குமாய் (தி.பா. 119,105) இருக்கிறதாய் வாசிக்குறோமல்லவா? இந்த உறவின் உச்சக் கட்டம்தான், கடவுள் தம் மகவையே இவ்வுலகத்துக்கு ஈன்று கொடுத்ததாகும். "கடவுள் தம்முடைய ஒரே மகனில் நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வை அடையும்படி அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்". (யோவான் 3:16)

ஆக, இறைமகன் இயேசுகிறிஸ்துவும் இதையே தம்முடைய செயல் நோக்கமாகக் கொண்டிருந்தார். தம்முடைய வாழ்க்கை, பாடு மரணம், உயிருற்றெழுதல் மூலம் இறையுறவில் ஒரு முழுமையைக் கொண்டுவர முயன்றார். "நமது மீறுதல்கள் எல்லாவற்றையும் மன்னித்து, நமக்கு எதிரிடையாகவும் கற்பனைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத் தைக் குலைத்து அதை இடையிலராதபடி எடுத்து, சிலுவையில் ஆணியடித்து, துரைத்தனங்களையும், அதிகாரங்களையும் உரிந்துக்கொண்டு பகிரங்கமான கோலமாக்கி சிலுவையிலே அவற்றின்மேல் வெற்றி சிறந்தார் (கொலோ 2:13-15) என்று கொலோசேயர் திருமுகத்தில் சொல்லப்பட்டிருக்கின்ற தொடர்கள், கடவுள் இவ்வுலகத்தின் மீதும், நம்மீதும் கொண்டிருக்கிற அன்பை உறுதிப்படுத்துவதாயிருக்கின்றன.

எல்லாம் சரிதான், இவற்றைக் கற்றுக் கொடுக்கத்தான், இறையியல் வல்லுநர்கள், திருமறை இறையியலாளர்கள் என்று பலர் இருக்கின்றனரே தொடர்பியல் ஆசிரியர்களே உங்களுக்கு இதில் என்ன வேலை இருக்கிறது? என்று வினா இயல்பானதே என்ற காரணம் இறையியல் கல்லூரிகளில் தொடர்பியல் பாடத்திட்டம் என்பது கடந்த இருபது ஆண்டுகளில் அறிமுகமாகி வளர்ந்துவரும் புதுத்துறையாக கருதப்படுகின்றது. இந்நிலையில், தொடர்பியல் ஆசிரியர்களின் சிறப்பான பங்களிப்பு என்ன என்பதைப் போன்ற வினா சரியான ஒன்றாகத் தோன்றினாலும், அதற்குத் தெளிவான பதிலுரை கொடுப்பதும் இந்நூலின் தலையாய நோக்கங்களில் ஒன்றாக இருக்கிறது.



எந்த ஓர் இறையியலும், அதனதன் சூழல் சார்ந்துதான் கட்டமைக்கப்படுகின்றது. தொடர்பியல் சார்ந்த இறையியலும் சூழல் சார்ந்த இறையியலை மையமாக வைத்துத்தான் பேசப்படுகின்றது. இதுகாறும் சொல்லப்பட்ட நற்செய்தியை, இன்றைய சூழலில் தெளிவாகச் சிறப்புப் பார்வையுடன் அறிவிப்பதற்குத் தொடர்பியல் கல்வி உதவியாக இருக்கிறது. மேலும் தகவல் பரிமாற்றம் என்பது இவ்வியலின் முதன்மைச் சொல்லாட்சியாகும். "நீங்கள் புறப்பட்டுப் போய் எல்லா நாட்டினரையும் சீடராக்குங்கள், அவர்களுக்குத் தந்தை, மகன் தூய ஆவியார் பெயரால் திருமுழுக்குக் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்களும் கடைப் பிடிக்கும்படி அவர்களுக்குக் கற்பியுங்கள்" (மத்தேயு 28:19-20) என்கிற கட்டளை, கிறிஸ்தவராய் வாழ விரும்புகிற ஒவ்வொருவருக்கும், அவர்கள் மேல் விழுந்த கடமையாக இருக்கிறது. மேலும் இது நம் எல்லாரின் அடிப்படை உரிமையும் கூட இந்திய மனித உரிமை சாசனம் சரத்து 19Aஇல் சொல்லப்பட்டிருக்கிற "கருத்துச் சுதந்திரம், எண்ணங்களை வெளியிடும் சுதந்திரம் இவற்றுக்கான உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு. குறுக்கீடின்றி கருத்துகளை வைத்துக் கொள்வதற்கும், எவ்வகைச் சாதனங் களின் மூலமாகவும் எல்லைகளைக் கருதாமலும் தகவல் மற்றும் கருத்துகளை நாடுவதற்கும் பெறுவதற்கும் வழங்குவதற்குமான சுதந்திரமும் இவ்வுரிமையில் அடங்கும்" என்பதனை இதற்கு எடுத்துக்காட்டாகச் சொல்லலாம்.

இச்சாசனம் தகவல் பரிமாற்றத்தை, மனித உரிமைகளின் அடிப்படை உரிமையாகச் சுட்டிக்காட்டுகின்றது. ஆனால் இதை அவ்வளவு எளிதாகக் கையாள முடியாத சூழல் உள்ளது. காரணம் தகவல் கொடுத்தலும் தகவல் சேகரித்தலும் தொழில் நுட்பத்தின் அடிப்படையில் கண்ணோக்கப்படுகின்றது. நாம் வாழும் யுகம் தகவல் புரட்சியின் யுகமாகும். தடுக்கி விழுந்தால் ஓர் எஸ்.டி.டி.பூத்., நொடிப்பொழுதில் ஆவணங்களைக் கடத்துகிற தொலைநகல் (பேக்ஸ்) கருவிகள் வீடுகளில் மின்-அஞ்சல், ஓடும் வண்டிகளில் செல்லிடப் பேசிகள் (செல்) இவை கத்தை கத்தையாகச் செய்திகளை, ஆவணங்களை நொடிப் பொழுதில், உலகின் எந்த மூலைக்கும் கொண்டு செல்கின்றன. தகவல் புரட்சியும் அதைத் சார்ந்து கண்டுபிடிக்கப்பட்ட தகவல் தொழில்

நுட்பங்களும் உலகம் முழுவதையும் ஒரு சிறு கிராமமாகச் (Global Village) சுருக்கி விட்டிருக்கின்றன என்று மார்ஷல் மெக்லூகான் என்ற தொடர்பியல் வல்லுநர் கூறுகிறார். என்றாலும் வெறும் தகவல் பரிமாற்றம் மட்டுமே தொடர்பாகி விடாது. தகவல் பரிமாற்றம் என்பது தொடர்பு நிகழ்ச்சியின் ஒரு பகுதியாகும். எடுத்துக்காட்டாக ஆயராற்றுப்பணி என்பது (Pastoral Counselling) ஒரு பரந்துபட்ட பெரிய அமைப்பாகும். இதிலே ஆயர் கரிசனைப்பணி (Pastoral care) என்பது ஒரு பகுதியாக இருக்கிறது. அதுபோலவேத் தொடர்புத் துறையின்கீழ் செய்திப்பகிர்வும் ஒலிபரப்பும் பெறுகையும் ஒரு தலையாய பங்கு வகிக்கிறது. எனவேதான் தொடர்பியல் பாடத்திட்டத்தில் கையாளப்படும் சொல்லாட்சிகள்-கலைச் சொற்கள் பற்றிய அடிப்படை அறிவும் தேவைப்படுகின்றது.

* * *



# 2. தொடர்பு

கம்யூனிக்கேஷன் (Communication) என்ற ஆங்கிலச் சொல்லுக்குத் தமிழில் தொடர்பு என்கிற சொல்லைப் பயன் படுத்துகிறோம். தொடர்பு என்ற சொல் சங்கிலித் தொடர் என்ற பொருளையும் குறிக்கிறது. அதேவேளை உறவு என்ற பொருளையும் குறிக்கிறது. உண்மையில் 'Communication' என்கிற ஆங்கில சொல் 'Communis' என்கிற இலத்தீன் வேர்ச்சொல்லிலிருந்து வருகிறது. இதன் பொருள் கூட்டுறவு, பொதுமை, பகிர்வு, அதாவது [Fellowship, Common, Sharing] என்பதாகும். இவையனைத்தும் உள்ளடக்கிய சொல் 'உறவு' என்று பொருள் கொண்டாலும் 'தொடர்பியல்' என்ற சொல்லுக்குப் பதிலாக 'உறவியல்' என்கிற பெயரைக் கையாள்வது சற்றுக் கடினமாக இருக்கும். எனவே தொடர்பு குறித்தும் அது தொடர்பான பாடங்களையும் படிக்கின்ற இயலுக்கு 'தொடர்பியல்' என்ற சொல்லே கையாளப் படுகின்றது.


தொடர்பியல் கல்வியின் அடிப்படை நோக்கம் உறவை வளர்ப்பதாகும். எடுத்துக்காட்டாக தொடர்பு என்ற சொல் அது-அது உறவைக் குறிக்கிறது. (it –it relation) ஆனால் உறவு என்ற சொல் அதற்கும் உனக்கும் உள்ள உறவைக் குறிக்கிறது. (i-thou relation) என்றாலும் தொடர்பு என்ற சொல் பயன்படுத்தப்படும்போது உறவு என்ற சொல்லின் நோக்கத்தை உள்ளடக்கியதாய் இருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக ஒரு தாயின் வயிற்றில் உள்ள குழந்தை வளர்ந்து பிறந்த பிறகு "அது" என்கிற நிலையிலிருந்து ஆளுமை வளர்ச்சியில் படிப்படியாக வளர்வதைப் போன்றுதான் தொடர்புக்கும் உறவுக்கும் உள்ள வளர்ச்சியைப் புரிந்து கொள்ள வேண்டும். ஆக தொடர்பு என்பது முழுமையான உறவை நோக்கிய பயணமாகும். அதாவது படர்கையில் உறவுப்பரிமாணங்களற்ற, நிலையிலிருந்து வளர்ச்சியடைந்த நிலையை அடைவதாய் அமையவேண்டும்.

Communion, (கம்யூனியன்) Communicare (கம்யூனிகேர்) Community (கம்யூனிட்டி) ஆகிய சொற்களின் அடிப்படையில் உறவை மையப்படுத்தியதாகவே இருக்கின்றன. இவை அனைத்தும் Communication (கம்யூனிக்கேஷன்) என்கின்ற சொல்லிலிருந்து வரும் சொற்களாகும். கிறிஸ்தவப் பற்றுறுதியின் அடிப்படையே Come into Union அதாவது கூட்டுறவுக்குள் வருதல் என்பதாகும். ஒரே நம்பிக்கையுடையவர்கள், அதாவது இயேசுகிறிஸ்துவின் மீது நம்பிக்கை வைத்துள்ள அனைவரும் ஒன்று கூடி வருதலை 'நம்பிக்கையுடையவரின் கூட்டம்' [Priesthood of all believers] என்று அழைக்கின்றோம். இவர்கள் தங்களுடைய நம்பிக்கையை உறுதிப்படுத்துவதற்கு அடையாளமாக திருவிருந்தில் பங்கெடுக்கின்றனர். அந்த ஒரே அப்பத்தில் பங்கெடுக்கிறபடியால் நாமெல்லாரும் ஒரே உடலும் ஒரே அப்பமுமாயிருக்கிறோம் (1 கொரி 10:17). அங்கே கிறிஸ்துவின் உடல் பகிரப்படுகின்றது. "என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். (1கொரி 11:25)

எனவே, ஒப்படைப்புள்ள ஒவ்வொரு கிறிஸ்தவரும் அடிப்படையில் ஒரு தொடர்பாளராகவே இருக்கிறார். மேலும் தொடர்பியல் இறையியலாக்கம் என்பது இறையுறவுக் குள்ளாக வருவதற்காக எடுக்கப்படுகின்ற முயற்சியாகும். இம்முயற்சியில் இறையரசை நிறுவும் திருப்பணியிலே நாம் எல்லாரும் உடன் பங்காளிகளாயிருக்கிறோம். இதனால் நாம் இழந்துபோன அந்த இறைசாயலை மீண்டும் பெறுகின்றோம். அதன்மூலம் முழுமையை நோக்கிய பயணத்துக்குள்ளாக நாம் கடந்து செல்கிறோம். இந்தப் பயணம்கூட நாம் எல்லாரும் மேற்கொள்ளும் ஒரு தொடர் நிகழ்ச்சியாகும். எனவே இறையியல் பேசுகின்ற ஒவ்வொருவரும் இப்பயணத்தில் பங்கு பெறுகின்றனர்.

தொடர்பு என்பது பேசுதல், எழுதல், வாசித்தல், யோசித்தல் - இவைகளுக்குச் சற்று அப்பாற்பட்டது. உறவுகளையும் செயல்பாடுகளையும், கருத்துகளையும் இணைத்து ஒருங்கிணைக்கப்பட்ட கருகலான வலைப்பின்னல் போன்றது தொடர்பாகும். ஏனெனில் ஒன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே மற்றொரு சிந்தனையும் செயல்பாடும் தொடர்புடையதாக இருக்கிறது.






(மூலம் :COMMUNICATION PLUGGING THE BASICS.N.METHA 1997)

எடுத்துக்காட்டாக மார்த்தாள், மரியாள் ஆகியோரின் சகோதரரின் மரணம் குறித்த நிகழ்வு. யோவான் நற்செய்தி நூல் பதினொன்றாம் அதிகாரத்தில் சொல்லப்பட்டிருப்பது நாம் யாவரும் அறிந்ததே. ஆங்கே லாசரு மரணம் அடைந்ததை இயேசு கேள்விப்பட்டு (யோவான் 11:1-45) ஆவியிலே கலங்கி துயரமடைந்து (11:33) என்று வாசிக்கிறோம். சகோதரிகளின் நிலைக்கண்டு கண்ணீர் விட்டார் எனவும் பார்க்கிறோம். பிறகு அவர்களுக்காக அவர் வேண்டுகிறார். வேண்டும் போது கடவுளே நான் கேட்டால் நீர் தருவீர் என்பது எனக்குத் தெரியும் (11:42) என்றாலும் நீர் என்னை அனுப்பினதை சூழ்ந்து நிற்கும் மக்கள் நம்பும்படி அவர்கள் நிமித்தம் இதைச் சொன்னேன் என்கிறார்.

இந்த நிகழ்ச்சியைத் தொடர்பியல் பார்வையில் கண்ணோக்கும்போது, ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் சிந்தனை, பேச்சு, செயல்பாடுகள், அனைத்தும் ஒன்றொன் றொன்று தொடர்புடையதாக இருக்கின்றன என்று பார்க்கிறோம். எடுத்துக்காட்டாக நாம் பேசும்போதே சிந்திக்க வேண்டியிருக்கிறது. எனவே சிந்தித்துப் பேசுவது ஒரு குறிப்பிட்ட செயல்பாட்டோடு தொடர்புடையதாக இருக்கிறது. இதுதவிர தொடர்பை விளக்குவதற்காக, தொடர்பியல் வல்லுநர்கள் பல்வேறு விளக்கங்களைக் கொடுத்து இப்பதத்திற்கு பொருள் சேர்க்க முயல்கின்றனர். எனவே, கலை, இலக்கியம், ஓவியம், சிற்பம், எழுத்து, இயல், இசை, நாடகம், அறிவு, அடையாளம்,

சின்னம் குறியீடு, செய்தி, கருத்து பரிமாற்றம், முன்னேற்றம், தொடர்பு, உறவு, அறிவித்தல், தகவல், இப்படி அனைத்தையுமே தொடர்பு எனச் சொல்லலாம். மனித வாழ்க்கையில் நடைபெறும் அனைத்து அம்சங்களையும் தன்னில் உள்ளடக்கிய ஓர் அடிப்படைத் தேவையாகும்.

பள்ளிப் பாட நூல்களில் தொடர்பு என்னும் சொல்லுக்கு அரசாங்க தரப்பு விளக்கங்களே தரப்படுகின்றன. எடுத்துக் காட்டாக தொடர்புத்துறை, மற்றும் வெகுதிரள் தொடர்புத் துறை ஆகிய இரண்டு அரசாங்க அமைப்புகளின் செயல்பாடு களைத்தான் தொடர்பு எனக் குறிப்பிடுகின்றனர். முதலில் சொல்லப்பட்ட தொடர்புத்துறை என்பது அஞ்சல்துறையையும் தொலைத் தொடர்பு நிறுவனத்தின் தலையாய செயல்பாடு களையும் உள்ளடக்கியதாகும். அஞ்சல் தலைத்துறை மூலம் அஞ்சல் தலை வெளியிடுதல், வெளிநாட்டு, உள்நாட்டு அஞ்சல் போக்குவரத்து, விரைவஞ்சல் மற்றும் அவற்றிற்காக போக்கு வரத்திற்கான கருவிகளை அஞ்சல் துறையில் உட்புகுத்தல், அத்துறையின் முன்னேறுதல், அஞ்சல் துறை மூலம் நடத்தப் படுகின்ற சிறுசேமிப்புத் திட்டங்கள், ஆயுள்காப்பீட்டுப் பணிகள் போன்றவை குறித்த செயல்பாடுகள். தொலைத் தொடர்பு நிறுவனம் என்பது இது தொடர்பான கருவிகளையும், அதன் உள்ளடக்கத்தையும் ஏற்றுமதி செய்தல், உள்நாட்டிலேயே தொலைத்தொடர்பு நுணுக்கங்களில் முன்னேறுதல், விண்கலத்தின் மூலம் தொலைத் தொடர்பு கொள்வதற்கான முயற்சிகளை நடைமுறைபடுத்துதல், மின்னணு தொலைதொடர்பு தொலை பேசிகளை அறிமுகம் செய்து ஊக்குவித்தல், மின்னணு மடல், ஒளி, ஒலி, அமைப்பினை, தொலை தொடர்பியல் ஒருங் கிணைப்பதன் மூலம் மாநாடுகள், கூட்டங்கள் நடத்துதல் போன்றவை தொடர்பு என விளக்கம் பெறுகின்றன.

அனைத்திந்திய வானொலி, தொலைக்காட்சி நிலைய நிகழ்ச்சிகள், இந்திய பத்திரிக்கையின் பதிவுத்துறை, அச்சுத் துறைக்கான ஆணையங்கள், ஆய்வுத்துறைகள், ஒளிப்படத்துறை, நூல் வெளீட்டுத்துறைகள், செய்தி நிறுவனங்கள் ஆகிய அனைத்தும் அதற்கான பயிற்சி நிறுவனங்களும் வெகுதிரள் தொடர்புத் துறையின் கீழ் வருகின்றன. இது இவ்வாறிருக்க ஒரு



சமூகவியலாளரிடம் தொடர்பு என்றால் என்ன? என்கிற கேள்வியை வைக்கும் பட்சத்தில், இது 'கூட்டுறவு' என்ற பொருளில் வருவதால் இதற்கு உறவு என்ற பொருளே பொருத்தமுடையதாக இருக்கும் என்பர். செய்தித்துறையில் பணியாற்றுகின்றவரை அணுகும் பட்சத்தில் அவர், தொடர்பு என்ற சொல்லுக்குச் செய்தி பரிமாற்றம் அல்லது உண்மையை உலகுக்கு அறிவித்தல் என்பர். இந்நிலையில் ஒரு இறையிய லாளரைப் பார்த்து தொடர்பு என்றால் என்ன? என்று கேள்வி எழுப்பினால், கடவுள் இந்த உலகத்தோடு கொண்ட உறவின் முழுமையே தொடர்பு எனலாம் என்பர். இதற்கு அடிப் படையான திருமறை வசனம் "கடவுள் தம்முடைய ஒரே பேரான மகனை நம்புகிறவர் எவரோ அவர் அழியாமல் நிலை வாழ்வை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி, இவ்வள்வாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" (யோவான் 3:16) என்பதாகும்.

இறையியல் கல்லூரிகளிலும் இப்படிப்பட்ட சிக்கல்கள் இருக்கின்றன. அதாவது தொடர்பு சார்ந்த, துறைசார்ந்த, ஊடகங்களின் உற்பத்தியையோ? அல்லது நிகழ்ச்சிகளையோ மட்டுமே 'தொடர்பு' என புரிந்துகொண்டு, ஒளி, ஒலி நாடாக்களை வெளியிடுவது, நாடகங்கள் போடுவது, தொடர்பியல் கருவிகளைத் துறைக்கு இறக்குமதி செய்தல், கணினிப் பயிற்சி கொடுத்தல் போன்றவை மட்டுமே தொடர்பு என புரிந்து கொள்கின்றப் போங்கும் உள்ளது. இதற்கு பெரும்பாலான இறையியல் கல்லூரிகள் விதிவிலக்கல்ல. இவ்வகை குழப்பத்தி லிருந்து வெளிவர முனைவர். பிரதீப் தாமஸ் (Pradeep Thomas 1997) அவர்கள் இரண்டு அணுகுமுறைகளை முன்வைக்கின்றார். அதாவது ஒன்று தொடர்பியலுக்கான இறையியல். இரண்டாவது தொடர்புகொள்ளும் இறையியல். 'தொடர்பியலுக்கான இறையியலானது கடவுள் இவ்வுலகத்தில் வைத்துள்ள அன்பின் வெளிப்பாட்டை நம்புவது' என்பதாகும். 'தொடர்புகொள்ளும் இறையியல்' என்பது, நாம் பேசும் அனைத்துவகை இறையியல்களையும் குறிக்கும். எனவே இவ்விரண்டிற்கும் உள்ள வேறுபாட்டை அவ்வப்போது சுட்டிக்காட்டிக் கொண்டே செல்ல வேண்டியிருக்கிறது என்கிறார்.

காரணம் நாம் பேசுகின்ற இறையியல் அனைத்தையும் பல ஊடகங்களின் வழியே திறமையாகச் சொல்லுவதற்கு மேற்கொள்ளும் ஒரு பயிற்சியாக மட்டுமே தொடர்பியலை நாம் அணுக இயலாது. மாறாக தொடர்பைப்பற்றியும், தொடர் பியலைப்பற்றியும் ஒரு முழுமையான கண்ணோட்டத்தைச் சூழல்சார்ந்து இறையியல்சார்ந்து வளர்த்துக் கொள்ளத் தேவையான பக்குவத்தை உருவாக்குவதே தொடர்பியல் இறையியல் செயலாக்கம் முயல்கிறது.

பிறகு எதைத்தான் தொடர்பு இல்லை என்று சொல்லாம், சொல்லக்கேட்டால், இன்றைய சூழலில் அதைப் பட்டியல் போட்டுக் கொடுப்பது என்பது நம்மைக் குறுகிய வட்டத்துக்குள் வைத்துவிடும். காரணம் நாம் வாழும் ஊழியைத் (era) தகவல் புரட்சியின் ஊழியாகக் காண்கின்றனர். இந்தப் போங்கு வளர்ச்சியடைந்துள்ளதால் தகவல் எனும் சொல் தகவல் செய்திப்பரிமாற்றம் மட்டுமல்ல, மாறாக அது ஒரு தகவல் விற்பனை 'Infomercials' [Edward.S.Herman & Robert 1997] என அழைக்கப்படுகின்றது. எடுத்துக்காட்டாக பலவற்றைச் சொல்லலாம். குறிப்பாக, ஊடகங்களில் தயாரித்து வழங்கப் படும் நிகழ்ச்சிகளை வழங்குவோர் பட்டியலில் நிறைய தொழில் நிறுவனங்கள் தங்கள் பொருள்களின் விற்பனையையும் அது தொடர்பான செய்திகளையும் தெரிவிக்கின்றனர். இன்றைய சூழலில் செய்தி வழங்கும் நேரம் கூட பல வியாபார நிறுவனங்கள் கைவசம் உள்ளன. ஆக செய்தியும் விளம்பரம் கலந்து தரப்படுகின்ற தகவல் பரிமாற்றத்திற்கு இன்னுமொரு பெயர்தான், 'Infomercials' அதாவது தகவல் விற்பனை ஆகும்.

எனவே வெறுமனே செய்தி அனுப்புதல், பெறுதல், பேசுதல், பரிமாறிக்கொள்ளுதல் இவை மட்டுமே தொடர்பாகாது. மாறாகத், தொடர்பு என்பது வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டது. மேலும், பரிமாற்றத்தில் நடைபெறும் ஒரு படிமுறை வளர்ச்சியாகும் (Process). தொடர்பு என்பது எப்பொழுதும் ஏதாவது ஒரு நோக்கத்தையும், அர்த்தத்தையும் கொண்டுள்ளது. எடுத்துக்காட்டாக, இருவர் தொடர்பை எடுத்துக் கொண்டோ மானால், ஒருவர் இன்னொருவரிடம் தொடர்புகொள்ளும் போது தான் சொல்ல விரும்பும் செய்தியின்



நோக்கத்தையும், பொருளையும் விளக்க முயல்கிறார். எனவே எந்த ஒரு தொடர்பு நிகழ்ச்சியிலும் அதற்கென ஒரு நோக்கமும் பொருளும் உண்டு. முக்கியமாக மனித இருத்தல் நிலைக்கான அடிப்படை ஆதாரம் தொடர்பாகும். உயிர்வாழ்வதற்கு, உணவு, உடை, இருப்பிடம் எவ்வளவு தேவையானவையோ அது போன்றுதான் தொடர்பும்.

திருமறையின் அடிப்படையில் இதற்கு விளக்கம் கொடுக்க வேண்டுமானால் இறைவார்த்தையைக் குறித்துச் சொல்லலாம். எடுத்துக்காட்டாக "புல் உலரும் பூ உதிரும் கடவுளின் வசனமோ என்றைக்கும் நிலைக்கும்" என்று எசாயா இறைவாக்கினர் சொல்லியதை (எசாயா 40:8) இங்குச் சுட்டலாம்.

கடவுளின் வாக்கு என்றும் உயிருள்ளதாயிருக்கிறது, உண்மையுள்ளதாயிருக்கிறது. இந்த வாக்கின் வெளிப்பாட்டை இயேசு கிறிஸ்துவில் பார்க்கிறோம். அவர் அலகையினால் சோதிக்கப்படுகையில் முதலாவது சொன்னது "மனிதர் உணவினால் மாத்திரமல்ல, கடவுளின் வாயிலிருந்து பிறக்கும் ஒவ்வொரு சொற்களினாலும் பிழைப்பார்" (மத்தேயு 4:4) என்று பதிலுரைக்கின்றார். ஆனால் இன்றைய சூழலில் வெகுதிரள் தொடர்புச் சாதனங்களில் கெட்ட செய்திகளெல்லாம், நல்ல செய்திகளாகத் திரித்துச் சொல்லப்படுகின்றன. இவை வார்த்தை வடிவங்களாக வழங்கப்படுகின்றன. வன்முறையும், பாலியல் விகாரங்களும் மலிந்து காட்டப்படுகின்றன. அவை முறையான வையே என முன்வைக்கப் பெறுகின்றன. எனவே இப்படிப் பட்ட சூழலில் ஓர் இறையியல் மாணவராக தொடர்பு என்பதின் அடிப்படைப் பொருள் பற்றியும், வெகுதிரள் தொடர்புச் சாதனங்களின் பாதிப்புப் பற்றியும் வேறுபடுத்திக் காட்ட வேண்டியதின் கட்டாயத்தை உணர வேண்டியவராயிருக்கிறார். உண்மையை உலகுக்கு எடுத்துரைக்க வேண்டியவராகிறார். இன்றைய சூழலில் கடவுளின் வாக்கு விடுக்கும் அறைகூவல் என்ன என்று சுட்டிக்காட்ட வேண்டியவர்களாயிருக்கின்றோம். உண்மையில், நாம், சொல்லும் நற்செய்தியின் பலனை விளங்க வைக்க வேண்டியவர்களாயிருக்கிறோம்.

* * *

# 3. பொருள் சார்ந்த விளக்கங்கள்

"தொடர்பு ஒரு நிகழ்ச்சி" - Edmund Leach

"தொடர்பு என்பது ஒரு தனிப்பட்ட அல்லது சமுதாயத்தின் படிமுறை வளர்ச்சியைக் குறிக்கிறது. அதாவது சமூக, அறிவியல், பொருளாதார கலாச்சார சமய, கல்வி, மொழி, தகவுகள் ஆகிய நிலைகளினூடே ஒரு குறிப்பிட்ட அமைப்புக்குள்ளிருந்து செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது". - K.E.Eapen

"செய்திகள் வாயிலாக நடக்கும் சமூகப் பரிமாற்றம்" - T.Thayer

"பொதுச் சிந்தனையை வலுப்படுத்தும் ஒரு படிமுறை"

- Mc.Quail

"மனித உறவுகள் உருவாவதற்கும், முன்னேறுவதற்கும் தேவையான ஒரு சிந்தனைப் பகிர்வு, அதனைப் பாதுகாப்பது போன்றவற்றை இயக்கும் செயல்முறையாகும்."

- Cooley

"இசை நாடகம், வரைபடங்கள், கலை நடனம், இன்னும் மனிதச் செயல்கள் அனைத்துமே தொடர்பாகும்."

- Claude Shannon

"தேங்கியிருக்கும் குளத்து நீரில் ஒரு கல்லைப் போட்டவுடன் தொடர் அலைகள் தோன்றி மற்றப் பகுதியை அடைவது போல ஒரு உந்து சக்தி மற்ற இடத்துக்கு மாற்றம் பெறுகிறது என்றக் கருத்தைக் கொண்டது தொடர்பாகும்".

-Terry A Welden

"பூகோள ரீதியாகப் பிரிந்து காணப்படும் நிலப்பரப்புகளிடையே ஒரு தொடர்பை ஏற்படுத்துவது".

-Jurgen



"தொடர்பு நிகழ்ச்சியானது ஒரு சிறப்பான உந்துதலோடு செய்தி வழங்குபவருக்கும், பெற்றுக்கொள்பவருக்கும் இடையே நடக்கும் ஒரு செய்திப் பரிமாற்றம்".

- Theodore M.Newcomb

"தொடர்பு என்பது தரப்பட்டிருக்கிற ஒரு சமுதாயத்தின் சூழலுக்குள் செய்தி அனுப்புபவர்-பெறுபவர் இருவருக்கும் இடையே நடைபெறும் ஒரு படிநிலையாகும்."

- Frank Ex.Dance

"சமூகப் பரிமாற்றத்தில், அடையாளங்கள் வாயிலாக பொருள் புரிந்து கொள்ள முற்படும்போது அங்குத் தொடர்பு நிகழ்ந்ததாக அறியப்படுகின்றது."

- S.Eldridge

"சின்னங்கள், வார்த்தைகள், படங்கள், உருவங்கள் வரைபடங்கள் போன்றவை மூலம், கருத்துக்கள், உணர்வுகள், திறமைகள் இவற்றை மாற்றிக் கொள்வது தொடர்பாகும்".

-Bernard

"தன் புகழை அறிமுகப்படுத்தும் நோக்கில், மற்றவர்களின் கவனத்தை ஈர்க்கச் செய்யும் நடைமுறைச் செயலைத் தொடர்பு என்கிறோம்."

- F.A.Cartie

"செய்தி கொடுப்பவரும், செய்தி பெறுபவரும் இருவரும் ஒருவருக்கொருவர் கருத்தாலும், சிந்தனையாலும் ஒருமித்த பொதுநிலை அடைவதுதான் தொடர்பின் பொருளாகும்."

-H.E.Gulley

---

*குறிப்பு:* பொருள் சார்ந்த விளக்கங்கள் பல்வேறு மூலங்களி லிருந்து தொகுக்கப்பட்டு, "Communication in Theological Education" Edi by CRW David" என்னும் நூலில் கொடுக்கப்பட்டுள்ளது.

# 4. இறையியல் சார்ந்த விளக்கங்கள்

"திருமறையின் கடவுளின் நீதிக்கு மூன்று அம்சங்கள் உண்டு. மூன்றையும் முழுமையாகப் புரிந்து கொள்ளவேண்டும். அவைகள் மன்னிக்கப்பட்ட உள்ளங்கள், மாற்றப்பட்ட சமூகங்கள், புதுப்பிக்கப்பட்ட உறவுகள். இவைகள், ஒன்றினின்று மற்றதைப் பிரித்துப் பார்க்கக்கூடாது. நமது சிந்தனையிலும், பேச்சிலும், செயலிலும் இம்முழுமையைப் பாதுகாத்துக் கொள்வதே சிறப்பான தொடர்பாளருக்கான அடையாளங்கள்".

**-அருள்திரு. முனைவர். சாமுவேல் அமிர்தம்**

"அன்பே கிறிஸ்தவ தொடர்பிற்கு அடிப்படை அன்பற்ற தொடர்பிகள் அறுபட்டுப் போகின்றன".

**-அருள்திரு. முனைவர் ஞானாராபின்சன்**

"வாக்கு அல்லது வார்த்தை மாம்சமானார், மானிடரில் ஒருவர் ஆகிவிட்டார், வார்த்தை வார்த்தைகள் ஆகவில்லை. பலவேளைகளில் நமது தொடர்புகள் வார்த்தைகளாயிருக் கின்றன. நமதுஎண்ணங்கள் வெறும் சொற்களாக வெளி வருகின்றன. ஆனால் கிறிஸ்துவின் வாழ்க்கை நமக்குக் காட்டும் உண்மை, வார்த்தைகள் அல்ல. ஈடுபாடே கடவுளின் தொடர்பு மானிடரில் ஒருவராவதன் மூலம் செயல்பட்டது. எங்கே பங்கேற்பும், ஈடுபாடும், இருக்கிறதோ அங்குதான் தொடர்பு நிகழ முடியும்".

**-அருள்திரு. முனைவர்.தாமஸ் தங்கராசு**

"தொடர்பு ஒரு தொடர் சங்கிலி.ஒன்றையொன்று தொட்டு இறுதியில் அனைவரும் இறைவனிடம் உளவுகொள்ள அது வழி நடத்தும் அப்பொழுது தான் அச்சங்கலி முழுமைபெறும்".

**-அருள்திரு. முனைவர். கம்பர் மாணிக்கம்**



"தொடர்பில் உரையாடல் எனும் கூறு அடங்கியுள்ளது. உரையாடல் உறவை உருவாக்குகிறது. சிந்தனைப் பகிர்வுக்கு பாலமாக அமைகிறது. இதனடிப்படையில் தொடர்பு எனும் சொல்லிற்கு எதிர்சொல் அமைதி அன்று, பாவ இயல்பாகும். எடுத்துக்காட்டாக உறவுகள் வர மறுத்தல், தொடர்பைத் தடை செய்தல், சிதைத்தல் யாவுமே பாவ இயல்பின் வெளிப்பாடாகும். இத்தீமையைச் செய்யும் தீயோன் திருமறையில் பொய்யன் எனப்படுவான். எனவே பொய்மையான யாவும் உண்மைத் தொடர்பு அல்ல. இறையியல் வழியில் தொடர்பென்பது இறைவனோடும், பிறரோடும் சரியான உறவைக் கொள்வதாகும். இது சுதந்திரமும், சமத்துவமும் மதிப்பும் மரியாதையும் உடைய உறவாகும்".

**- அருள்திரு.அறிவர். தியான்சந்த் கார்**

"இன்றைக்குள்ள வெகுதிரள் தொடர்புச் சாதனங்கள் இறையரசின் தகவுகளுக்கு எதிரான தகவுகளை நியாயப் படுத்துகின்றன. கிராமியக் கதைகள், கலை வடிவங்கள், சொல் வழக்குகள், மரபுகள், பாட்டிக் கதைகள் இவை மூலம் தக்கவைக்கப்பட்ட மக்கள் கலாச்சாரம், இவையாவும், தற்கால (சந்தைப் பொருளாதாரத்தை மையப்படுத்திய) உறவு மாதிரிகளுக்கு ஏற்றாற்போல மாற்றியமைக்கப்படுகின்றன. நவீனமயமான இவ்வகை அந்திக்கிறிஸ்துக்களைப் பற்றிய திறனாய்வும் விழிப்புணர்வும் தேவைப்படுகின்றது".

**- அருள்திரு. அறிவர். தியான்சந்த் கார்**

"இயேசுவின் திருப்பணி பலஸ்தீனாவில் மட்டுமல்லாது பிற நாடுகளிலும் சிறப்பாக நிகழ்ந்தது. ஒரு குழுவாக, குழுவின் மூலம் இயேசு பணியாற்றினார். தமது குழுவிலிருந்த உறுப்பினர் களுக்கு அன்பின் தலைவராகச் செயல்பட்டார். அதுவே அவருடைய குழு சிறப்பான வெற்றி பெறக் காரணமாயிருந்தது. குழுவின் மூலம் செயல்படுவது வலிமையான தொடர்பாகும்".

**-அருள்திரு.அகஸ்டின்**

என்றாலும் "தொடர்பு என்பது இயேசு செய்து காட்டின அன்புறவேயாம். அதனால் கதை மட்டுமல்ல, பேசுவது உணர்ச்சி வயப்படுவது, நம்பிக்கை வைப்பது, சடங்கு செய்வது, செயல்படுவது, ஏன் அழுவதும் கூட இயேசு காட்டிய அன்புறவாக இருக்கவேண்டும். அதுவே தொடர்பு இறையியல்".

- அருள்திரு.தியாப்பிலஸ் அப்பாவு (பரட்டை)

"இசை பல்வேறு சமயத்தவரை ஒருங்கிணைக்கிறது. இந்த இசையுடன் இறைவன் உறவாடுகிறார். இசைக்கு சுரங்கள் அடிப்படையாக இருப்பது போல இறைவன் வாழ்க்கை முழுமைக்கும் உட்பொருளாக, உயிர்க்கருவூலமாக இருக்கிறார்.. இசை ஏற்படுத்தும் சமய நல்லிணக்கத்தில் இறைவனும் இணைகிறார் என்பதை ஒரிறை நம்பிக்கையுடையவர்கள் ஒத்துக் கொள்வதில் நியாயமானத் தடையேதும் இருப்பதாகத் தெரியவில்லை".

-அருள்திரு. முனைவர். இசுரேயல் செல்வநாயகம்

"கடவுள் இவ்வுலகத்தோடு தன்னைத் தொடர்புபடுத்திக் கொள்வதின் உள்ளார்ந்த, அதன் மறைபொருளின் சாரத்தை, பல்வேறு காலகட்டங்களில் செயல்படுத்திக் கொண்டே யிருக்கும் ஒப்புயர்வற்ற தொடர்பின் சமயமாகும்".

- Avery Dulles

"நாம் கடவுளின் சாயலில் படைக்கப்பட்டிருப்பதனால் நம்மால் திரித்துவக் கடவுளோடு உரையாட முடிகிறது. இவ்வகை உரையாடல்தான் மனிதத் தொடர்புக்கு அடிப்படையாக இருக்கிறது".

- Carlo.Valle

"கடவுள், பற்றுறுதி, உலகைப் பற்றிய கண்ணோட்டம் இவைகளைப் பற்றிச் சொல்லுவதும், சான்று பகருவதும், சாட்சியாக வாழ்வதும், நற்செய்தியை எடுத்துரைத்தலும் நடைமுறை வாழ்க்கையாக கொண்டுள்ளதுதான் கிறிஸ்தவம்.



இச்சூழலில், மேற்கூறியவற்றை பொது அனுபவமாக,பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட உறவின் வெளிப்பாடாக, பகிர்ந்து கொள்வதே கிறிஸ்தவத் தொடர்பாகும்".

- வில்லியம் ஃபோர்

"வளர்ந்து வரும் நவீன உலகில், திருச்சபை உண்மையிலேயே, தொடர்புகொள்ளும் ஒன்றாக இருக்க வேண்டுமெனில், நிச்சயமாக, அதன் ஆயர்களும், சபை மக்களும், ஏதாவது ஒருவகையில் தொடர்பியல் கல்வி கற்றே ஆகவேண்டும். இது வெறும், ஓரிரு ஊடகக் கல்வியாக மட்டும் அமைந்துவிடக் கூடாது. அதற்கும் மேலானதாக இருக்கவேண்டும். குறிப்பாக ஆயர்களின் பாடத் திட்டங்களில் வெகுதிரள் தொடர்பு சாதனங்களின் மொழி மற்றும் கலாச்சாரத் தகவுகளைப் பற்றிய தெளிவும், புரிதலும், விழிப்புணர்வும் கொண்ட கல்வி அவசியம்".

- Paul A.Soukup

"கடவுள் இவ்வுலகத்தோடு தம்மைத் தொடர்புபடுத்திக் கொண்டிருப்பது, திருச்சபை வாழ்வின் வெளிச்சத்தில், எந்தக் காலத்திலும், எவ்வகைக் கலாச்சாரத்திலும் வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது. தூய ஆவியின் வழிநடத்துதலில் கடவுளின் வெளிப்பாட்டையும்,இயேசுகிறிஸ்துவின் மனுவுருவேற்பையும் குறித்து சாட்சியாக வாழ்வதே இறை தொடர்பாகும். இது திருச்சபையின் "ஐக்கியத்திலும்" "செயல்பாட்டிலும்" வெளிப் பட்டுக் கொண்டேயிருக்க வேண்டும்".

- Franz-Josef-Eillers-SVD

"கரிசனையுள்ள மனுக்குலத்தை உருவாக்குகின்ற நிலை நிறுத்துகின்ற, விடுதலையளிக்கின்ற, வரலாற்றில் ஈடுபட்டு செயலாற்றுகின்ற கடவுளுக்கு, ஒப்படைப்புள்ள எந்த ஒரு கிறிஸ்தவரும், இன்றைக்குள்ள தொடர்பியல் சூழலில் தம்மை ஈடுபடுத்திக் கொள்வர்".

- Carlos A.Valle

"தொடர்பு வாழ்வின் அடிப்படையாகும். ஆன்மிக வாழ்க்கையும் உலக வாழ்க்கையும் பல்வேறு வகையானத் தொடர்பில் நம்முடைய இருத்தல் நிலையை கட்டமைக்கின்றது.

கடவுள், மனுக்குலத்திற்குத் தம்மை வெளிப்படுத்து வதும் இவ்வகைத் தொடர்பின் மூலமேயாகும். கம்யூனிகேசியோ என்கின்றச் சொல் ஆதித்திருச்சபைகளில், மும்மை குறித்த சொல்லுக்கு பயன்படுத்தப்பட்டது. இயேசுகிறிஸ்தும் கடவுளின் தன்மைகள் வெளிப்பட்டதையும் அது திருச்சபையாகிய ஊடகத்தின் மூலம் உலகிற்குத் தன் படைப்புத்திறன் மூலம் வெளிப்பட வேண்டும் என்பதுவே இறை தொடர்பாகும்.. அச்சுத்துறை மூலம் நல்ல செய்தியை மக்களுக்குக் கொண்டு செல்லுதல் திருச்சபையின் முக்கியமான இறையியல் சார்ந்த தொடர்புப் பணியாகும்".

- **தயானந்தன் பிரான்சிஸ்**

* * *



# 5. தொடர்பு இயங்கும் முறை

தொடர்பு இயங்கும் முறையையும், அதன் படிநிலை வளர்ச்சியையும் அறிந்து கொள்ள அதிலுள்ள கூறுபாடுகளை அறிந்து கொள்ள வேண்டும். ஒரு செய்திமூலம் ஓர் இடத்தி லிருந்து இன்னுமோர் இடத்திற்கு எவ்வாறு சென்றடைகின்றது என்பதை விளக்கிக்கொள்ள, ஓரிரு கோட்பாடுகளும், மாதிரிகளும் பயன்படுத்தப்படுகின்றன. அதனடிப்படையில் தான், தொடர்பு இயங்கும் முறைமையைப் புரிந்து கொள்ள இயலும். எடுத்துக் காட்டாக, பெர்லோ மாதிரி விளக்கப்படம் (1960 /Berlo's Model of Communication or SMCR Model of Communication (1960) ஒன்றைப் பயன்படுத்துவதின் மூலம், தொடர்பு இயங்கும் முறையை அதன்படிமுறை வளர்ச்சியைப் (Process of Communication) புரிந்து கொள்ள இயலும். பெர்லோ மாதிரியில் நான்கு முதன்மைக் கூறுபாடுகள் உள்ளன. அவையாவன

அனுப்புநர் ⟶ செய்தி ⟶ ஊடகம் ⟶ பெறுநர்
(Sender) (Message) (Channel) (Reciver) (SMCR)

இந்த நான்கு (SMCR) கூறுபாடுகளிலுள்ள உள்ளடக்கத்தை நாம் புரிந்து கொண்டால் தான் செய்திப் பரிமாற்றத்தையும் புரிந்து கொள்ள இயலும். பின்வரும் அட்டவணை அதைப் புரிந்துக் கொள்ள உதவியாக இருக்கிறது.

| செய்தி மூலம் | செய்தி | ஊடகம் | பெறுநர் |
|---|---|---|---|
| திறமை | கூறுபாடுகள் | பார்த்தல் | திறமை |
| மனப்பான்மை | அமைப்புகள் | கேட்டல் | மனப்பான்மை |
| அறிவுக்கூர்மை | அணுகும்விதம் | தொடுதல் | அறிவுக்கூர்மை |
| சமுதாய அமைப்பு | உள்ளடக்கம் | நுகர்தல் | சமுதாய அமைப்பு |
| கலாச்சாரப் பாதிப்புகள் | குறியீடு | சுவைத்தல் | கலாச்சாரப் பாதிப்புகள் |

[மூலம் : A Dictionary of Communication and Media Studies 1991]

## I. அனுப்புநர்

அனுப்புநர் எனும் சொல், ஆதிகர்த்தா / செய்திமூலம் / தொடர்பாளர் ஆகிய சொற்கள் வழியாகவும் புரிந்து கொள்ளப் படுகின்றது. செய்திமூலம் என்பது ஒரு நபர் / குழுவினர் / நிறுவனம் / குறியீடுகள் / அடையாளங்கள் என்று எதுவாக வேண்டுமானாலும் இருக்காலம். என்றாலும் ஒருசிறப்பான தொடர்பாளர் பின்வரும் குறிப்புகளை மனத்தில் கொள்வது நல்லது. முதலாவதாக ஏன் செய்தி அனுப்ப வேண்டும்? பிறகு யாருக்கு இந்தச் செய்தி சென்று சேருகிறது? அதன் பிறகு எதன்மூலம் இந்தச் செய்தி சென்று சேருகிறது? என்பதோடு நின்றுவிடாமல் எப்படி இதை அணுகலாம்? என்று தீர்மானிக்கிற பொறுப்புச் செய்தி அனுப்புநர் வசமிருக்கிறது. செய்தியாளர் ஒரு செய்தியை அனுப்புபவராகவும், பெறுபவராகவும் இருக்கிறார். செய்தி மூலமானது முடிவெடுக்கின்ற நிலையில் இருக்கிறபடியால், தொடர்பாளர் சரியான தகவலையுடைய வராகவும் இருக்க வேண்டும். ஒரு சிறப்பான தொடர்பாளர்.

- ***திறமையுடையவராக இருக்க வேண்டும்*** : தொடர்பு முறைகள் செய்தி பெறுபவரின் தேவை, பல்வெறு ஊடகங்களைப் பயன்படுத்துதல் போன்றவற்றில் திறமைசாலியாக இருத்தல் வேண்டும்.
- ***சிறந்த மனப்பான்மையுடையவராக இருக்க வேண்டும்:*** தொடர்பாளரின் தகவுகள், கண்ணோட்டம், மனப்பான்மை, கருத்துகள், கொள்கைகள் இவற்றில் தெளிவு தேவை.
- ***அறிவுக்கூர்மையுடையவராக இருக்க வேண்டும்*** : தொடர்பு படி முறை வளர்ச்சி (Process), மக்களின் / மனநிலை, தன்மைகள், செய்தி - செய்தியை அணுகும் முறை இவற்றில் அறிவுத்திறமையுடையவராக இருக்க வேண்டும்.
- ***சமுதாயப் பின்னணியம்*** : சமூக, அரசியல் பண்பாட்டுத் தகவுகளில் தேர்வு பெற்றவராகவும், சிறப்பான கல்வித் தகுதியுடையவராகவும் அமைந்திருத்தல் இன்றியமையாதது.



- ***பண்பாட்டுப் பாதிப்புகள்*** : பண்பாடு, நாகரிகம், சமயம், இவைகளுக்கும் மேலாக, ஒரு சிறப்பானத் தொடர்பாளர் எதிலும் ஆர்வமுடையவராக இருக்க வேண்டும். குறிப்பாக, மக்கள், தகவல் பரிமாற்றம் / பரப்புதல் / மாற்றம் கொண்டுவருதல்/ போன்றவற்றில் ஆர்வமுடையவராக இருக்க வேண்டும்.

உண்மையில் இப்படிப்பட்ட ஓர் அணுகுமுறை தேவை தானா? ஓர் இறையியல் மாணவருக்கு இவ்வளவு நுணுக்கங்கள் தேவைதானா? என்ற கேள்வி எழும்புவது இயல்பானதே! "நீங்கள் புறப்பட்டுப் போய் எல்லா மக்களையும் சீடராக்குங்கள். தந்தை, மகன், தூயாவியார் பெயரால் அவர்களுக்கு திருமுழுக்குக் கொடுத்து நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்குக் கற்பியுங்கள். இதோ உலக முடிவு வரை எந்நாளும் உங்களுடனே கூட இருக்கிறேன்" என்றார் (மத்தேயு 28:19.20). ஆக நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் இந்தக் கட்டளையை நிறைவேற்ற சிறப்புத் தகுதிகள் தேவைதானா? இஸ்ரயேலை அடிமைதனத்தி லிருந்து மீட்டுவந்த மோசே முதல் தொடக்கத் திருச்சபை யிலிருந்த அடிமட்ட ஊழியர்கள் வரை பலர், குறைபாடுள்ளவர் களாகவே இருந்திருக்கின்றனர்.

கடவுள் மீது வைத்திருந்த பற்றுறுதியின் அடிப்படையி லேயே அவர்கள் சிறப்புத் தகுதியுடையவர்களாகத் தேர்ந்தெடுக் கப்பட்டனர், என்கின்ற லூதரின் கோட்பாடு அடிப்படையில் கேள்வி எழுப்புகிறவர்களும் உண்டு. உண்மையில் இவ்வகை சிறப்புத் திறமைகள் தேவைதானா என்கின்ற வினா ஒருபுற மிருக்க, சில அடிப்படை விளக்கங்களைப் பெற்றுக்கொள்வதும் தேவையானதாகும்.

எடுத்துக்காட்டாக, ஒரு செய்திமூலமானது.

வார்த்தை வழியாக 7 %(ஏழு விழுக்காடும்). அங்க அசைவுகள் மற்றும் மொழி வழியாக 58% (ஐம்பத்தி எட்டு விழுக்காடும்) குரல்வளம் வழியாக 35% முப்பத்து ஐந்து விழுக்காடும் சென்றடைவதாக நம்பப்படுகின்றது. இன்னுமொரு கோட்பாடு ஐம்புலன்கள் மூலம் ஒரு செய்தி எவ்வாறு உள்வாங்கப்படுகின்றது. என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது.

எடுத்துக்காட்டாக.

| | | |
|---|---|---|
| சுவைத்தல் மூலம் | 9% | (ஒன்பது விழுக்காடு) |
| தொடுதல் மூலம் | 7% | (ஏழு விழுக்காடு) |
| கேட்டல் மூலம் | 1% | (ஒரு விழுக்காடு) |
| கண்டுணர்தல் மூலம் | 83% | (எண்பத்து மூன்று விழுக்காடு) |

உள்வாங்கப்படுகின்றது. எனவே ஒரு சாதாரண தகவலாக இருந்தாலும் சரி, அது கருகலான தத்துவமாக இருந்தாலும் சரி, அதனை விளங்க வைப்பதில், புரிய வைப்பதில் முழுமையான புரிதலைக் கொண்டுவந்து பொது நிலையை, அடைய வைப்பதில் பல்வேறு திறமைகளை வளர்த்துக் கொள்வதும் தேவையாகிறது. அதேவேளை, ஒரு நபர் தம்முடைய ஈடுபாட்டி னாலும், செயல்திறனாலும், தாம் சொல்லவந்தச் செய்தியை பங்கேற்பு முறை சார்ந்து விளங்க முயல்கையில் புரிதல் ஏற்பட்டு, பொதுவான சிந்தனை வலுப்பெறுவதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதும் புரிகிறதல்லவா? அதுபோலத்தான் இறைமக்களும், இறைப்பணியாளர்களும் கூட செயல் பட்டார்கள். தங்களுக்கிருந்த தொடர்புத் தடைகளை மேற்கொண்டனர்.

நாம் நம்புகின்ற இயேசுகிறிஸ்துவை மற்றவர்களுக்கு முழுமையாகப் புரிய வைப்பதில் நமக்குப்பல தடைகள், இடையூறுகள் இருப்பினும் ஒரு புரிதலோடுகூட, ஒரு கண்ணோட்டத்தோடு கூட இயேசுவைக் காட்ட வேண்டும். அதை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும். நற்செய்தி ஆசிரியர்களும் தாங்கள் இயேசுவைப் புரிந்து கொண்ட வகையில் இயேசுவைப் பற்றிய உண்மைகளை உலகிற்கு எடுத்துக் காட்டுவதில் சிறப்புக் கவனம் செலுத்தினர். அவ்வகையில் நம்முடைய முயற்சிகளும், பலவற்றை மனத்தில் கொண்டு செயல்முறைப்படுத்துவதாக அமைய வேண்டும்.

## II. செய்தி

ஒரு செய்தி நாம் ஏற்கனவே குறித்துள்ள இலக்கு மக்களின் கவனத்தை ஈர்க்கக் கூடியதாக இருக்க வேண்டும். செய்தியைப் பெற்றுக் கொண்டவர்கள் பயன்படுத்தும் பழக்கமான சில அடையாளச் சொற்களைப் பயன்படுத்த வேண்டும். தேவைகளைச் சந்திப்பதாக இருக்க வேண்டும். தேவைகள் சந்திக்கப்பட



சில சரியான வழிமுறைகளை முன்மொழிவதாக இருக்க வேண்டும். செய்தியைக் கேட்பவர்கள் சரியான பதிலுரை கொடுக்கும் வகையில் செயல்படத் தூண்டும் வகையில் அமைந்திருக்க வேண்டும். அதுமட்டுமல்லாது 'செய்தி' என்பதின் முழுத்தன்மையை உயர்ந்திருத்தலும் அவசியம். எடுத்துக் காட்டாக, ஒவ்வொரு செய்தியும் ஒரு தகவல் தொகுப்பாக இருக்கிறது. இந்தத் தகவல் தொகுப்பானது சில கூறுபாடுகளை உள்ளடக்கியதாக இருக்கிறது. அதற்கென ஓரிரு அமைப்பு களைத் தாங்கி நிற்கிறது.

செய்தி கொடுப்பவர் அதை எவ்வாறு கொடுக்கிறார் என்பது அந்தச் செய்தியை அவர் அணுகிய விதத்தைக் காட்டுகிறது. எந்த ஒரு செய்தித் தொகுப்பும் ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள்ளே சில உள்ளடக்கங்களையுடையதாக இருக்கிறது. இந்த உள்ளடக்கங்கள் ஏற்கனவே புரிந்துக் கொள்ளப்பட்டுள்ளன. ஓரிரு குறியீடுகளால் பரிமாறிக் கொள்ளப்படுகின்றது. சரியான செய்தி சரியான தூண்டுதல் அளிக்க வேண்டும். இவை செய்தியின் பொருத்தம் பயன்பாடு, நம்பகத்தன்மை, ஆர்வம், இலாபம், முழுதன்மை மதிப்பு இவைகளையும் கருத்தில் கொண்டதாக இருக்கவேண்டும்.

இறையியல் கற்போர் அல்லது தொடர்பியல் கற்கின்ற இறையியலாக்க மாணவர்கள், தங்களுடைய பார்வையிலிருந்து நோக்குகையில் தொடர்பியலை இறையுறவுச் சார்ந்து பார்க் கின்றனர். அதாவது தொடர்புக்கு இறையியல் சார்ந்த விளக்கங்கள் கொடுக்க முன்வருகின்றனர். கடவுளை ஒரு தொடர்பாளராகவும், கடவுளின் தொடர் செயல்பாட்டினால் மனுக்குலத்தோடு தொடர்ந்து உறவு கொண்டுள்ளார் என்பதையும் இறைமகன் இயேசு கிறிஸ்துவை இந்த உலகிற்கு அருளியதே இந்த உலகத்தோடு கடவுள் ஏற்படுத்திக்கொண்ட முழுமையான தொடர்புச் செயலாகப் பார்க்கின்றனர். வாக்கு மனிதர் ஆனார். (யோவான் 1:14) என்பதின் அடிப்படை இறையியலைப் புரிந்து கொள்வதற்குத் தொடர்பியல் கல்வி மிகவும் உதவியாக இருக்கும் என்று நம்புகின்றனர்.

நீங்கள் சொல்வது உண்மையானால், உண்மைச் செய்தியை தாங்கிவந்த இயேசுகிறிஸ்துவுக்கு ஏன் அவ்வளவு பெரிய தண்டனை வழங்கவேண்டும். ஓரங்கட்டப்பட்ட, ஒடுக்கப் பட்ட, பின்தங்கிய நிலையிலிருந்த, இருளிலிருந்த, விளிம்பிற்குத் தள்ளப்பட்ட, தங்களுக்காக பேச, குரலெழுப்ப இயலாத மக்கள் வாழ்வுரிமையை மீண்டும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்கின்ற இறையரசுக்கான தகவுகளைக் கொண்ட போதனையைத் தாங்கிவந்த இயேசுகிறிஸ்துவை ஏன் சிலுவையில் அறைந் தார்கள். அவருக்கு மக்கள் (Audience) பற்றி தெளிவில்லையா? திறமையில்லையா? அல்லது தாம் சொல்ல வந்த செய்தியில்தான் உண்மையில்லையா? என்கின்ற வினாக்கள் எழும்புவதும் இயல்பானதே! ஆனால் இயேசுவின் வெற்றி அவரின் உயிர்த் தெழுதலில் இருக்கிறது (தியான்சந்த் கார்) எனப் பார்க்கிறோம்.

வாழ்வுரிமையை மறுக்கும் அதிகாரங்களோடு அவர் நடத்திய போராட்டங்கள், அடிமை நிலையிலிருந்தவர்களோடு அவர் தம்மை ஒன்றுபடுத்திக் கொண்டது, எவ்வளவு நிந்திக்கப்பட்டும் அடிக்கப்படுகின்ற ஆட்டுக்குட்டியைப்போல அமைதியாக நின்றது, இவையனைத்தும் இயேசுகிறிஸ்துவின் ஆளுமையின் பரிமாணங்கள். அந்த பரிமாணங்களைப் புரிந்து கொள்ளாத மக்கள் கூட்டமும் உயிர்தெழுதல் மீது நம்பிக்கையற்ற சமய தலைவர்களும் அவரைச் சிலுவையிலறைந்தனர்.

## III. ஊடகம்

ஊடகம் என்பவை செய்தியைத் தாங்கி வருபவை. இன்னொரு வகையில் சொல்ல வேண்டுமானால் செய்தியைக் கொண்டு செல்லும் வாகனம் எனலாம். தகவல் போங்கினை வழிநடத்துபவை, குறியீடுகளை மாற்றிக்கொள்ள தெரிந்து கொள்ளப்பட்ட வழி என்றும் சொல்லலாம். அடிப்படையில் ஐம்புலன்களால், ஐம்புலன்களையும் பாதிக்கக் கூடியதாய் இருக்கிறது. ஆங்கிலத்தில் சேனல் என்றும் மீடியம் (Medium) என்றும் அறிந்து கொள்ளப்படுகின்றது. செய்தி கொடுப்பவர் அல்லது செய்தி மூலம்/ தகவல் மூலம் எனப்படுகின்றது.

சொல்ல விரும்பும் அல்லது கொடுக்கவிருக்கும் தகவல்களை ஏதாவது ஓர் ஊடகத்தின் வழியே சொல்லியாக வேண்டியிருக்கிறது. மனிதத் தொடர்பில் இது எளிதில்



நடைபெறக் கூடிய ஒன்று. ஒருவர் பேசும்போது ஐம்புலன் களையும் பயன்படுத்தி, சொற்கள் வழியாகவோ செய்கை வழியாகவோ தகவல்களை கொடுக்கும் போது தொடர்புக்கான ஊடகங்களாக ஐம்புலன்கள் செயல்படுகிறதைக் கண்டு கொள்ள வேண்டும்.

பொதுவாக ஊடகம் என்பதை ஜான் ஃபிஸ்கே (John Fiske 1982) மூன்று வகையாகப் பிரிக்கின்றார்.

**1. முன்னிலைப்படுத்துகை ஊடகம்** (Presentational Media):

முகபாவனை, உறுப்பு அசைவுகள் போன்ற ஊடகங்கள் செய்தி கொடுப்பவர் யார் என்றும் சொல்லிவிடும். செய்தி கொடுப்பவரின் கருதுகோலும் அதன் உடனடித் தாக்கமும் செய்தியோடு இணைந்து வருவதற்கு வாய்ப்பிருக்கின்றது.

**2. கருத்துருவாக்க ஊடகம்** (Representational Media) :

ஓவியம், வரைபடம், சிற்பம், கட்டிடக்கலை, நடனம், நாடகம், கவிதை கட்டுரை திரைப்படங்கள் வரை உள்ள அனைத்துக் கலைகளுமே, இந்த இரண்டாவது வகையைச் சேரும். இவ்வகைப் படைப்புகள் உருவாக்கியவர்களிடமிருந்து பிரிந்து செயல்படும், பொருள் பிரிதலும், பொருள்புரிதலில் எழும் கருத்தாக்கங்களும், பார்ப்பவர், படிப்பவர்களின் நிலையி லிருந்து புரிந்து கொள்ளப்படும்..

**3. கருவி ஊடகம்** (Machanical Media) :

மின்னனு தொடர்புச் சாதனங்கள் அனைத்தும் இதில் அடங்கும். இவைகள் செய்தி அளிப்பவர், அதனை தயாரித்தவர், அதற்காக செலவு செய்து பணம் போட்டவர், இப்படிப் பல நிலைகளிலிருப்பவரின் செய்திகளை நமக்குக் கொடுத்துக் கொண்டிருக்கும். எனவே ஊடகம் என்றால் எத்தகைய ஊடகத்தைப் பற்றி பேசுகிறோம். தன்மைகள் என்னென்ன என்கின்ற புரிதலோடு பேசுதல் வேண்டும்.

இறையியல் கல்லூரியில் இருப்பவர்களுக்கும், திருப்பணி யிலுள்ளவர்களுக்கும் இருக்கிற பெரிய சோதனை என்ன வென்றால் நற்செய்திப் பணிக்கு இவ்வகை ஊடகங்களைக் குறிப்பாக, மின்னனு தொடர்புச் சாதனங்களை எந்த அளவுக்குப்

பயன்படுத்தலாம்? பயன்படுத்தக்கூடாது என்கின்ற இழுவை நிலையாகும். குறிப்பாக பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் பல அறிவியல் தொழில் நுட்பங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. எடுத்துக்காட்டாக 1804 இல் தொலை வரியும் (தந்தி) 1877 இல் திரைப்படமும் 1921 இல் வானொலியும், தொலைக்காட்சிப் பெட்டியும், 1947 இல் மின்பிம்பப் பெருக்கியும் 1963 இல் செயற்கைக்கோளும் கண்டுபிடிக்கப்பட்டதுமன்றி தொடர்பியலும் நாளுக்கு நாள் முன்னேறிக் கொண்டே வந்தது.

அறிவியல் பூர்வமான கண்டுபிடிப்புகளைத் தொடக்கத்தில் எதிர்த்த திருச்சபைத் தலைவர்கள் பின்னால் அதையே ஆதரிக்கவும் தொடங்கிவிட்டனர். குறிப்பாக 1921இல் வானொலியைக் கண்டுபிடித்தபோது இது கூடாது, இது உலகத்தோடொன்றியது, என்றெல்லாம் எதிர்த்த திருச்சபைத் தலைவர்கள் நாளடைவில் வானொலி மூலம் நற்செய்தி ஊழியம் என்று தொடங்கிவிட்டனர். அருள்திரு. அய்.எம்.ஹார்கெற் (I.M.Hargett)*(1930)* அவர்கள் "வானொலி கடவுளின் அருள் கொடை" என்று அருளுரையாற்றத் தொடங்கிவிட்டார். ஜான். ஆர்.ரைஸ் (John R.Rice 1938)என்னும் இன்னுமோர் அருட்பணியாளர் ஹாலிவுட் திரைப்படங்கள் 'Unmitigated Curse' 'ஒட்டுமொத்த சாபம்' என்றார்.

ஆனால் 1950களில் உருவான அருட்பணியாளர்கள் தொலைக்காட்சியையும், வானொலியையும் சமய ஒலிபரப்புக் கருவிகளாகவே பயன்படுத்திக் கொண்டனர். பில்லிகிரகாமின் (Billy Graham) நிகழ்ச்சிகளை இதற்கு எடுத்துக்காட்டாகச் சொல்லலாம்.

இதே போன்று தற்போது இந்திய தொலைக்காட்சிகளில் குறிப்பாக உள்ளூர் தொலைக்காட்சிகளிலும் இவ்வகை ஒளிபரப்புதல்கள் மலிவாகியிருக்கின்றன. ஆக ஓர் இறையியலாளர் ஊடகம் பற்றிய தெளிவுடையவராயிருந்தால் மட்டும் போதாது. ஊடகங்களை எந்த அளவுக்கு அருட்பணியில் பயன்படுத்திக் கொள்ளலாம் என்கின்ற அறிவும் உரையவராக இருத்தல் வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக ஊடகங்கள் ஏற்படுத்தும் பாதிப்பைக் குறித்து சுட்டிக்காட்டுபவராகவும்,



அதற்காக குரல் எழுப்புபவராகவும் இருக்க வேண்டும். இதைச் சரியாக நடப்பிக்க வேண்டும் என்பதற்காகத்தான் இறையியல் கல்லூரிகளில் தொடர்பியல் பாடம் கற்றுத்தர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு அவை இன்று செயல் வடிவங்களாகியுள்ளன.

இறையியல் மொழிநடையில் சொல்ல வேண்டுமானால் கடவுளைப்பற்றிய கல்வியை இறையியல் என்கின்றோம் இந்த இறையியல், மக்கள் வாழ்வு சார்ந்தது, மக்கள் வாழ்வு, தொடர்பு (உறவு) சார்ந்ததாக இருக்கிறது, தொடர்பு, பல்வேறு மூலங்கள் வழியாக (எடுத்துக்காட்டாக), இயற்கையின் ஊடாக அதன்பின் மனிதர்கள் ஊடாக இறுதியாக இயேசுவின் மூலம் உள்ளுணர்த்தப்படும், கடவுளின் வெளிப்பாடு சார்ந்ததாக இருக்கிறது.

இன்னுமொரு கோணத்திலிருந்து பார்க்கும்போது, திருமறை கடவுளின் தொடர்புச்சாதனம், மீட்பின் வரலாற்றை மனுக்குலத்துக்கு நினைவுபடுத்தும் கதைகள் ஏராளம் அதில் உண்டு. சங்கீதங்களில் (திருப்பாடல்கள்) காணப்படும் கவிதை மரபு கடவுளுக்கும் மனுக்குலத்திற்கும் இடையில் உள்ள ஆன்மிக உறவைப் பலப்படுத்துகின்றது. இறைவாக்கினரின் எழுச்சிமிக்க உரைகளும் அறைகூவல்களும், பத்துக் கற்பனைகளைப் போன்று நம்மை நெறிப்படுத்துகின்றன.

கடவுளுக்குள் இருக்கும் உண்மை, வார்த்தை வடிவமாகி நீதியின் குரலாய் இறைவாக்குகளாய் வெளிவந்தது. கடவுளுக்கும் மனுக்குலத்திற்கும் இடையே உள்ள உன்னத உறவின் உயரிய செயலே இயேசுவின் பிறப்பாகும். இந்த உறவு படைப்பில் தொடங்கி இயேசுவில் வெளிப்பட்டு நம் நம்பிக்கையில், செயல்பாடுகளில் எதிரொலிக்க வேண்டும் என்ற இயக்கத்தைக் கொண்டதுதான் உண்மையான கிறிஸ்தவத் தொடர்பாகும். ஆகையினால் இந்தத் தொடர்பு பாடுபடும் மனுக்குலத்தின் மீது ஏற்படுத்துகின்ற பாதிப்பை அளக்கும் ஒரே அளவுகோல் நீதியும் சமாதானமும் இணைந்த நற்செய்தியாகும்.

## IV. பெறுநர்

செய்தி அனுப்புபவருக்கு எந்தெந்தப் பின்னணியம் இருப்பதாய் கூறுபாடுகள் தெரிவிக்கின்றனவோ, அதே போன்று தான் பெறுநருக்கும் ஓரிரு பின்னணியங்கள் இருக்கின்றன. செய்தி கொடுப்பவர் அல்லது தொடர்பாளர் ஒரு தனி நபராக/ குழுவாக /நிறுவனமாக/ குறியீடாக இருப்பதைப் போன்றே செய்தி பெறுபவரும் அல்லது செய்தி சென்று சேருமிடம் ஒரு தனிநபராக / குழுவாக / குறியீடாக / இருக்க வேண்டும்.

## V. பின்னூட்டம்

பின்னூட்டம் என்பது ஆங்கிலத்தில் (feed back) என்று அழைக்கப்படுகின்றது. உண்மையில் முன்னால் அறிவிக்கப்பட்ட பெர்லோ மாதிரியில் பின்னூட்டம் என்ற கூறுபாடும், பாதிப்பு என்ற கூறுபாடும் இருக்கவில்லை. தொடர்பு இயங்கும் முறைமையைப் புரிந்து கொள்ள இவர் காட்டிய விளக்கப்பாடம் ஒரு நேர்கோட்டில் காட்டபட்டுள்ள நேர்கோடு மாதிரி (Leanear model) அமைக்கப்படுகின்றது. காரணம் ஒரு மூலத்திலிருந்து இன்னுமோர் இடத்தைச் சென்றடையும் நேர்கோட்டு வரிசையில் உள்ளதால், செய்தியானது அப்படி நேரே சென்றடையும் முறை பற்றி மட்டும் விளக்கம் கொடுத்துள்ளார். பின்னூட்டமும், பாதிப்பும் குறித்து இங்கு விளக்கவில்லை என்கின்ற திறனாய்வும் சொல்லப்படுகின்றது. எனவே பின்னூட்டம் மற்றும் பாதிப்பு பற்றிய தெளிவும் தேவைப்படுகின்றது.

பின்னூட்டம் என்பது பெற்றுக்கொண்ட செய்திக்குப் பதிலுரை வழங்குதல் என சொல்லலாம். இது வார்த்தை வழியாக அல்லது செய்கை வழியாகவும், குறியீடுகள் வழியாகவும் தரப்படுகின்றன. எடுத்துக்காட்டாக தொடக்க நூலில் சொல்லப் பட்டுள்ள நோவாவின் வரலாற்று நிகழ்ச்சிகளின் மூலம் சொல்லப்படும் உண்மையை ஆராய்வதின் மூலம் பின்னூட்டம் என்றால் என்ன என்று புரிந்து கொள்ள முயல்வோம். தொடக்கத்தில் மனுமக்களின் மீறுதல்கள் என்பது கடவுளுக்கு மனுமக்களின் செயல்பாடுகள் மூலம் கிடைக்கின்ற செய்தி, எனவே "மனிதரின் தீமை பூமியிலே பெருகிற்றென்றும் அவன் இதயச் சிந்தனை களும் உத்தேசங்களும் எப்போதும் தீமைகளே



என்றும் கர்த்தர் கண்டார்" (தொ.நூ.6:5) எனவே மனுமக்களை உருவாக்கியதற்காக கடவுள் வேதனைப்பட்டார் எனப் படிக்கின்றோம்.

மனுமக்கள் கடவுளின் இந்த வேதனையை பின்னூட்ட மாக உணரவில்லை என்றும் தெரிகிறது. அதனால் வெள்ளத்தின் மூலம் நாற்பது நாள்கள் மழையை வரப்பண்ணி உலகத்தை அழித்ததாய் படிக்கின்றோம். ஏற்கனவே இறைதிட்டத்தின்படி செயல்பட்ட நோவா மழை நின்றுவிட்டது என்பதை ஒரு புறாவைப் பறக்க விட்டதின் மூலம் அறிந்து கொள்கிறார். திரும்பி வந்த புறாவின் காலில் ஓர் ஒலிவ இலை இருந்ததால் (8:11) மழை நின்றுவிட்டது என்பதை பின்னூட்டமாக நோவா புரிந்துக் கொண்டார். மேலும், மனுமக்கள் மேல் கொண்ட அன்பினால் இனி நான் யாரையும் வெள்ளத்தினால் அழிக்க மாட்டேன் என்று சொல்லி நோவாவோடும் இயற்கையோடும் கடவுள் ஏற்படுத்துகின்ற உடன்படிக்கையைத் தொடக்கநூல் ஒன்பதாம் அதிகாரம் ஒன்பதாம் வசனம் தொடங்கியுள்ள பகுதிகளில் படிக்கின்றோம். இதற்கு அடையாளமாக 'வானவில்' ஒன்றை கடவுள் உண்டாக்கினார் என்று திருமறை சொல்லுகிறது. எனவே, இந்த நிகழ்வில் நடந்த செய்திப் பரிமாற்றத்தில் செய்திக் கொடுப்பவருக்கும் (கடவுள்) செய்தி பெறுகிறவருக்கும் (மனுமக்கள்) இடையே ஊடகமாக (நோவா) பயன்படுத்தப் பட்டிருக்கின்றார்.

கடவுளுக்கும் மனுமக்களுக்கும் இடையே நடந்த பரிமாற்றத்தில் நடைபெற்ற அனைத்து அம்சங்களும், குறிப்பாக மக்களின் மீறுதல்கள்,கடவுளின் சினம், மழை, வானவில் இவை அனைத்தும் பின்னூட்டங்களாகும். இதனால் பாதிப்பு என்ன அல்லது விளைவு என்ன என்று பார்க்கும்போது 'உடன்படிக்கை' (9:9) அதாவது உடன்படிக்கையில் வெளிப்படும் கடவுளின் அன்பும், மன்னிக்கும் மனப்பான்மையும், இவ்வகைத் தொடரில் ஏற்பட்ட பாதிப்புகளாகப் புரிந்து கொள்ளப்படுகின்றன.

பாதிப்பு எனப்படுவது ஒரு செய்தி யாரால், எதன்மூலம், யாருக்கு என்ன வகையான பாதிப்புகளைப் பக்க விளைவுகளை உருவாக்குகின்றது என்பதைப் புரிந்து கொள்வதன் மூலம்

அச்செய்தியின் நோக்கத்தையும் தன்மையும் பாதிப்பையும் புரிந்து கொள்ளலாம். ஹெராலட் லாஸ்வெல் மாதிரி 1948 (Herold P.Lasswell Model 1948)மூலம் சொல்லப்பட்ட அணுகுமுறை எந்த ஒரு செய்தியின் மீதும், கட்டுமானத்தின் மீதும், அமைப்பின் மீதும் போட்டுப்பார்ப்பதின் மூலம் பாதிப்பு என்றால் என்ன என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

மனித உளவியல் பற்றிப் புரிந்து கொள்வதும் தொடர்பியலை பற்றி புரிந்து கொள்ள உதவி செய்கிறது. தொடர்பியலை இருவரை உறவுபடுத்துதல் என விளக்கினால் அந்த இருவரையும் புரிந்து கொள்ள உளவியல் உதவுகின்றது. ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டால்தான் இருவருக்கும் பொதுவானதை அறிந்து தொடர்பு கொள்ள இயலும். தொடர்புத் துறையில் சிக்கல்களுக்கு உள்ள காரணங்களில் ஒன்று மனிதர்கள் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளாமலிருப்பது, எனவே அதைப் புரிந்துகொள்ள உளவியல் உதவுகின்றது. தொடர்புத் துறையில் ஒரு செய்தியினை அனுப்ப மற்றவர் அதனை பெற்று பதில் கொடுக்கின்றார். நிறைவான பதில் கிடைக்க வேண்டுமாயின் மனித உறவு நம்பிக்கையில் ஏற்பட வேண்டும். இதற்கு உளவியல் துணை நிற்கின்றது. தொடர்பியலை மனித வளர்ச்சி என விளக்கினால் உளவியல் கல்விக்கு அது உறுதுணையாகின்றது.

மேற்சொல்லிய காரணங்களினால் இன்னுமொரு உண்மையாதெனில் உளவியலும் தொடர்பியலும் நாணயத்தின் இரு பக்கங்களே.

**தொடர்பியலுக்கு உதவுகின்ற சில உளவியல் செயல்பாடுகள்:**

**புலன் உணர்வு:** மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகியவற்றின் பகுதிகளை உடல் கூறியல் ( ஃபிசியலாஜி) வாயிலாக கற்றுக் கொள்ளலாம். புலன் உணர்வு வாயிலாகத்தான் மனிதன் எளிமையான சலனம் அடைகின்றான். எனவே தொடர்புத் துறை மிக எளிய படி.

**கவனம்:** மனிதர்கள் தனது உள்ளத்தினையும் புலன் உறுப்புக்களையும் ஒரு பொருளின் மீதோ அல்லது ஒரு கருத்தின் மீதோ ஓர் குறிப்பிட்ட சமயத்தில் குவியல்



செய்வதாகும். பல தூண்டுதல்கள் மனித கவனத்தை ஈர்க்கின்றன. ஆனால் அவற்றுள் ஒன்றினைத் தெரிந்தெடுத்து அதில் கவனம் செலுத்துகின்றார்கள். கவனம் செயல்பட புலன் உணர்வு முதற்படியாய் அமைகின்றது. இருவகைக் காரணங்கள் கவனம் செலுத்த உதவுகின்றன. அவை முறையே புறநிலைக் காரணிகளும், அகநிலைக் காரணிகளுமாகும்.

**1. புறநிலைக் காரணிகள்:**

**ஆற்றல்:** தூண்டுதல் வலிமையுடையதாக இருந்தால் மற்றத் தூண்டுதல்களை புறக்கணித்து கவனத்தை ஈர்க்கின்றது. நட்சத்திரங்களின் மத்தியில் மின்னல் ஒருவரை கவனிக்கத் தூண்டுகிறது. அதுபோல கவனத்தை ஈர்க்கும் தன்மை, புறத்தூண்டுதல் எனப்படும்.

**பரவல் அல்லது பருமன் :** தூண்டல் மற்ற தூண்டல்களை விட பெரிதாக அமைந்தால் ஒருவர் கவனிக்கிறார். நட்சத்திரங்கள் மத்தியில் உள்ள சந்திரன் ஒருவரை கவனிக்கத் தூண்டுகிறது. அதுபோல் சிறப்புக் கவனத்தை ஈர்க்கும், தன்மை எனலாம்.

**மீண்டும் மீண்டும் வருதல் :** தூண்டல் மிகச் சிறிய இடைவெளிக்குப் பிறகு மீண்டும் மீண்டும் வந்து கொண்டிருந்தால் ஒருவர் கவனத்தை ஈர்க்கின்றது. அழைப்பு மணியினை மீண்டும் மீண்டும் அடித்தல்.

**இயக்கம்:** நிலைத்திருக்கும் தூண்டலைவிட அசைந்து கொண்டிருக்கும் தூண்டல் கவனத்தை ஈர்க்கின்றது. மரத்தில் பற்பல குருவிகள் இருப்பினும், பறந்து செல்கின்ற குருவி ஒருவர் கவனத்தை ஈர்க்கின்றது. இயக்க நிலை புறத்தூண்டுதலுக்கு ஒரு காரணியாகின்றது.

**மாற்றம்:** ஒரே நிலையில் அமையாமல் தூண்டல் மாற்றமடைதல், நல்ல பேச்சாளர் தனது உரையினை-ஏற்றம் இறக்கம் அடிப்படையில் சொல்கின்றார். எடுத்துக்காட்டாக, நல்ல குரல் வளம், ஏற்ற இறக்கம் போன்றவை கவனத்தை ஈர்க்கிறது.

***ஒருங்கமைப்பு:*** எந்த தூண்டுதலும் ஓர் அமைப்பின் கீழ் வரும்போது கவனத்தை ஈர்க்கின்றது. ஒழுங்கற்ற குழப்பமான சத்தத்தின் மத்தியில் இனிமையான இசை ஒருவரைக் கவர்கின்றது.

***புதுமை :*** ஒரே வகையான தூண்டல்கள் வந்து கொண்டிருக் கையில் புதுமையான ஒன்று அவரைக் கவர்கின்றது. நம்மவர்கள் மத்தியில் வெள்ளைக்காரர் ஒருவர் எளிதாகக் கவரப்படுகிறார் அல்லது, ஆப்பிரிக்கர் ஒருவர் கவனத்தை ஈர்க்கிறார்.

***2. அகநிலைக் காரணிகள் :***

இவைகள் கவனம் செலுத்துபவருடைய உளநிலையைப் பொறுத்தது.

***ஆர்வம் அல்லது விருப்பம் :*** ஒருவர் இசையில் ஆர்வமுடையவராக இருந்தால் மற்ற தூண்டுதல்கள் மத்தியில், இசையின் மேலேயே கவனம் செலுத்துகின்றார்.

***உளநிலை :*** ஓர் குறிப்பிட்ட சமயத்தில் ஒருவரது உளநிலை அதற்கேற்ற தூண்டல் மேலாக கவனம் செலுத்துகின்றது. உற்சாக நிலையில் இருக்கும் ஒருவர் உற்சாகமான பொழுதுபோக்கை விரும்புகின்றார்.

ஓர் குறிப்பிட்ட சமயத்தில் ஒரு பொருளின் மேலாகத்தான் குறைந்த கால அளவில் கவனம் செலுத்த இயலும், நீண்டகாலம் அதன் மேல் கவனம் செலுத்த வேண்டியிருந்தால் ஒருவர் சொல்வதற்கு முன்னதாக, ஓர் குறிப்பிட்ட செய்தியால் அவர் ஈர்க்கப்பட வேண்டும். அதற்கு கவனம் உதவுகின்றது.

***அ. புலன் காட்சி:***

***புலன் உணர்வு:*** கவனம் இவற்றிற்குப் பின்னால் வருவது புலன் காட்சியாகும். புலன் உணர்விற்குப் பொருள் கொடுத்தல் அல்லது புலன் உணர்வினை விளக்குதல் புலன் காட்சியாகும். ஒன்றினை அர்த்தத்துடன் புரிந்து கொள்வது சாதாரண மொழியில் புலன் காட்சியாகும். தொடர்பியலில் ஒருவர் செய்தியினைப் புரிந்து கொள்ளுதல் புலன் காட்சியாகும். புலன்காட்சி முழுமை பெற ஐந்து படிகள் தேவை.



***சேகரித்தல்:*** புலனுறுப்புக்கள் வாயிலாக தூண்டுதல்களை சேகரித்தல், இவ்வாறு தூண்டுதல்கள் நரம்பு மண்டலம் வழியாக மூளையினைப் போய் அடைகின்றது. எனவே ஒருவர் காண்கின்றார், கேட்கின்றார், சுவைக்கின்றார், நுகர்கின்றார், தொடுகின்றார் என்பவற்றின் முதல் நிலையை அடைகின்றார்.

***தெரிந்தெடுத்தல்:*** இவ்வாறு மூளையை அடைகின்ற பற்பல தூண்டுதல்களிலிருந்து ஒன்றின் மேலாக கவனத்தைக் குவியல் செய்கின்றோம். தெரிந்தெடுத்தல் கவனத்தையும், கவனக் காரணிகளையும் சார்ந்திருக்கின்றது.

***கலத்தல்:*** ஓர் புலன் உணர்வினை நாம் தெரிந்தெடுத்தாலும் நமது நம்பிக்கைகள் நமது முன் அனுபவங்கள், மதிப்பீடுகள், உலகக் கண்ணோட்டம் போன்றவைகளுடன் கலத்தல் செய்கின்றோம். அதாவது புறத்தூண்டதல் நமது அகநிலை யோடு கலந்து விடுகின்றது.

***ஒழுங்கமைத்தல்:*** மேற்கூறின கலத்தல் செய்யப்பட்ட நமது அகநிலையும், புறத்தூண்டலும் ஒழுங்கமைக்கப் படுகின்றன. இயல்பாக மனித உள்ளம் படிப்படியாக ஒழுங்காக அமைக்கப்பட்டதையே எளிதாகப் புரிந்து கொள்கின்றது. தொடர்பியலில் குறிப்புகளுடன் ஒன்றன் பின் ஒன்றாக விளக்கப்படும் செய்தி எளிதாகப் புரிந்துகொள்ள முடிகின்றது.

***விளக்குதல்:*** அகநிலையுடன் கலக்கப்படுகின்ற புறத் தூண்டல் பொருளுடன் விளக்கப்படுதலாகும். இப்போது புலன் காட்சி முழுமை அடைகின்றது.

***ஆ.கற்றல்:***

ஒருவர் ஒரு நிகழ்வினைப் பற்றி ஒரு பொருளைப் பற்றி ஒன்றினைப் பற்றி பெற்றுக் கொள்ளும் அறிவே கற்றலாகும்.

மனித செயல்பாடுகள் ஒன்றில் கற்றவை இல்லாவிடில் இயல்பூக்கங்களின் அடிப்படையில் மறுவினை செயல்களாகும். மனிதம் பிறக்கையிலேயே அடிப்படை இயல்பூக்கங்களாகிய உணவினை நாடுதல், பாலுணர்வு, சமூக உணர்வு ஆகியவற்றை உடையதாகும். பயிற்சியினாலோ அனுபவத்தினாலோ

இயல்பூக்க செயல்பாடுகள் திருத்தி அமைக்கப்படுகின்றன. இதுவே கற்றலாகும். எடுத்துக்காட்டாக, பசி ஏற்படுகையில் பச்சைக் காய்கறியை அப்படியே சாப்பிடுதல் இயல்பூக்கமாகும். அதே காய்கறியை சமைத்து, பகிர்ந்து ஒழுங்காக உட்கார்ந்து சாப்பிடுதல் கற்றலின் விளைவாகும்.

மனிதம் இயல்பாக, இயந்திரப் பூர்வமாக தூண்டுதலுக்குப் பதில் கொடுத்தல் என்பது மனிதத்தின் இயல்பூக்கமாகும். தூண்டுதலுக்கு ஓரளவு சிந்தனையின் அடிப்படையில், இயல்பாகக் கொடுக்கின்ற பதிலை இன்னும் நலமாக மாற்றி, ஏராளமாக பயன் தரும் வகையில் அமைத்தல் கற்றலின் விளைவாகும்.

மனிதர்கள் கற்கையில் மாற்றம், வளர்ச்சி, சமுதாயத்தோடும் சூழ்நிலையோடும் நல்ல பொருத்தப்பாடு ஏற்படுகின்றது.

கற்றலுக்கு புலன் உணர்வு, கவனம், புலன்சாட்சி உறுதுணையாக நிற்கின்றன. ஒருவன் ஒன்றினைக் கற்று, அதைத் தனதாக்கி, அதற்கேற்ப தனது செய்கைகளில் மாற்றத்தினைப் பெறுவார்களாகில் அது நலமே. அவன் இவ்வாறு கற்றதை பொருளுள்ளவகையில் எடுத்துச் சொல்லவோ செயலாற்றவோ இயலும். இது தொடர்பியலுக்கு இன்றியமையாதது. மேலும் கற்பதற்கு மொழி, சிந்தனை வளம், ஆர்வம், உந்துதல் போன்றவை துணை நிற்கின்றன.

இவ்வகைக் காரணிகள், தகவல் சேகரிப்பில் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்பதனைப் பற்றிய தெளிவும் தேவைப்படுகின்றது. குறிப்பாக தகவல் பரிமாற்றத்தில் இப்படி, உளவியல் சார்ந்தும் புரிந்து கொள்ள வேண்டும்.

தொடர்பியல் வல்லுநர்களின் கூற்றுப்படி புறத் தூண்டுதலின் விளைவாக ஓர் உயிரிடம் காட்டுகின்ற எதிருணர்ச்சிக் குறிப்பே தகவல் எனப்படும். புறத்தூண்டுதல் உயிரினத்தின் மீது எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்த வில்லையெனில் அங்கு எதிர் உணர்ச்சிக் குறிப்பு இருக்காது. இத்தருணங்களில் தகவல் சென்று சேரவில்லை என்றே பொருள்படும். இதனால் தகவலின் பண்பும், பயனும் எதிர் உணர்ச்சிக் குறிப்பை அல்லது விளைவைப் பொறுத்தும்



கணக்கிடப்படுகின்றன வளர்ந்து வரும் சந்தைப் பொருளாதாரம், தகவல் புரட்சியின் மூலம் ஏற்பட்டுள்ள ஓர் எதிர் உணர்ச்சி என்றும் சொல்லலாம். இதனால் தகவல் கொடுப்பதற்கும் பெறுவதற்குமான அடிப்படை உரிமையானது, தவறான நோக்கத்திற்குப் பயன்படுத்தப்படவும் வாய்ப்பு இருக்கிறது என்றாலும், இதை ஏன் வளர்ச்சிக்கான ஓர் அறிகுறியாக எடுத்துக் கொள்ளக்கூடாது என்கிற கேள்வியும் இந்தச் சிக்கலோடு தொக்கி நிற்கின்ற ஒன்றாகின்றது.

இப்படிப் பலவேளை நம்மில் பலர் நினைப்பதுண்டு. தகவல் தொடர்பும், அதனைச் சார்ந்துள்ள தகவல் தொழில் நுட்பங்களும் ஏற்படுத்தியுள்ள பாதிப்புகளைக் குறித்து தெளிவுபடுத்துவதற்கு மூன்று தலையாய காரணங்கள் உள்ளன. முதலாவதாக இவை மனித உறவைப் பாதிக்கின்றன. இரண்டாவதாக இவை வாழ்வில் தகவுகளை இன்றையப் பொருளாதாரத்தின் அடிப்படையில் கட்டுமானம் செய்கின்றன. மூன்றாவதாக இழந்துபோன இறைசாயலை மீண்டும் பெற்றுக்கொள்ளத் தடையாய் இருக்கின்றன.

எடுத்துக்காட்டாக பல்நோக்கு ஊடகம் (மல்டி மீடியா) மற்றும் இணையத்துறைகள் (இன்டர்நெட்) மனித உறவில் ஓர் இணைப்பை உருவாக்குவதைக் காட்டிலும் ஒரு விரிசலை ஏற்படுத்தியிருக்கின்றன என்றே சொல்ல வேண்டும். தொடக்க காலத்தில் எண்களைக் கணிக்கக் கணிப்பொறியைப் (கம்யூட்டர்) பயன்படுத்தினர். எண்கள் ஆட்சி செய்த கணிப்பொறிகளில் பின்உரைநடை (வரிவடிவம்) தொடங்கியது. அதன்பின்பு வரைவு (கிராபிக்ஸ்) நுழைந்தது. அடுத்தடுத்து ஒலி அமைப்புக் கணிப்பொறிகளை ஆட்கொண்டது. உயிரியக்கம் (அனிமேஷன்) குடிபுகுந்தது. இப்போது ஒலி அமைப்புக் கணிப்பொறிகளை ஆட்கொண்டுவிட்டது. இப்படியாக எண், எழுத்து (டெக்ஸ்ட்) ஒளி (வீடியோ) எனப் பலவற்றைக் கணிப்பொறி ஏற்றுக் கொண்டுள்ளது. இப்படி வேறுபட்ட ஊடகங்களைக் கொண்ட ஒருங்கிணைப்பே பல்நோக்கு ஊடக அமைப்பு எனலாம்.

பல்நோக்கு ஊடகத்தைப் பல்நோக்கு ஊடக அமைப்பு (Multi Media System) ஆக்கி, அந்த அமைப்பிற்குள்ளாகக் கல்வி, பொழுதுபோக்கு, தகவல் வணிகம், மருத்துவம், அறிவியல் போன்ற பல துறைகளுக்காக இவ்வகை அமைப்புப் பயன்படுகிறது. இவ்வகை முன்னேற்றத் திட்டங்களினாலும், தொழில் நுட்பத்தின் புதிய வரவாலும் மக்களின் வாங்கும் சக்தியைப் பெருக்கி நுகர்வோர் நாகரீகத்தைப் பெருக்கு வதற்கான தேவை வளர்ந் துள்ளதையும் பார்க்கலாம்.

கல்வி நிறுவனங்கள் தங்களது வேலைப்பளுவைக் குறைப்பதற்காகப் பல்நோக்கு ஊடக முறையைப் பயன்படுத்த ஊக்கப்படுத்தப்படுகின்றனர். பல்நோக்கு ஊடக அமைப்பு, கணிப்பொறிக் கலாச்சாரம் இணையத்தின் வலைப்பின்னல் (Web) ஆகிய வலைப் பின்னல்களின் கவர்ச்சியில் இன்றைய உலகத்தினர் மயங்கி நிற்கின்றனர்.

இணையம் என்பது பன்னாட்டுக் கணணிப்பொறி வலைப் பின்னல்களின் மூலம் உலகளாவிய தகவல்களைப் பகிர்ந்து கொள்ளும் ஓர் அமைப்பாகும். இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு , மிகச் சிறிய அளவில். இவ்வகைத் தகவல் பரிமாற்றம் தொடங்கப்பட்டது. அமெரிக்க இராணுவத் துறையினரிடையே அறிவியல் தொழில்நுட்ப வல்லுநர்களிடையே செய்தியை பரிமாறிக் கொள்வதற்காக தொடங்கப்பட்டது. பின்பு பல்கலைக் கழகங்கள், அரசுதுறை வணிக அலுவலகங்கள் வரை விரிவடைந்த இது தற்போது உலகம் முழுமையையும் தன்னுடைய வலைப் பின்னலுக்குள்ளாகக் கொண்டு வந்துள்ளது என்று ஒரு தோரணையும் உருவாகியுள்ளது. நகர்புறங்களில் எங்குத் திரும்பினாலும் கொய்தல் மையம்,(Browsing Centre) செய்தியகம், (Information café) செய்திக்கலைப்பூங்கா (Vertual Park) என்றெல்லாம் அறிவிப்புப் பலகைகள் போடப்பட்டிருக்கும் இவ்வகைத் தகவல் பரிமாற்றம் இணையவலை மூலம் உலகளாவிய அளவில் விரிவடைந்துள்ளது. இதை World Wide Web - WWW என்று அழைக்கின்றனர்.



ஆக, இணையவலை (Internet) மூலம் நாம் எந்த நாட்டிலிருந்து கொண்டும் மற்றொரு மூலையின் தகவல்களைப் பெற முடியும். இதன்மூலம் மின்னஞ்சல், தொலைநகல் (பேக்ஸ்) உருவாகியிருக்கிறது. புல்லற்றின் போர்ட் (Bulletin Board) என்னும் தகவல் பலகை மூலம் செய்திகளை அறியலாம், பரிமாறலாம், விளையாடலாம். தொலைவலை (Telenet) மூலம் பல்வேறு நூலகங்களிலிருந்து தகவல்களை அள்ளலாம். ஒளி மாநாடும் நடத்தலாம்.(Electronic News Paper) மின்னணு செய்தித்தாள் மூலம் செய்திகளை அறியலாம், சேகரிக்கலாம், ஆய்வு செய்யலாம். எல்லாவற்றிற்கும் மேலாக வீட்டில் இருந்து கொண்டே தொலை அங்காடி (Teleshopping) மூலம் உலகம் முழுவதையும் உங்கள் கையில் பெற்றுக் கொள்ளலாம். இணையவலை எனும் உலகளாவிய வலைப்பின்னல்களின் மூலம் நடைபெறுகின்றன. அதனால் (Information Super Highway) தகவல் மீப்பெருஞ்சாலையில் சேர்ந்து கொள்ள அழைப்பும் வாய்ப்பும் கொடுக்கப்படுகின்றது.

இனிவரும் நாள்களில் கம்பியில்லா இணையவலை சாத்தியம் என்று கணிப்பொறி அறிவியலாளர் தெரிவித்துள்ளனர். மேலே கூறப்பட்ட தகவல் தொழில்நுட்ப அணுகுமுறைகள் மூலம் மனித மேம்பாடும், சமூகப் பரிமாற்றமும், தகவல் பரிமாற்றமும் சீராக நடைபெற வாய்ப்பிருப்பதாக நம்பப்படுகின்றது.

இதனைச் சற்று அலசி ஆராய வேண்டிய கட்டாயத்தில் தான் நாம் இருக்கின்றோம். இவ்வகை வளர்ச்சிப் போங்குகள் திருமறைக்கு அறைகூவலை விடுவனவாகவும், இறையரசுக்கான தகவுகளைத் திசை திருப்புவனவாகவும் இருக்கின்றன. எனவே, தொடர்பியல் துறையின் ஒட்டுமொத்த அணுகுமுறையும் வணிகமாகிக் கொண்டிருக்கின்ற வேளையில் கிறிஸ்தவ நம்பிக்கையின் அடிப்படையில், திறனாய்வுக் கண்ணோட்டத்தில் இவற்றை அணுகுவது எங்ஙனம் என்பதைப் பற்றிய தெளிவும் தேவைப்படுகின்றது. பின்வரும் விளக்கப்படம் ஒரு வழிப்போங்குடைய இன்றைய தகவல் பரிமாற்றத்திற்கு மாற்றுக் கலாச்சாரத்தை முன்வைக்கிறது.

* * *

# 6. தொடர்பு மாதிரிகள்

தொடர்பு இயங்கும் விதத்தை இதற்கு முன் உள்ள அத்தியாயத்தில், பெர்லோ மாதிரி விளக்கப்படம் மூலம் அறிய முடிந்தது. இன்னும் பல்வேறு விளக்கப்படங்கள் தொடர்பு மாதிரிகளாகக் கொடுக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் இறையியல் மாணாக்கர்கள் தொடர்பின் பல்வேறு கூறுபாடுகளையும், பரிமாணங்களையும் புரிந்துகொள்கின்றனர்.

முனைவர். சிவ சசிரேகா கருத்துப்படி, மாதிரிகள் உண்மையை எளிதாக்குகின்றன; இன்றியமையாக் கூறுகளைத் தெரிவு செய்கின்றன; உறவுகளைச் சுட்டிக் காட்டுகின்றன. இம்மாதிரிகள், தகவல் தொடர்பு முறையையும் மாற்றத்தையும் பற்றி வாதிடும் போது மிகவும் ஆற்றல் வாய்ந்தனவாய் உள்ளனவா அல்லது தகவல் தொடர்பு அமைப்பையும் தொடர்பையும் பற்றி விவாதிக்கும் போது நிலையானவாய் உள்ளனவா என்ற தரத்தைப் பொறுத்து, தகவல் தொடர்பு மாதிரிகள் வேறுபடும்.

எனவே, தொடர்பு மாதிரிகள் பயன்படுத்துவதன்மூலம்,

- ⇨ தொடர்பு இயங்கும் விதத்தைப் புரிந்து கொள்ளலாம்.
- ⇨ தொடர்பின் வகைகளைப் புரிந்து கொள்ளலாம்.
- ⇨ செய்திப் பரிமாற்றத்தைப் புரிந்து கொள்ளலாம்.
- ⇨ அடிப்படையில் தொடர்பியல் கோட்பாட்டிற்கான விளக்கப்படங்களையும் அறிந்து கொள்ளலாம்.



## 1. ஹெரால்ட் லாஸ்வெல் மாதிரி (1948) (Herald Lasswell's Model)

யார்?

என்ன?

எதன்மூலம்?

யாருக்கு?

என்ன பாதிப்பு?

தமிழ் மரபில் இதனைப் புரிந்துகொள்ள உதவும் சொல் வழக்கு ஒன்று உண்டு. எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு. ஒரு செய்தியானது யாரால் சொல்லப்படுகின்றது? எதன்மூலம்? யாருக்கு என்னவித பாதிப்புகளை, பக்கவிளைவுகளை உருவாக்குகிறது என்பதைப் புரிந்து கொள்வதின் மூலம், செய்தியின் உள்நோக்கத்தையும், தன்மையையும், பாதிப்பையும் புரிந்து கொள்ள முடியும் எனும் கோட்பாட்டை முன்மொழிகிறது ஹெரால்ட் லாஸ்வெல் மாதிரி. மேலே சொல்லப்பட்ட ஐந்து வினாக்களை கேட்டுப்பார்க்கும்போது, அடிப்படையில் ஒரு செய்தி எவ்வாறு உருவாக்கப்படுகிறது என்பதையும் அச்செய்தி ஏற்படுத்தும் பாதிப்புகளையும் நாம் புரிந்து கொள்ள இயலும். அருளுரை ஆற்றுபவர்களும், அருளுரையை கேட்பவர்களும் இதனை மனதில் கொண்டிருத்தல் மிகவும் தேவையான ஒன்றாகும்.


## 2. அரிஸ்டாட்டில் வாதக்கோட்பாடு / தர்க்கக் கோட்பாடு

ஒருவர் தன் வாதத்திறமையைக் கொண்டு, தன் பேச்சின் மூலமாகவோ, எழுத்து மூலமாகவோ பிறர் சிந்தனைகளைத் தூண்டச் செய்தல், அரசியல் மேடை, பட்டிமன்ற மேடை, சமய பேருரைகள் நிகழ்த்தும் இடங்கள் போன்ற தளங்களில் இவ்வகை வாதங்கள் அல்லது உரைகள் முன் வைக்கப்படுகின்றன. சிறந்த குரல் தெளிவு, சிந்தனையை தூண்டச் செய்யும் கருத்துகள், அறிவாற்றலுக்கு சவால் விடும் போங்கு, கவர்ந்திருக்கும் பேச்சுத்திறன் போன்றவற்றால் தான் பதிவு செய்ய விரும்பிய கருத்தை பதிவு செய்ய இயலும் என சொன்னவர் அரிஸ்டாட்டில்.

### 3. தூண்டல் கோட்பாடு 1986 (Stimulus Response Model)

தொடர்பு சாதனத்தின் விளைவினைக் கருத்தில் கொள்வது **Bullet Theory** - எனவும் அழைக்கப்படும். தொடர்புசாதன ஆதிக்கத்தின் நேரடி கோட்பாடு எனப்படுவதுமுண்டு. இதன் அடிப்படைக் கருத்து யாதெனில், தொடர்புசாதன செய்தியானது நேரடியாக மக்களின் செயல்பாடுகள் மீது ஆதிக்கம் செலுத்துகின்றது. தொடர்பியல் வல்லுநர் ரோஜர்ஸ் (Rogers) 1986 ஆம் ஆண்டு, வெகுதிரள் ஊடகங்களின் சக்திபற்றி, அதிகாரம் பற்றி வலியுறுத்திக் கூறும்போது, ஊடகங்களுக்குத் தூண்டும் சக்தி உண்டு என்பதை சுட்டிக்காட்டினார்.

### 4. ஷானன் வீவர் மாதிரி (1949) (Shannon and Weaver Model)




செய்தியானது ஓரிடத்திலிருந்து வேறு ஓர் இடத்திற்கு எப்படிச் செல்கிறது என்பதைத் தெளிவாக விளக்குகின்றது. இதனை நேர்கோட்டு மாதிரி என்றும் கணிதக் கோட்பாடு மாதிரி என்றும் அழைப்பர்.


### ஷ்ராம் மாதிரி Schramm's Model (1954)

* முதல் மாதிரி







* இரண்டாம் மாதிரி




* மூன்றாம் மாதிரி





வில்பர் ஷ்ராம் தமது மாதிரியை சேனன் வீவர் தொடர்பு மாதிரி மீது கட்டியெழுப்பினார். இம்மாதிரி, வெகுதிரள் தொடர்பு இயங்கும்விதம் குறித்து கரிசனைக் கொள்கிறது. ஷனன் வீவர் மாதிரியில் Transmitter அதாவது ஒலிபரப்புக்கருவி, Receiver அதாவது பெறுநர், Encoder அதாவது குறிப்பேற்றுபவர், Decoder அதாவது குறிப்பகற்றுபவர் என்பதை பொருள் புரிதல் என மாற்றப்பட்டுள்ளது. ஷ்ராமின் மூன்றாம் மாதிரியில் பின்னூட்டத்திற்கு முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. இதனால் ஒரு செய்தி, செய்தி கொடுப்பவரிடத் திலிருந்து வெளியேறி சேருமிடத்திற்கு சென்று சேரும் வரை மாறிக் கொண்டேயிருக்கும். அதற்கான பின்னூட்டம் பெறப்பட்ட பின்னரே மூலச் செய்தி மாற்றப்பட்டதா இல்லையா என்பதும் புரியும்.

எடுத்துக்காட்டாக, நற்செய்தி நூல்கள், இயேசு கிறிஸ்துவோடு வாழ்ந்தவர்கள், அவரைப் பின்பற்றியவர்கள், அவருடைய அடியவர்கள் அவரில் கண்ட உண்மைகளை, அவருடைய அறிவுரைகளை, வாழ்க்கை முறையை நற்செய்தி நூல்களாக பதிவு செய்துள்ளனர். திருமறை தொகுக்கப்பட்ட

போது, இயேசு கிறிஸ்துவுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்ட நற்செய்தி நூல்களும், ஆயர் மடல்களும், பிற நூல்களும் புதிய ஒப்பந்தமாக உருவாகியது. ஒவ்வொரு நூலும் இயேசு கிறிஸ்துவுக்கு சிறப்பழுத்தம் கொடுத்திருப்பது இக்கருத்தை தெளிவுபடுத்துகின்றது.


### 5. பிராங்க் டான்ஸ் ஹெலீக்கல் மாதிரி Frak E.X. Dances Helical Model (1967)




இது நேர்க்கோட்டு மாதிரியையும், வளைவு மாதிரியையும் இணைத்த ஒன்று. இவ்விரு மாதிரிகளின் பலவீனங்களையும் தவிர்த்த ஒன்று. தொடங்கிய இடத்திலேயே முடிவு பெறும் நிலை. இதனால் பெருவாரியான மக்கள் அமைதியாக, சமூக நீரோட்டத்தில் ஓடிக் கொண்டிருக்கும் நிலை உருவாகிறது. இதோடு தொடர்புடைய ஒன்றாகும். வெகுதிரள் ஊடகத்தின் ஆதிக்கம், அவைகள் ஏற்படுத்தும் பாதிப்புகள் இன்னொரு புறம், இருவர் தொடர்பில் உண்டாகும் பாதிப்புகள் இவை இரண்டும், பலவேளைகளில், வெகுதிரள் மக்களை அமைதியாக வைத்திருக்கும் வாய்ப்பு இருக்கிறது என்பதை இவ்வகை மாதிரி சுட்டிக் காட்டுகிறது.



### 6. வெஸ்லி மற்றும் மெக்லீன் மாதிரி Wesley and Maclean's Model (1957)




X - பல்வேறு செய்தி மூலங்கள்

A - செய்தியாளர்

C - தகவல் தொடர்பு சாதனங்கள்

B - பெறுநர்


X1-X4 - பல்வேறு செய்தி மூலங்கள்

FBA - பின்னூட்டம்

தகவல் தொடர்பின் சில குறிப்பிடத்தக்க கூறுகளை வலியுறுத்திச் சொல்ல இந்த மாதிரியானது இன்றியமையாதது ஆகும். குறிப்பாக, A-வுக்கும் B-க்கும் இடையே நடக்கும் தகவல் பரிமாற்றில் C எனும் ஊடகங்கள் அல்லது தகவல் தொடர்பு சாதனங்கள் முக்கியம் வாய்ந்ததாக கருதப்படுகின்றன. இதனால் நாளடைவில் வெகுதிரள் ஊடகங்களே செய்தி பரிமாற்றத்தினை கட்டுப்படுத்தவும் வாய்ப்பு உருவாகின்றது.

எடுத்துக்காட்டாக, மனித வாழ்க்கையில் ஊடகங்கள் மைய பங்கை பெற்றுக்கொள்வதைப் போல திருமறை கடவுளைப்பற்றி புரிந்து கொள்ள உதவும் ஒரு தொடர்புச் சாதனம். நாளடைவில், ஒரு சில தருணங்களில், திருமறையை மட்டும் ஒரு மந்திரப் புத்தகமாக பயன்படுத்துவதும், அதைப் பூசைப் பொருளாக பாவிப்பது போல, பல நேரங்களில் தொடர்புக்கு பயன்படுத்தப்படும் கருவிகள், வாழ்க்கையின் மையமாகிவிடுகின்றன.

## 7. நியுகோம் மாதிரி (NewComb's Model - 1953)




A,B = தொடர்பாளர்கள் X = சமூகச்சூழல்

டி. நியுகோமின் இரு நபர்களிடையே தொடர்பு கொள்ளும் தொடர்பியல் மாதிரியை அடிப்படையாகக் கொண்டிருந்தது. கொடுக்கப்பட்ட சமூகச்சூழலில் தொடர்பு என்பது ஒரு சமநிலையை உருவாக்குவதற்காகவே செயல்படுகிறது. குறிப்பாக இருவர் தொடர்பில் மனிதர்கள் தங்களுக்குள்ளாகவும், தங்களுக்கு வெளியேயுள்ள உலகப் பொருட்களுடனும் தொடர்பு கொள்வதில், சமநிலையை உண்டுபண்ணுவதில், ஓர் ஆற்றலை தக்கவைத்துக் கொள்கின்றனர். தாமஸ் அக்குவினாஸ் எனும் இறையியலாளர் இறையியலில் பெரிய தாக்கத்தை உண்டுபண்ணினவர். அவர் கருத்துப்படி, இரு தொடர்பாளர்களுக்கிடையில், மூன்றாவது ஒரு ஆற்றல் செயல்படுமானால், அதுதான் கடவுள் எனும் ஆற்றல் அந்த இறையாற்றலுடன் மனுக்குலம் தன்னை சமநிலையில் வைத்துக் கொள்ள வேண்டும் என்றார்.

## 8. பெக்கர்ஸ் மொசைக் மாதிரி (1969) (Becker's Mosaic Model)

ஒரு தொடர்பு நிகழ்வு என்பது பல நேரங்களில் ஒன்றையொன்று தொடர்புடையதாக இருக்கிறது. ஒரு செய்தியின் பல்வேறு கூறுபாடுகளை உற்று அலசும்போது, அச்செய்தினூடே பல்வேறு நிகழ்வுகளின் குறிப்புகளுக்கிடையே தொடர்பு இருப்பதைக் காணலாம். ஒருசெய்தி கட்டமைக்கப் படும்போது, அதில் கடந்த கால வரலாற்றுக் குறிப்புகள் முதல்




நிகழ்காலத் தொலைக்காட்சி விளம்பரங்கள் வரை, இடையிடையே செய்திக் குறிப்புகளாக வந்து போவதற்கான வாய்ப்புகள் இருப்பதாக பெக்கர் கருதினார். ஒரு ஆயர் அருளுரையாற்றும் போதும், ஒரு பேச்சாளர் உரை நிகழ்த்தும் போதும் இது நிகழலாம். ஒரு மனிதத்தின் சிந்தனையும், செயல்பாடும், உள்ளார்ந்த நிலையில், பல்வேறு செய்தி மூலங்களுடன் இணைக்கப்பட்டிருக்க வாய்ப்பு உள்ளது என அனுமானித்தார்.

இம்மாதிரி, வெளியிடும் சிறப்புக் கூறு என்னவெனில், தகவல் அல்லது செய்தி என்பது மொசைக் போன்றது. மொசைக் எனும் ஆங்கிலச் சொல்லுக்கு பன்னிற ஒட்டுருப்படம், எனப் பொருள்படும். இதில் எல்லா படங்களும், அதன் நிறங்களும் இணைந்து ஒரு கருதுகோளை முன்வைக்கின்றன. அதுபோலவே ஒரு செய்தியில் பல்வேறு கருத்துகள், எடுத்துக்காட்டுகள், குறிப்புகள், புள்ளிவிபரங்கள், வரலாறுகள் போன்றவை இணைந்து மையச் செய்தியைக் கட்டமைக்கின்றன.

இன்னுமொரு கோணத்தில், கணித மொழிநடையில் சொல்லும் போது Cube எனும் ஆங்கிலச் சொல்லுக்கு சம சதுர அறுமுக பிழம்புரு எனும் பொருள் உண்டு. இது சதுர கனப்பொருள் ஆகும். இதில் பல்வேறு சதுரங்கள் உள்ளன. அவை அனைத்துமே ஒன்றோடொன்று தொடர்புடையது. அதை நகர்த்துபவரின் திறமையைப் பொறுத்து நேரம், திறமை வெளிப்படும். இதில் எல்லா சதுரங்களும், முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருக்கின்றன. அதுபோலதான் தொடர்பு நிகழ்ச்சியில் அனைத்து அம்சங்களும், செய்திக்கு முழுமை சேர்ப்பதாக இருந்தாலும், செய்தியை சொல்ல வருபவர் அதனை கையாளும் விதம் மூலம் ஒரு பன்னிற ஒட்டுருவப்படம் உருவாகின்றது.

பின்வரும் விளக்கப்படம் இக்கோட்பாட்டினைத் தெளிவு படுத்துகின்றது.




## 9. பார்ன்லுன்டுவின் டிரான்ஸ்சேக்சனல் மாதிரி (1970) (Barnlund's transactional Model)

செய்திப் பரிமாற்றத்திற்கான அடிப்படை மாதிரிகளில் ஒன்றாகும். தனக்குள் தானே தொடர்பு கொள்ளும் முறையை புரிந்து கொள்ள உதவி செய்கிறது. பார்ன்லுன்டுவின் அனுமானத்தின்படி, ஒரு மனிதம் தனக்குள் தொடர்பு கொள்வதைத் தனியாக பிரித்துப் பார்ப்பதைக் காட்டிலும், தனக்குள் ஏற்படும் உள்தொடர்பால் வெளியுலகத்தோடு தான் கொண்டிருக்கும் தொடர்பும் இடையிடையே உள்ளீடு கொண்டிருக்க பெரும்பாலும் வாய்ப்பு உண்டு என்கிறார்.


எடுத்துக்காட்டாக, 'சிந்தித்தல்' ஒரு நபர் சிந்தனை செய்யும்போது தனக்குள்தானே தொடர்பு கொள்கிறார். ஆனால் அதேவேளை சுவாசிக்கிறார். இதனால் வெளியுலகத்தோடும் தொடர்பில் இருக்கிறார். இதற்கான சூழல் தனிப்பட்டது என எடுத்துக் கொண்டாலும், அந்த சூழலில் உள்ள சமூகக் காரணிகளும் அவரின் சிந்தனையில் உள்ளீடு செய்ய, ஊடுருவ வாய்ப்பிருக்கிறது. பொதுவாக தொடர்பு இயங்கும் விதத்தை நேர்கோட்டு மாதிரியில் புரிந்து கொள்கின்றனர். ஆனால் இவரின் டிரான்சேக்சனல் மாதிரி அதை கேள்வி எழுப்புகிறது.



காரணம், செய்தி அனுப்பப்படும்போதும், பெற்றுக் கொள்ளும்போதும், இடையிடையே வேறுபல பரிமாற்றங் களுக்கும் வாய்ப்பு இருப்பதாக அனுமானிக்கப்படுகின்றது.

எடுத்துக்காட்டாக, சிந்திக்கும்போதும், சுவாசிக்கிறோம். சுவாசிக்கும் போது, மூச்சில் நச்சுத்தன்மை அல்லது புகை யினால் வெளிப்படும் கிருமிகளால் சுவாசத் தடை ஏற்படுதல் இப்படி, பல காரணிகளினால் முறையாக சுவாசத்திலும் சிந்தனையிலும் பேறு பல காரணிகள் உள்ளீடு செய்கின்றன.

பின்வரும் விளக்கப்படம் இக்கோட்பாட்டினைத் தெளிவு படுத்துகின்றது.




P = ஆளுமை; D = குறிப்பகற்றல்; E = குறிப்பேற்றல்;

Cpr = சுயக்குறிப்பு; Cbehaviour = பொதுக்குறிப்பு

## 10. பிரௌன்ஸ் ஹோலோ கிராபிக் மாதிரி (1987) (Brown's Holographic Model)

அரிஸ்டாட்டில் கோட்பாட்டின்படி ஒருவர் வாதத் திறமையினால் தன் கருத்தை சிறப்பாக விளங்கச் செய்ய இயலும் எனும் கருத்து முன்வைக்கப்பட்டது. பிரௌன்ஸ் ஹோலோ கிராபிக் கோட்பாடு என்பது முழுமை நோக்கிய கருத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. Holo என்னும் ஆங்கிலச் சொல் 'holos' எனும் கிரேக்கச் சொல்லிலிருந்து உருவாக்கப் பட்டது. இதன் பொருள் 'முழுமை' என்பதாகும். 'gram' என்றால் செய்தி. 'Holo gram' எனும் கருதுகோல் இவ்வகை வேர்ச் சொல்லிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

பிரௌன், வாதத்திறமை புரிந்து கொள்ள holo gram கோட்பாட்டை முன்வைக்கிறார். ஒரு முழுமையில் வாதம் இருக்கிறதா என காண்பதைக் காட்டிலும் ஒவ்வொரு வாதத்திலும் முழுமை இருக்கிறதா என காண வேண்டும் என்கிறார். ஒரு ஆயர் எளிமையாக இதை புரிந்து கொள்ள வேண்டுமெனில், அருளுரையை எடுத்துக் கொண்டால், முழுமையான அருளுரையாக இருக்கிறதா என பார்ப்பது ஒரு புறம் இருந்தாலும், அருளுரையில் சொல்லப்பட்ட ஒவ்வொரு குறிப்பிலும், அங்கத்திலும் முழுமை இருந்ததா என காண வேண்டும். இக்கருத்து, முழுமையான செய்தியை கட்டமைக்க உதவி செய்யும்.

## 11. பிராக்சுவல் மாதிரி (A Fractal Model)

பிராக்சுவல் மாதிரி, முன்வைக்க விரும்பும் அடிப்படைக் கருத்து யாதெனில், திரும்பத் திரும்ப சொல்லுதல். இதை விளக்க கொடுக்கும் எடுத்துக்காட்டுகள் கணிதவியலில் உள்ள ஒழுங்கற்ற அமைப்பு முறைகள். இதற்காக இயற்கையில் உள்ள எளிமையான அமைப்புகளை எடுத்துக் கூறுகிறார். மேகங்கள், அதாவது முகில்கள் கூர்மையானவையல்ல. மலைகள் அமைந்திருக்கும், அதாவது பரவிக்கிடக்கும் விதம் கூம்பு வடிவில் இல்லை, கடற்கரை ஓரங்கள் வட்டமானவை அல்ல. மின்னல் வெட்டும்போது நேர்கோட்டில் செல்வதில்லை இது இயற்கை. எனவே, இயற்கையிலேயே எதுவும் நேர்க்கோட்டில்




செல்லாதபோது, ஒரு செய்தி மூலச்செய்தியிலிருந்து துண்டு துண்டாக பிரிந்து காணப்படுவதற்கு வாய்ப்பிருப்பதாக கருதினார் Bernoit Mandelbrot (1970). இப்படி துண்டுகளாக, துணுக்குகளாக, தனியான பிளவுபட்டு, உடைபட்டுச் செல்லும் செய்திகளை புரிந்து கொள்ள இணைப்பை ஏற்படுத்த திரும்பத் திரும்பச் சொல்லுதல் உதவியாயிருக்கும் என்கிறார்.

கணிதக் கோட்பாட்டில் பொதுவிதிகளை திரும்பத் திரும்ப பயன்படுத்துவதன் மூலம் இப்பிரச்சனையை சரிசெய்ய இயலும் என்கிறார். Fractal எனும் ஆங்கிலச் சொல் Fractus எனும் இலத்தீன் வேர்ச் சொல்லிருந்து வருகிறது. Frangere எனும் வினைச் சொல்லின் பொருளைக் கொண்டுள்ளது. இதன் பொருள் 'உடைத்தல்' என்பதாகும். அதாவது, தேவைக்கேற்றார் போல துண்டுதுண்டாக உடைத்தல் எனும் கோட்பாட்டை முன்வைக்கிறார்.

உடைத்தல் என்பதற்கு இன்னுமொரு பொருள் 'ஒழுங்கற்றது' என்பதாகும். இதனை சரிசெய்ய, விதிமுறைகளை திரும்பத் திரும்ப பயன்படுத்துதல், அறிவித்தல், பதிவு செய்தல் போன்றவை உதவிசெய்யும் என்கிறார். ஒரு ஆயர் அருளுரையை கேட்பவர் மனதில் பதவு செய்ய, அதை ஆங்காங்கே திரும்பச் சொல்வதும், நினைவுபடுத்திக் காண்பிப்பதும், அழுத்திச் சொல்வதும் அவசியமாகின்றது. இதனால் செய்தியானது உடைபட்டு, சிதறிவிடாமல் சரியான இலக்கைச் சென்றடையும் வாய்ப்பு உருவாகின்றது.

## 12. ஜார்ஜ் கெர்ப்னர் மாதிரி (1956) (GerbnerModel)

1956இல் ஜார்ஜ் கெர்ப்னர் (George Gerber) ஒரு மாதிரியை முன்வைத்தார். தகவல் கொடுப்பவரோ, தகவலைப் பெறுபவரோ அது யாராக இருந்தாலும் சரி, அவர்களைக் காட்டிலும் இங்கே முக்கியத்துவம் பெறுவது ஒரு செய்தி பல நிலைகளுக்குள்ளாக எவ்வாறு சென்று வருகின்றது எனும் போங்கினைப் பற்றிய விளக்கம் தரப்படுகின்றது. அதுவே இம்மாதிரியின் முதன்மைக் கூறாகும்.





E எனப்படுவது ஒரு நிகழ்வைக் குறிக்கும். $E^1$ எனப்படுவது நிகழ்வுபற்றிய தகவல்களாகும். இவை சேகரிக்கும் முன்பே, குறிப்பிட்ட நிகழ்வு ஒரு சூழலில் நடைபெறுவதும் அந்த சூழலும் அந்த நிகழ்வைப் பற்றிய தகவல் களைப் பாதிக்க முடியும் அதுதான் யதார்த்த நிலை என்கிறார் கெர்ப்னர். இதனால் E எனப்படும் நிகழ்வு M என உருவெடுக் கின்றது. பிறகு அந்த நிகழ்வு பற்றிய தகவல், சேகரித்தவரின் கைவண்ணத்தில் உருவாகி, ஊடகம் எனும் அமைப்பிற்குள்ளாகி செல்லும்போது, அங்கேயும் சில கட்டுபாட்டிற்குள் உருமாறுகின்றது. பிறகு ஓர் அமைப்பாக கதையாகவோ, குறியீடாகவோ, அறிக்கையாகவோ, வரலாறாவோ, பாட மாகவோ, பாடலாகவோ, வரைபட மாகவோ, கவிதையாகவோ, அடையாளமாகவோ கலை இலக்கியங்களாகவோ பதிவு செய்யப்பட்டு, உள்ளடக்கமாக வெளிக்கொணரப்பட்டு கடைசியில் $SE^1$ அதாவது முழுவடிவ செய்தியாக உருவா கின்றது. அதாவது ஒரு செய்தியாக கட்டமைக்கப்படுகின்றது. வெகுதிரள் தொடர்புச் சாதன அமைப்புகள் ஒரு தொழிற்சாலை போன்று செயல்பட்டு, ஒரு பதிவை அல்லது நிகழ்வை, ஒரு கருத்தியலை இப்படித்தான் வெளிக்கொண்டு வருகின்றன என்பதற்கு ஜார்ஜ் கெர்ப்னர் ஒரு சிறந்த மாதிரியை உருவாக்கித் தந்துள்ளார்.



### 13. நட்சத்திர மாதிரி (Star Model):

பெர்லோ மாதிரியின் முன்னேற்றமடைந்த மாதிரி எனக் கூறலாம். இருவழித் தொடர்பைப் புரிந்து கொள்ள இம்மாதிரி பெரிதும் உதவியாக இருக்கிறது. இறையியல் மொழிநடையைப் புரிந்து கொள்ள இம்மாதிரியைப் பின்வரும் பாணியில் விளக்கலாம்.




தகவல் பரிமாற்றம் என்பது ஒரு வழிப்போங்குடையதல்ல, மாறாக பங்கேற்பு முறை சார்ந்ததாகும். இது மேற்கூறப்பட்ட வட்ட வடிவ மாதிரி, தொடர்பு இயங்கும் விதத்தில் பங்கேற்பு முறைக்கு ஒரு வாய்ப்பை உருவாக்கித் தருகிறது. கிறிஸ்தவ தொடர்பின் அடிப்படை உண்மை இறைவன் மனுக்குலத்தோடு தன்னை ஒன்றுபடுத்திக் கொண்டார் என்பதாகும். இதனால் மேலும் இறை வரலாற்றில், மனுமக்கள் அனைவருக்கும் சமமான பங்குண்டு என்பதும் புரிகிறதல்லவா?

* * *

# 7. தொடர்புக்கான அடிப்படைக் கிறிஸ்தவக் கொள்கைகள்

## 1. நற்செய்தி அனைவருக்கும் உரியது

கொடையாகப் பெற்றீர்கள் கொடையாகவே வழங்குங்கள் (*மத் 10:8*) என்று படிக்கின்றோம். ஆனால் இன்றைய செய்திப் பரிமாற்றத்தில் பணம் செலுத்திச் செய்திகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். குறிப்பாக, மாஸ்டர் கார்டு, சிட்டி கார்டு இவைகளுக்குத்தான் மதிப்பு அதிகம். மக்கள் மையமாகக் கொண்ட நற்செய்திக்கும், தொழில் நுட்பத்தை மையமாகக் கொண்ட சமூக மாற்றத்திற்கும் இடையேயான போராட்டமாகவே, தொடர்பியலுக்கான இறையிலாக்கம் அமைகின்றது. ஆக, நற்செய்தியின் அடிப்படை நோக்கம், இறையரசை உருவாக்குதல் என்பதாகும். அதற்கான அறிவிப்பும் ஈடுபாடும் இயேசுகிறிஸ்துவில் முழுமையாக வெளிப்பட்டது என்று நம்புகிறோம்.

அவர் முதலில் எருசலேம் கோவிலுக்குள் சென்றபோது இறைவாக்கினர் எசாயாவின் சுருளேட்டை அவரிடம் கொடுத்தனர். அவர் அச்சுருளேட்டை விரித்து “கடவுளுடைய ஆவி என் மேலிருக்கிறது. வறியவருக்கு நற்செய்தியை அறிவிக்க அவர் என்னை அருட்பொழிவு பண்ணினார். சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், பார்வையற்றோருக்குப் பார்வையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும், கடவுளுடைய விடுதலை ஆண்டைப் பிரசித்தப்படுத்தவும் அவர் என்னை அனுப்பினார்” (லூக்கா *4:17-19*; எசாயா *61:1-3*) என்கின்ற பகுதியை வாசித்தார் என்று காண்கிறோம். அப்படியானால், இயேசு தம்மை அனுப்பின கடவுளின் நோக்கத்தை நிறைவேற்றவே இவ்வுலகத்தில் வந்தார் என்பதும் உண்மையாகிறது. எனவே, இயேசுவின் கூற்றுப்படி



“ஆண்டவரே, ஆண்டவரே என்று என்னிடம் சொல்லுகிற ஒவ்வொருவருமல்ல பரலோகத்திலிருக்கிற என் தந்தையின் விருப்பத்தைச் செய்கிறவரே விண்ணகத்துள் வருவார்” என்கிறார். (மத்தேயு *7:21*)

இயேசுவுக்கு ஏற்பட்ட சோதனைகள், ஆன்மிக உந்துதல்கள், தனிமையான அனுபவங்கள் போராட்டங்கள், இறை வேண்டுதல்கள் அவையாவும் இயேசுவை முழு மனிதராகவும் கடவுளின் மகனாகவும், இறையரசின் செயல் வீரராகவும் உருவாக்குவதில் பெரும் பங்குவகிக்கின்றன. எனவே நற்செய்தி அனைவருக்குமுரியது என்பதற்குச் செயல்வடிவம் கொடுக்க நமக்குச் சரியான தருணம் கிடைத்திருக்கிறது. இயேசுவின் குறிக்கோளை உணர்ந்து செயல்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தல், இறையரசின் தகவுகளுக்கு ஏற்ப வாழ முயல்தல், இறையரசை உருவாக்குவதில் உள்ள செயல்பாடும் அவரைச் சார்ந்த அணுகுமுறையையும் உருவாக்குதல், போன்றவை இன்றைய கால கட்டத்தில் தேவையானவைகளாக இருக்கின்றன.

அவருடைய பாடு மரணமும் அதைத் தொடர்ந்து வருகின்ற உயிருற்றெழுதலும் பல்வேறு உண்மைகளை வெளிப்படுத்துகின்றன. அவருடைய அரசியல் ஈடுபாடும் ஆதிக்கவர்க்கத்துடன் அவருக்கிருந்த முரண்பாடுகளும் உரோம அரசில் விளிம்பிற்குத் தள்ளப்பட்ட மக்களிடம் அவர்காட்டிய பரிவும் பாசமும் ஈடுபாடும், நற்செய்தி அனைவருக்குமுரியது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றன. ஆனால் இயேசு என்கிற பெயரை அறிவிப்பதற்காக மட்டும் தகவல் தொடர்புச் சாதனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அதுவல்ல நற்செய்தி. மாறாக, இயேசுகாட்டிச் சென்ற விழுமியங்களைத் தகவுகளை அடிப்படையாகக் கொண்ட நற்செய்தி அனைவருக்கும் சென்றடைய தகவல் தொடர்புச் சாதனங்களோ அல்லது தகவல் தொழில் நுட்பமோ எந்த அளவுக்குப் பயன்பட முடியும் என்கின்ற வினா எழுப்பி, ஒரு விழிப்புணர்வுக்குள்ளாக உந்தப்பட்டு, அதன் மூலம், அனைவருக்கும் நல்ல செய்தி கிடைக்க வழி செய்வதே நற்செய்தியாகும்.

## 2. இறை தொடர்பு சமுதாயத்தை உருவாக்குகிறது

கிறிஸ்தவத்தின் அடிப்படையே கூடிவருதல் ஆகும். வேறெந்த சமயத்திலும் இல்லாத ஓர் அரிய வாய்ப்பு கிறிஸ்தவ சமயத்துக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆண்களும் பெண்களும், பெரியவர்களும், சிறியவர்களும், வாலிபப்பிள்ளைகளும் இணைந்து வழிபாடு நடத்தும் சூழல் நம்முடைய நாட்டில் சிறப்பானதாக உள்ளது. ஆனால் இந்த கூட்டுவாழ்க்கைக்கும், கூட்டுமுயற்சிக்கும் எதிரான ஒரு கலாச்சாரம் கிளம்பிக் கொண்டிருக்கிறது. தற்போது வளர்ந்து வரும் தொழில் நுட்பங் களினால் தனி மனித வாழ்க்கையும், தனிமனித கோட்பாடும் வலியுறுத்தப் பெறுகின்றன.

சமுதாய உருவாக்கத்தை ஆங்கிலத்தில் கிரியேற்றிங் கம்யூனிற்றீஸ் (Creating Communities) என்று மொழி பெயர்க் கிறோம், கம்யூனியன் அல்லது கம்யூனிற்றி என்னும் சொற்களுக்கு வேர்ச்சொல்லான கிரேக்கச் சொல் 'கொய்னோனியா' என்பதாகும். பவுலடியாரின் சிறப்பான கருத்தாக்கங்களில் ஒன்று (In Christ) 'கிறிஸ்துவுக்குள்' என்னும் கோட்பாடாகும். நாமெல்லாரும் கிறிஸ்துவுக்குள்ளாக *(கலாத்தியர் 3:28)* ஒன்றிணைக்கப்பட்டிருக்கின்றோம், ஐக்கியப்பட்டிருக் கின்றோம் என்பதை அவர் பல்வேறு சூழல்களில், பல்வேறு எடுத்துக்காட்டுகளின் மூலம் விளக்க முயல்கிறார். நாமெல்லாரும் ஒரே சிந்தையுடையவர்களாயிருக்க வேண்டும். என்பதை 'உடல்' பற்றிய கருத்தாக்கத்தின் மூலம் விளக்குகிறார்.

கொரிந்தியர் சபையில் உண்டாயிருந்த பிரிவுகளைச் சரி செய்வதற்கும் அங்கே ஓர் ஒற்றுமையை உருவாக்குவதற்கும், எல்லோரும் ஒரே சமூகமாகக் கூட்டி இணைக்கப்பட்டவர்கள் என்கிற உண்மையைக் 'கிறிஸ்துவின் உடல்' என்னும் உவமையைக் கொண்டு விளக்க முயல்கிறார். உடல் ஒன்று , அதற்கு உறுப்புகள் பல. அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும் சரீரம் எப்படி ஒன்றோ அப்படியே கிறிஸ்துவும் ஒன்று. நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும், எல்லோரும் ஒரே ஆவியினால், ஒரே சரீரத்துக்குள்ளாக திருமுழுக்கு பெற்றோம். ஒரே ஆவியில் தாகந்தீர்க்கப்பட்டோம்



*(1 கொரிந்தியர் 12:12,13)*. எனவே ஐக்கியம் என்ற சொல் கிறிஸ்தவப் பற்றுறுதியின் மிகமுக்கியமான சொல்லாட்சியாக இருக்கிறது.

ஆனால் இன்றைய சூழலில், கூட்டுவாழ்க்கை, ஐக்கியம், ஒற்றுமை, ஒரே சிந்தை, ஒப்புரவாகுதல் இவற்றிற்குச் சவால்விடும் போங்கு உள்ளது. குறிப்பாக சமூக மாற்றத்தின் குறிப்பிட்ட தேவைக்காக உருவாக்கப்பட்டத் தொழில் நுட்பங்கள், நாளடைவில் வாழ்க்கையின் மையமாகி, அவற்றைத் தவிர்க்க முடியாத நிலைக்கு மக்கள் தள்ளப்படுகின்றனர். இதனால் உருவாகும் நியதியைத் தொழில் நுட்ப நியதி, (Technological determinism) என அழைக்கின்றோம். அதனால் சமூக முன்னேற்றத்தில் உருவாக்கப்படுகின்ற புதிய தொழில் நுட்பங்கள் தவிர்க்க முடியாத தேவை என்கின்ற கருத்தியல் நிலைப்பாடு உருவாகின்றது. எனவே முற்றிலும் சார்பு நிலை ஏற்படுகின்றது.

மக்களை மையமாகக் கொண்ட சமூக மாற்றம் தடை படுகின்றது. மாறாக, தொழில் நுட்ப சார்பு நிலையை மையமாகக் கொண்ட சமூகம் உருவாக்கப்படுகின்றது. எடுத்துக்காட்டாக, தொலைக்காட்சிப் பெட்டி அறிமுகப்படுத்தப் பட்டன. குறிப்பாக வெள்ளிக்கிழமை இரவு நேரங்களில் அதனை ஒளிபரப்பினர். அந்தவேளை, வார வழிபாடு திருச்சபைகளில் நடப்பது வழக்கமாக இருந்தது. ஒளியும் ஒலியும் பார்க்க வேண்டும் என்பதற்காகவே, திருச்சபைக்கு வருவோர் எண்ணிக்கையும் குறைந்தது. இதனால் நாளடைவில் வழிபாட்டு நேரமும் பெருவாரியான சபைகளில் புதன்கிழமைக்கு மாற்றியமைக்கப் பட்டது. இருபது ஆண்டுகளுக்குப் பிறகு, இன்று இதுபோன்ற கலாச்சாரம் மேலும் பரவலாகியிருக்கிறது. இதனால், சமூகங்கள் உருவாக முடியாமல் போய்விடுகின்றன. தனிமனிதப் போங்கும், தொழில் நுட்ப நியதியும் ஆட்டிப்படைக்கின்றது.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் போதனைகள் இதுபோன்ற கலாச்சாரங்களை, தகவுகளை எதிர்த்துக்கேள்வி எழுப்புவதாகவே இருந்தன. எடுத்துக்காட்டாக அவரின் போதனைகள் இதுபோன்ற கலாச்சாரங்களை, தகவுகளை அறைகூவுவதாக அமைந்தன. தகப்பனையும் தாயையும் மதிக்காமல், கொர்பான் செலுத்தி அந்தக் கடமையை பூர்த்தி

செய்துவிடலாம் என்ற தனிமனித போங்கை தட்டிக்கேட்டார் (மத்தேயு 15) தனிமனித சொத்து ஒருவருக்கு மீட்பு வழங்காது. அதனை சக மக்களுடன் பகிர்ந்து வாழ்வதே உண்மையான மீட்பு எனச்சுட்டிக் காட்டினார் (மத்தேயு 19:16-24). இறையரசில் முன்னுரிமை பெறுபவர்கள் சிறுவர்கள் எனவே அவர்களை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றார்(மத் 19:13). வாழ்வுரிமை மறுக்கப்பட்டோர் அனைவருக்குரியது இறையரசு என்று உறுதியாக அருளுரையாற்றினார் (மத் 5:1-10). எனவே, அனைவரையும் ஒருங்கிணைத்துச்செல்லும் சமூக உருவாக்கத்தை இயேசுவின் சிந்தையோடு கூட செயல்படுத்த அழைக்கப் படுகின்றோம்.

## 3. இறை - தொடர்பு பங்கேற்பை உருவாக்குகிறது

கிறிஸ்தவத் தொடர்பு என்பது பங்கேற்பை உருவாக்கு வதாக இருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக .தொடர் பாளருக்கும் செய்தியைப் பெற்றுக் கொள்பவருக்கும் இடையே இருவழித்தொடர்பு தேவையானதாயிருக்கிறது. இயேசுகிறிஸ்து, தம்முடைய திருப்பணியில் பலரை இணைத்துக் கொண்டார். கடவுளின் திருவுள விருப்பத்தை நிறைவேற்ற, கடவுளுக்கும் மனுமக்களுக்கும் இருவழித்தொடர்பு ஏற்பட ஒரு பாலமாக அமைத்தார். உண்மையில், மனுமக்களின் வரலாற்றில் கடவுளின் பங்கேற்பு, இயேசுவில் நிறைவேறியதாக யோவான் நற்செய்தி நூலில் வாசிக்கின்றோம். வாக்கு மனிதர் ஆனார். யோவான் 1:1 இல் உள்ள அந்தச் செய்தி கடவுளின் ஈடுபாட்டை, வலியுறுத் துவதாக இருக்கிறது. இது தொடர்ந்து நடைமுறைப்படுத்து வதையும், செயல்முறைப்படுத்துவதையும் இயேசுகிறிஸ்துவின் அருட்பணி வாயிலாக உணர்ந்து கொள்கிறோம்.

பெண்கள், சிறுவர்கள், ஏழைகள், ஒன்றுமில்லாதவர்கள், உழைப்பாளிகள், ஓரங்கட்டப்பட்ட மக்கள், விளிம்பிற்குத் தள்ளப்பட்ட மக்கள், தங்களுக்காகப் பேச முடியாதவர்கள், வாழ்வுரிமை மறுக்கப்பட்டவர்கள் எனப் பல நிலையில் உள்ளவர்களை மனிதர்களாகவே மதிக்காத அந்தக் காலக் கட்டத்திலும்கூட இயேசுகிறிஸ்து தம்முடைய திருப்பணியின் உடன் பணியாளர்களாக இணைத்துக் கொண்டார். எடுத்துக் காட்டாக, திருப்பணிக்குப் பன்னிரு ஆண்கள்தானே தெரிவு



செய்யப்பட்டார்கள். பெண்களுக்கு அதில் பங்கில்லையே என்று பேசுகின்ற கூட்டத்தினரிடையில் பெண்களையும் தம்மோடு இணைப்பணியாளர்களாக இணைத்துப் பணியாற்றினார். என்பதை லூக்கா 8:1-3 வரையுள்ள பகுதிகளில் படிக்கின்றோம். அங்கே யோவன்னாள், சூசன்னாள், மகதலேனே மரியாள் இன்னும் மற்ற 70 பேரும் அவரோடு கூட பணியாற்றி அவருக்கு உதவியாயிருந்தார்கள் எனக் காண்கிறோம்.

இறையாளுகைக்கான பணிகளில் பெண்கள் பங்கு பெற முடியாதபடிக்கு தள்ளிவைக்கப்படுகின்ற போங்கு திருச்சபை களிலும், ஏன் சமுதாயத்திலும் உள்ளது. அதற்கு ஒத்துப் போகின்ற போங்கையே இன்றைய வெகுதிரள் தொடர்புச்சாதனங்களும் ஊக்கப்படுத்துகின்றன. தொடர்புச் சாதனங்களில் பெண்கள் ஒரு நுகரும் பொருளாகவே காட்டப்படுகின்றனர். இதையே, இருபத்து நான்கு மணிநேரமும் உள்வாங்கிக் கொண்டிருக்கும் மக்கள் கூட்டம், தங்களுக்குள்ளாளவே ஒரு பிரிவினையை வளர்த்துக் கொண்டு பெண்களையும் பிறரையும் விளிம்பிற்கு ஒதுக்கிவிட வாய்ப்பிருக்கின்றது. இதனால் தொடர்பு முறையில் தடை ஏற்பட்டு, ஒரு வழித்தொடர்பு மட்டுமே நிகழ வாய்ப்பிருக்கிறது. எனவே, ஆதிக்க உணர்வு மேலோங்கும், பங்கேற்புக்குறையும், உண்மையை ஆராயும் பக்குவமும், அரவணைத்துப் போகும் சிந்தையும் மழுங்கடிக்கப்படும்.

## 4. இறை - தொடர்பு விடுதலையளிக்கிறது

இயேசுகிறிஸ்துவின் பிறப்பின் செய்தி பற்றிப் பல்வேறு இறைவாக்கினர் முன்னறிவித்துள்ளனர் என்று திருமறை சொல்கிறது. ஏற்கனவே குறிப்பிட்டபடி எசாயா இறைவாக்கினர் சொல்லியது போன்று கடவுளின் விடுதலை ஆண்டை (எசாயா 61:3) அறிவிக்கும்படி இயேசு உலகத்திற்குள் அனுப்பப்படுகிறார் என்பது முன்னுரைக்கப்பட்டது. இந்த விடுதலையின் ஆண்டு யூபிலி ஆண்டைக் குறிக்கும். இந்த ஆண்டில் பல்வேறு வகையான அடிமைத்தனத்திற்குள்ளாக இருக்கும் மக்கள் அவற்றிலிருந்து விடுபடவேண்டும் என்பதே அதன் சிறப்பழுத்த மாகின்றது.

கொத்தடிமை முறையிலிருந்து விடுதலை, கடன் தொல்லை யிலிருந்து விடுதலை, நிலத்திற்கு விடுதலை, ஏழ்மை நிலை

யிலிருந்து விடுதலை, ஆக சமூக பொருளாதார, அரசியல், சமய, கலாச்சார, கருத்தியல் ரீதியான அடிமைத்தனங்களிலிருந்து விடுதலையை அறிவிக்கும் ஆண்டை அறிவிக்கவே இயேசு உலகத்திற்குள் வந்தார் எனக் காண்கிறோம்.

சமயப்பிடியில் ஊறிப்போன மறைநூல் வல்லுநர்கள், மனிதத்தை மதிக்க மறந்துவிட்ட நிலையில், மனிதத்தின் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டினார். எடுத்துகாட்டாக, ஓய்வு நாளில் சூம்பின கையுடையவரைக் குணப்படுத்தினார் இயேசு. (மத்தேயு 12:9-14). "மனிதருக்காக ஓய்வு நாளேயில்லாமல் ஓய்வுநாளுக்காக மனிதரல்ல" என்றார் (மாற்கு 2:27). அன்பு, அருள், கனிவு, பாசம், இரக்கம், இவைகளை வெளிக்காட்ட வேண்டிய கோயில் கட்டடம் (எருசலேம் திருக்கோயில்) வெறும் பணம் சம்பாதிக்கும் இடமாக, சூதாட்டக்களமாக மாறி விட்டதைக் கண்டித்தார், எதிர்த்தார் (யோ 2:16).

இன்றும், இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னும் இதே நிலைதான் நீடிக்கின்றது. எடுத்துக்காட்டாக, இன்றைய தொடர்பு முறைகளும் பல்வேறு வகையான அடிமைத் தனத்திற்குள்ளாக நம்மை இட்டுச் செல்வதாய் இருக்கின்றன. குறிப்பாக விளம்பர உலகம் காட்டும் கவர்ச்சியில் மயங்கிப் போய், நிற்கின்ற மக்கள் கூட்டம் ஏராளம். சந்தைப் பொருளாதாரமும், நுகர்வோர் கலாச்சாரமும் இணைந்து மக்களின் வாங்கும் சக்தியைக் கூட்டுவதாகவும், வேலை வாய்ப்பை உருவாக்குவதாயும் பொருளாதார முன்னேற்றத்தைக் கொண்டு வருவதாயும் அறிவிக்கிறது. உண்மையில் நம்மில் பலர் இதனை நம்பி பலவிதமான அடிமைத்தனத்திற்குள்ளாக நம்மை நாமே உட்படுத்திக் கொள்கிறோம். சந்தைப் பொருளாதாரம் காட்டும் பொருள்களை, வாங்குவதின்மூலம், தவறான சமூக மதிப்பினைத் தேடுகின்றோம் அல்லது உருவாக்கிக் கொள்கிறோம். இதிலிருந்து விடுதலை கொடுக்கக்கூடியதாய் நம்முடைய தொடர்பு முறைகள் அமைய வேண்டும்.

மேலும், இந்திய சமூகம் ஒரு பல்சமயச்சூழல் கொண்டது மட்டுமல்ல, பல்வேறு மொழி, கலாச்சாரப் பின்னணியங் களையும் கொண்டுள்ளது. ஆனால் அண்மைக்காலத்தில் சமய அடிப்படைவாதம் தலையெடுத்திருக்கிறது. எனவே, சமயவெறி



என்னும் அடிப்படைவாதத்திலிருந்து விடுதலை பெற, தொடர்பு முறைகள் உதவி செய்ய வேண்டும். கிறிஸ்துவுக்குள் எவ்வகை வேறுபாடும் கிடையாது என்று நம்புகிறவர், சாதிய அடக்கு முறை ஒழிய, அதிலிருந்து விடுதலை கிடைக்க, சரியான தொடர்புக் கருவிகளைப் பயன்படுத்த வேண்டும்.

### 5. இறை - தொடர்பு பண்பாட்டை வளர்க்கிறது

ஒரே கலாச்சாரம், அதுவும் ஆதிக்கக் கலாச்சாரம் என்பதை திருமறை ஒருபோதும் ஏற்றதே இல்லை. தொடக்கநூல் (ஆதியாகமம்) பதினொன்றாம் அதிகாரத்தில் பாபேல் கோபுரத்தின் அழிவைக் குறித்துப் படிக்கின்றோம். அங்கே, பூமியெங்கும் ஒரே மொழியும், ஒரே விதமான பேச்சும் இருந்ததாய் சொல்லப்பட்டிருக்கின்றது. (ஆதியாகமம் 11:1-9) இதனால் மக்கள் அனைவரும் இணைந்து ஒரு கோபுரத்தை எழுப்புகின்றனர். இவர்கள் கட்டுகிற நகரத்தையும், கோபுரத் தையும் பார்க்கிறதற்குக் கடவுள் இறங்கினார் (11:5) மனிதர்கள் ஒரே மொழி பேசினபடியால் தானே இப்படிச் செய்தார்கள். இதனால் அவர்கள் பேசும் மொழி ஒருவருக்கொருவர் புரியாதபடி செய்கிறேன் என்று சொல்லி அப்படியே அவர்களை அவ்விடத்திலிருந்து பூமியின் மீதெங்கும் சிதறிப்போகப் பண்ணினார். அப்பொழுது நகரம் கட்டுகிறதை விட்டு விட்டார்கள் (11:8) என்று படிக்கின்றோம்.

இதை இன்றைய சூழலுக்குப் பொருத்திப் பார்க்கும்போது, தற்காலங்களில் கணனிப்பண்பாட்டினால் உலகம் முழுமையும், இணையம் என்பதின் மூலம் (Internet) ஒன்றிணைத்துச் செய்கலை நடைமுறையைக் (Vertual Reality)கொண்டுவர முடியும் என பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கான அடிப்படை மொழியாக ஆங்கில மொழி ஊக்குவிக்கப் படுகின்றது. எனவே ஆங்கிலம் தெரிந்தவர்கள் மட்டுமே இதில் தேர்ச்சி பெற இயலும். இதனால் பல்வேறு மரபுகளைச் சார்ந்த மக்களும் பண்பாடுகளும் ஓரங்கட்டப்பட்டு ஒரே பண்பாடு ஊக்கப்படுத்தப்படுகின்றது.

இவ்வகைத் தொழில் நுட்பங்களினால் ஐந்து விழுக்காடு மக்களே பயனடைகின்றனர், பெருவாரியான மக்கள் பயனடைவதில்லை என்பதுவே உண்மையாயிருக்கும் நிலையில் இதைக் குறித்துக் கவலைப்பட வேண்டிய தேவை என்ன? என்கின்ற வினாவும் உருவாகின்றது. உண்மையில், இவ்வகை ஆதிக்கப் பண்பாட்டுத் தகவுகள் பெருவாரியான மக்கள் பண்பாட்டைப் பாதிக்க கூடியதாக உள்ளன. நுகர்வுப் பண்பாட்டு அணுகுமுறை மக்களின் வாழ்க்கை முறை, எண்ணங்கள், மனப்பான்மை இவற்றை நுகர்வோர் பண்பாட்டுத் தகவுகளுக்கு ஏற்ற வகையில் இட்டுச் செல்வதை எடுத்துக்காட்டாக கூறலாம். இப்படிப்பட்ட வளர்ச்சியைத்தான் முன்னேற்றம் எனப் பேசுகின்றனர்.

ஒரு புறம் வெகுதிரள் தொடர்புச் சாதனமும், இன்னொரு புறம் கணனியும் அதோடு இணைந்துள்ள இணையமும், மக்கள் முன்னேற்றத்திற்காகக் கண்டுபிடிக்கப்பட்டவையே என்றாலும், இன்று அப்படியொரு நிலை மாறி, மாயையான உலகிற்குள் சென்று கொண்டிருக்கின்றோம் என்பதே நடைமுறை வாழ்க்கையாயிருக்கிறது. தகவல் புரட்சி, செய்தி புரட்சி என்கின்ற பெயரில் பன்முகப் பண்பாடுகள் ஒரங்கட்டப்பட்டு ஒரே பண்பாடு ஊக்குவிக்கப்படுகின்றது. ஆனால் மாற்றுப் பண்பாடு என்பது மக்கள் பண்பாடு ஆகும். இவை மறைந்துபோன நம் அடையாளங்களுக்கு மறு உயிர் கொடுக்கும்.

இந்த யுகத்தில் இன்னொரு பாபேல் கோபுரம் உருவாகாமல் தடுப்போம். ஆதிக்கக் கலாச்சாரத்தை அப்புறப்படுத்தி, பல்வேறுப் பண்பாடுகளை வளர்த்தெடுப்போம்.

## 6. இறை - தொடர்பு இறைவாக்குத் தன்மையுடையது

இறையருளின் துணைகொண்டு பேசுதலை இறைவாக்குரைத்தல் என அழைக்கின்றோம். இறைவாக்கினர் என்போர் மக்களுக்காகக் கடவுளிடத்தில் பரிந்து பேசுகிறவர்களாய் இருக்கின்றார்கள். அதேப்போல கடவுளின் வாக்கினை மக்களிடத்தில் சொல்லுகிறவராயும் இருக்கிறார். "மோசேக்கு நிகரான இறைவாக்கினர் இசுரயேலில் பிற்காலத்தில் தோன்றியதில்லை; அவரோடுதான் ஆண்டவர் முகமுகமாய் உரையாடினார் என்று இணைச்சட்டம் (உபாகமம் 34:10) சுட்டுகிறது.



திருமறையில் பிற இறைவாக்கினர்கள் பற்றியும் அவர்களின் நிலைப்பாடுகள் பற்றியும் பல்வேறு இடங்களில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

இப்பணி வெறும் தூதுப்பணி எனக் கருதுதல் தவறாகும். மாறாக, இது ஒரு, சுட்டிக்காட்டும் பணியாகும் மனுமக்கள் தவறு செய்கிறபோதெல்லாம், அவர்கள் தங்களைத் திருத்திக் கொள்வதற்காக இடித்துரைக்கும் திருப்பணியாகும். ஏனெனில், கடவுள் நீதியை விரும்புகிறவர், சமாதானத்தை அருளுகிறவர், அப்படிப்பட்ட கடவுளுக்கும் மனுக்குலத்திற்கும் இடையே சரியான ஒரு புரிந்துகொள்ளுதலை, உறவை உருவாக்குவதிலே இறைவாக்குரைப்போரின் பங்கு சிறப்பானதாக இருக்கிறது.

எட்டாம் நூற்றாண்டு இறைவாக்கினர் ஆமோசு அவர்களின் சிறப்பழுத்தம் நாம் யாவரும் அறிந்ததே அதாவது, அக்காலச் சூழலில் வாழ்ந்த மக்களில் பெரும் பணக்காரர்கள், ஏழைகளைச் சுரண்டினர், பணத்தை வட்டிக்குக் கொடுத்து மக்களின் மீது கடன் சுமைகளைப் பெருக்கினர், ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தினர் மட்டும் பெருவாரியான ஏழை மக்களைச் சுரண்டி, ஏமாற்றி, வஞ்சித்தே வாழ்ந்தனர். அதைப் பொறுக்காத ஆமோசு, இறைவாக்கின் மூலம் கடிந்துகொள்கிறார். ஏழைகளை ஒரு சோடி செருப்பிற்கு விற்றுப் போட்டீர்களே என்கிறார். (ஆமோஸ் 2:6) நீங்கள் தரித்திரனை மிதித்து தானியவரி வாங்குகிறீர்கள் (ஆமோஸ் 5:11) எனச் சுட்டுகிறார். நியாயத்தை நஞ்சாகவும், நீதியின் கனியை எட்டியாகவும் நீங்கள் மாற்றினீர்களே (ஆமோஸ் 6.12) என கண்டிக்கிறார். இதனால் நீங்கள் செலுத்தும் பலியையும், கொண்டாடும் திருவிழாக்களையும் நான் பகைத்தேன் (5.22) என்று கடவுள் சொல்லுவதாக மக்களிடம் பேசுகிறார் இதன் மூலம் இறைவாக்கு என்பதின் தன்மை சுட்டிக்காட்டுதல் என்று புரிகிறதல்லவா?

இன்றையச் சூழலில் உள்ள தொடர்பு முறைகளில் சுட்டிக் காட்டும் பண்பு இருக்கிறதா என்ற வினாவை எழுப்பிப்பார்க்க வேண்டும். பெரும்பாலான தருணங்களில், ஒத்துப்போதல் என்பதினாலேயே பல சிக்கல்கள் தீர்வு காணப்படாமல் போய்விடுகின்றன. கடவுளின் நீதிக்கடுத்த செயல்களில் தவறுகள் சுட்டிக்காட்டப்பட்டு, அவைகள் மேற்கொள்ளப் பட்டு,

தடைகள் தகர்த்தெறியப்பட்டு, மக்கள் நீதிக்குச் செவிமடுக்க வேண்டும். அதையே செயல்படுத்தவும் வேண்டும். அதற்கான தொடர்பு யுத்திகள் கையாளப்பட வேண்டும்.

## 7. இறை - தொடர்பு இருளை அகற்றுகிறது

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் மலைப்பொழிவில் மிகச்சிறப்பான வாசகங்கள் நற்பேறுபெற்றோர் குறித்ததாகும். இவற்றைத் தங்களுடைய வாழ்க்கையில் நடைமுறைப்படுத்து கிறவர்களைப் பார்த்து, இயேசு சொல்லுவது: யாதெனில், "உலகத்திற்கு வெளிச்சம்" நீங்களே.. உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்தில் இருக்கிற உங்கள் பிதாவை மகிமைப் படுத்தும்படி உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாக பிரகாசிக்கக் கடவது (மத்தேயு 5:14). பிலிப்பியர் மடலில் "உயிருள்ள வாக்கியத்தை உயர்த்திப்பிடித்து உலகத்தில் சுடர்களைப் போலக் காணப்படுகிற நீங்கள்" (பிலிப்பியர் 2:14) என பிலிப்புப்பட்டணத்தாரைக் குறித்த சாட்சியைப் படிக்கின்றோம். அதேபோல எபேசியர் மடலில் "நீங்கள் வெளிச்சத்தின் பிள்ளைகளாயிருக் கிறீர்களே" (எபேசியர் 5:8) என்று படிக்கின்றோம்.

இதனால் என்ன? இதற்கும் தொடர்புக்கும் என்ன தொடர்பிருக்கிறது எனக் கேள்வி எழும்புவது இயல்பே உண்மையில், அடிப்படையில், தொடர்பிருக்கிறது.

ஒருவர் அறியாமையில் வாழும்போது, கல்வியறிவில்லாமல் இருக்கும்போது, மனிதம் மறுக்கப்பட்ட நிலையில், உணர்வுகள் மழுங்கடிக்கப்பட்ட நிலையில் இருக்கும்போது, அவரை இருளுக்குள் இருக்கும் மனிதர் என அழைப்பதுண்டு. அதே போல இருட்டடிப்புக்குள்ளாக வாழும் மக்கள் கூட்டத்தினரின் வாழ்க்கை எப்பொழுது விடியுமோ? அதாவது எப்பொழுது ஒளிவீசுமோ எனப் பேசுவதும் இயல்பே. தற்காலங்களில் இப்படி இருட்டடிப்புக்குள்ளாக வாழும் பெரும்பான்மை மக்களின் வாழ்க்கையில் நம்பிக்கை ஒளிவர தகவல் பரிமாற்றம் முறையாக நடைபெற்றால் கல்வி அறிவு, (விழிப்புணர்வுக் கல்வி), பிற உதவிகள் செய்துகொடுத்தால் அவர்களின் வாழ்க்கையில் ஒளிபெறச் செய்யலாம்.



இழந்துபோன சாயலை மீண்டும் பெற்றுக்கொள்ள உதவலாம் என்பதே தொடர்பியலின் அடிப்படை நோக்கம் ஆகும். அந்த வகையில் எல்லாரும் ஒளியின் பிள்ளைகளாய் மாற தொடர்புமுறைகள் உதவிசெய்வதாய் இருக்கவேண்டும். எனவே நாம் கற்றுக்கொள்ளும் பாடங்கள், நாம் காணும் காட்சிகள் நம்மை ஒளியின் பாதைக்குள்ளாக வழிநடத்தவேண்டும். ஆனால் இன்றைக்குள்ள தகவல் தொழில் நுட்பங்கள், உண்மையில் மக்கள் ஒளி பெற உதவுகின்றனவா என்ற வினாவை நாம் ஒவ்வொருவரும் கேட்டுப் பார்க்கவேண்டும்.

தகவல் பரிமாற்றம் என்பது திரித்துச் சொல்வதாக இருப்பதாயும், மனித உரிமைக்கு மாறானதாகவும் இருக்கிறது. எடுத்துக்காட்டாக உலகின் தொண்ணூறு விழுக்காடு செய்திகள் ஐந்து செய்தி நிறுவனங்களினால் கட்டுப்படுத்தப்படுகின்றன. அவைகள் முறையே [TASS, REUTER, AFP, A.P, U.P.I.] என்பதாகும். இவர்கள், குறிப்பாக மூன்றாம் உலக நாடுகளைப் பற்றி என்ன செய்தி சொல்கிறார்களோ அவைகள் பெரும்பாலும், அம்மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதாக இல்லை.

இது ஒருபுறமிருக்க, சந்தைப் பொருளாதாரத்தின் தகவுகள், பல்வேறு, சமூகமயமாக்கலின் ஊடாக, மக்களை மேலும் இருளுக்குள்ளாக இட்டுச்செல்கிறது.

கடவுள் உலகைப் படைத்தபோது "வெளிச்சம் உண்டாகுக" என்றார். ஒளி உண்டாயிற்று (ஆதியாகமம் 1:3) அதுவரை தண்ணீர்களின் மேல் அசைவாடிக் கொண்டிருந்த கடவுளின் ஆவி செய்கைவழித் தொடர்பிலிருந்து, வாக்கு வழித் தொடர்பின் மூலமாய் ஒளி உண்டாக்கினதால் இருள் அகன்றதனைப் பார்க்கிறோம். இயேசு கிறிஸ்துவின் பிறப்பும் இருளில் இருக்கின்ற மக்களுக்கு வெளிச்சத்தைக் கொண்டுவரும் என்ற இறைவாக்கு எசாயா இறைவாக்கினர் மூலம் முன்னுரைக்கப்பட்டது (எசாயா 9:2). ஆக இறைத்தொடர்பு மக்களை ஒளியின் பாதைக்குள் இட்டுச்செல்வதாக இருக்கவேண்டும்.

## 8. இறை - தொடர்பு ஆளுமையை உறுதிப்படுத்துவதாய் இருக்கிறது

ஆளுமை என்பது முழு மனிதத்தையும் குறிக்கும் ஆன்மா, சிந்தனை, உடல் இவை மூன்றும் இணைந்ததாகும். இம்மூன்றில் எது குறைவுபட்டிருந்தாலும், கடவுளோடு நாம் தொடர்பு கொள்ள இயலாது என்கின்ற எண்ணம் தவறு. மேலும் நாம் கடவுளோடு கொண்டுள்ள தொடர்பு நம்முடைய ஆளுமையை உறுதிப்படுத்துவதாய், ஆற்றல்படுத்துவதாய், பலப்படுத்துவதாய் உள்ளது. மனிதர்களின் ஆளுமைக்கு மதிப்புக் கொடுக்கிறவர் கடவுள். மோசே தம்முடைய இயலாமையைத் தெரிவித்தபோது *(யாத் 3.11)* அதற்குக் கடவுள் "நான் உன்னோடு இருப்பேன்" என்றார்.

ஆகாப் அரசனும், எசபேலும், எலியாவைக் கொலை செய்ய போவதாய் மிரட்டியதாய்க் கேள்விப்பட்டுத் தம் உயிரை காப்பாற்றிக் கொள்ளும்படியாக *(1 அரசர்கள் 19:3)* யூதாவைச் சேர்ந்த பெயர்செபாவுக்குப் போய் விட்டார் எலியா என இறைவாக்ினரைப் பற்றிப் படிக்கின்றோம். அங்கே கடவுளின் குரல், "எலியாவே, இங்கே நீ என்ன செய்கிறாய்?" *(1அரசர் 19.9)* எனக் கேட்கிறதாகப் பார்க்கிறோம். அதன்பிறகு பெருங்காற்றும் பூமி அதிர்ச்சியும், அக்கினியும் வந்தன. அதிலெல்லாம் கடவுள் பேசவில்லை. மாறாக, ஆழ்ந்த அமைதிக்குப் பின்னால் கேட்ட மெல்லிய ஓசை *(1அரசர்கள் 19:12)* மீண்டும் எலியாவிடம் பேசியது. ஒப்படைப்புள்ள மக்கள் ஏழாயிரம் பேரை மீதியாக வைத்திருக்கிறேன் *(19:18)* என்று சொல்லி, எலியாவை ஊக்கப்படுத்தி அனுப்புகிறதைப் படிக்கின்றோம். படைப்பின் தொடக்க கட்ட நாயகனும் நாயகியும் தவறு செய்து விட்டோம் என்று கூனிக் குறுகி ஏதேன் தோட்டத்தில் ஒளிந்து கொண்டிருக்கையில் கடவுளின் மெல்லிய தொனி, "ஆதாமே! நீ எங்கே இருக்கிறாய்?" எனக்கேட்டது. இதன் மூலம் கடவுள் மனுக் குலத்தோடு தொடர்பு கொள்ள விரும்புகிறார். அவர்களின் ஆளுமைக்கு மதிப்பு கொடுக்கிறார் என்பதும் புரிகிறது.

ஆனால் இன்றைக்குள்ள தொடர்பு முறைகள் மனிதர்களை இரண்டாம் பட்சமாகவும், கருவிகளை முதன்மையாகவும் நோக்குகிறது. வளர்ந்து வரும் நுகர்வோர் பண்பாட்டில், மனிதர்களுக்காக பொருள்களை விற்பதைக் காட்டிலும், புதிய பொருட்களை வைத்திருந்தால் சமூக மதிப்புக் கூடும் என்கிற போங்கே உள்ளது. இதனால் மனித ஆளுமை முதன்மையல்ல. அவர் பயன்படுத்தும் பொருளுக்கே முன்னிடம் தரப்படுகின்றது. குறிப்பாக குறிப்பிட்ட நிறுவனம் தயாரித்து வழங்கும் வீட்டுப் பயன்பாட்டுப் பொருள்களைத் (Philips, Worldpool, Prestige, Vedeocone, IFB…) உங்களுடைய இல்லங்களில் வைத்திருந்தால் வேலைப்பளு குறையும், மதிப்பும் உயரும் என போலியான விளம்பரங்கள் தரப்படுகின்றன. இவைகள் மக்களின் குறிப்பாக, பெண்களின் சமூக மதிப்பைக் கூட்டுவது கிடையாது. எவ்வளவு பொருள்கள் வைத்து, எவ்வளவு நேரம் உழைத்தாலும் பெண்களின் உழைப்புக்கேற்ற மதிப்பும், ஏற்பும் இன்னும் கொடுக்கப்படவில்லை.

திருமறையில் சொல்லப்பட்டிருக்கிறபடி அவள் கைகளின் பலனை அவளுக்குக் கொடுங்கள் அவள் செய்கைகள் ஊர் வாசல்களில் புகழப்படுவதாக *(நீதிமொழிகள் 31:31)* என்பதை மனத்தில் நிறுத்தியவர்களாய், உழைப்பாளிகள், பாடுபடுபவர்கள், ஆகிய அனைவரின் ஆளுமையும் உறுதிப்படுத்தப்பட, கடவுளின் மெல்லிய குரலுக்குச் செவிசாய்த்து, அதற்கேற்றாற் போல், தொடர்பு முறைகளை உருவாக்குவோம்.

## 9. இறை - தொடர்பு உரையாடலைத் தக்கவைக்கிறது

தொடர்பின் மிகத்தலையாய தன்மை, இருவழித்தொடர்பு என்பதாகும். செய்தி மூலத்திற்கும், செய்தி சென்று சேருமிடத்திற்கும் இடையிலான பின்னூட்டம் (feed back)நிகழ்ந்து கொண்டேயிருக்க வேண்டும். அவ்வாறு நிகழ்ந்து கொண்டிருக்கும் போதுதான் பரிமாற்றம் சரியாக நிகழ்ந்து, ஒரு பொது நிலையை அடைய முடியும்.

இயேசுகிறிஸ்துவின் திருப்பணியில், உரையாடல் வாயிலாக இருவழித்தொடர்பு தொடர்ந்து நடப்பதற்கான வாய்ப்புகள் அதிகமாக இருந்தன. தனி நபர்களோடு தொடர்பு கொள்ளும் போதும், குழுவினரோடு தொடர்பு கொள்ளும்போதும் வெகுதிரள் மக்களோடு பேசும்போதும், இயேசுகிறிஸ்து தமக்கென்று ஒரு பாணியைத் தெரிந்து கொண்டார். அந்த

அணுகுமுறை எப்போதும் உரையாடல் பாணியில் அமைந்திருந்தது. மிகவும் கருகலான கருத்துகளைக் கூட உரையாடல் பாணியிலேயே எடுத்துரைத்தார்.

ஒய்வு நாள் பற்றிய விவாதங்கள் (மத்தேயு 12:1-14); பாவமன்னிப்புக்கொடுக்கும் அதிகாரம் பற்றிய தர்க்கங்கள் (மத்தேயு 9:1-8); உயிருற்றெழுதல் பற்றிய சர்ச்சை (லூக்கா 20: 27-39); இறையாளுகைக்கான தகவுகள் (மத்தேயு 13); ஆண் பெண் உறவு நிலையிலுள்ள வேறுபாடுகள் (மத்தேயு 19:3-9) போன்ற உண்மைகளைச் சீடர்களுக்கும், தம்மைச் சுற்றியிருந்த மக்களுக்கும், தலைவர்களுக்கும் உரையாடல் பாணியிலேயே விளக்கினார். இதனால் தம்மிடம் தெளிவு பெற விரும்புவோர் என்ன கருதுகோள்களைக் கொண்டிருக்கின்றனர் என்பதனை விளக்கிக்கொள்ள ஏதுவாக இருந்தது. இவ்வகை இருவழித் தொடர்பினால் உரையாடல் தக்க வைக்கப்படுகின்றது.

## 10. இறை - தொடர்பு சுயத்தை விழிப்படையச் செய்கிறது

எசேக்கியேல் இறைவாக்கினருக்குக் கிடைத்த அழைப்பின் காட்சியின் மூலம், அவருடைய சுயம் விழிப்படைந்ததைக் குறித்து இங்குக் குறிப்பிட விரும்புகிறேன். "..... அப்பொழுது பேசுகிற ஒருவருடைய சத்தத்தைக் கேட்டேன். அவர் என்னை நோக்கி, மனுப்புத்திரனே, உன் காலூன்றி நில், உன்னுடனே பேசுவேன் என்றார். இப்படி அவர் என்னோடே பேசும் போது, ஆவி எனக்குள் வந்து என்னைக் காலூன்றி நிற்கும்படி செய்தது, அப்பொழுது அவர் என்னுடனே பேசுகிறதைக் கேட்டேன்" (எசேக்கியேல் 1:28-2:2) இங்கே இவரின் சுயம் விழிப்படைந்து, வாழ்க்கையை எதிர்கொள்ளும் பக்குவத்தை, துணிச்சலை பெற்றுக் கொள்கிறார். எசேக்கியேல் 37ஆம் அதிகாரத்தில் உலர்ந்து போன எலும்புகளுக்கு உயிர் கொடுத்து உருவம் கொடுத்து, கடவுளுடைய வாக்கினைக் குறித்து இறைவாக்குரைப்பதைப் படிக்கின்றோம்.



"எனக்குக் கற்பிக்கப்பட்டபடி நான் தீர்க்கதரிசனம் உரைத்தேன், அப்பொழுது ஆவி அவர்களுக்குள் உட்புகுந்து, அவர்கள் உயிரடைந்து, காலூன்றி, மகா பெரிய சேனைகளாய் நின்றார்கள்" (எசேக்கியேல் 37:10) இதனால் தங்களின் சுயம் விழிப்படையும் படியாக, உலர்ந்த எலும்புகளுக்குக்கூட சாத்தியம் ஆகும்போது, உயிருள்ள மனிதர்கள் இன்னும் விழிப்புணர்வு அற்றவர்களாக வாழ்ந்நு வருகின்றனர் என்பது வருந்தத்தக்க ஒன்றாகும்.

இன்னுமொரு சிறப்பான எடுத்துக்காட்டு, யோவான் நான்காம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ள ஒரு நிகழ்ச்சி, அங்கே இயேசு கிறிஸ்துவும் சமாரியப்பெண்ணும் உரையாடுகின்றனர் முடிவில், அப்பெண் விழிப்படைந்தவராய், தன்நிலையை உணர்ந்தவராய், இயேசுவை மெசியா என புரிந்து கொள்கிறார். அதோடு நின்றுவிடாமல், ஊர் மக்களிடத்தில் திரும்பிச்சென்று, இயேசுவுக்கும் தமக்கும் நடந்த உரையாடலைக் குறித்துச் சொல்கிறார். "அப்பெண் மக்களை நோக்கி, நான் செய்த எல்லாவற்றையும் என்னிடம் சொன்ன மனிதரை வந்து பாருங்கள். அவர் மெசியாவாக இருப்பாரோ என்றார்" (யோவான் 4:29). எனவே ஊர்மக்கள் அனைவருக்கும் இயேசுவை மெசியா எனப் பறைசாற்றிய முதல் பெண்ணும் இவரே ஆகிறார்.

ஆனால், இன்றைய சூழலில், பல்வேறு வகையான ஊடகங்கள் வழியாக, நம் காதுகள் கேட்கும் சொற்கள் நம்மை விழிப்படையச் செய்கிறதா? என்கின்ற வினாவைக் கேட்டுப் பார்த்தால் நிச்சயம் அதற்கான சாத்தியக் கூறுகள் குறைவாகவே உள்ளன என்கின்ற முடிவுதான் கிடைக்கும்.

என்றாலும், பயனும் மனநிறைவும் (Uses and gratification) கோட்பாட்டின்படி, மக்கள் பல்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி, ஒரு மனநிறைவைப் பெற்றுக் கொள்கிறார்கள். இது அவர்களின் நன்விருப்பம், ஒருவகையில் சுயாட்சியும் கூட என சொல்லுபவர்களும் உண்டு. உண்மையில் படைப்பின் தொடக்கத்தில் அப்படிப்பட்ட சுயாட்சிதான் ஆதாமுக்கும், ஏவாளுக்கும் வழங்கப்பட்டது. ஆனால் தங்களுடைய பொறுப்பற்ற தன்மையினால், கீழ்படியாமையினால் அவர்களின் சுயம் மதிப்பிழக்கிறது.

ஆனால், இயேசுகிறிஸ்துவின் குணமாக்கும் திருப்பணியில், தொடக்கத்தில் இழந்துபோன சுயம் மீண்டும் கட்டமைக்கப் படுகின்றது. நோயுற்றோர் பலர், தங்களுடைய நோயிலிருந்து விடுதலையும் அதே வேளை சமூக அடிமைத்தனங்களிலிருந்து மீட்பும் பெற்றுக் கொண்டனர். இதனால் அவர்களின் சுயம் விழிபடைந்து, கடவுளின் அன்பைப் பறைசாற்றும் கருவி களாயினர்.

## 11. இறை - தொடர்பு நீதியை நிலைநிறுத்துவதாய் இருக்கிறது

இறையாளுமையின் தலைமைக்கூறு நீதியை நிலை நிறுத்துதல் ஆகும். இயேசுகிறிஸ்து தம் ஊழியகாலம் முழுவதும் இறையாளுகையின் போதனைகளைக் குறித்தே பறைசாற்றி வந்து இறுதியாக பாஸ்கா பண்டிகைக்கு முன்பும் இறையாளுகை யைப்பற்றியே போதனை செய்தார். அதன் சிறப்புக்கூறு, நீதித்தீர்ப்பு. அந்நாளில் நீதிமான்கள் அவரவர் செய்கைக் கேற்றாற்போல பிரித்தெடுக்கப்படுவர் எனக் குறிப்பிடுகின்றார். முடிவில், “மிகவும் சிறியவர்களான என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள்” (மத்தேயு 25:40) என்று சொல்வதைப் பார்க்கிறோம். ஏழை எளியவர்களின் அடிப்படைத் தேவைகள் பகிர்வு மனப்பான்மை மூலம், மேற்கொள்ளப்படுகையில், நீதி நிலைநிறுத்தப்படுகின்றது.

தொடர்பின் அடிப்படை பொருள் “பகிர்வு” என்பதாகும். தகவல் பகிர்வு, அறிவுப்பகிர்வு, பொருள் பகிர்வு, பணப்பகிர்வு, அதிகாரப் பகிர்வு, இயற்கை வளங்கள் பகிர்வு, போன்ற பகிர்வுகள் நடைபெறுவதன் மூலம் தொடர்பின் அடிப்படைத் தன்மையும், பொருளும் நடைமுறைப்படுத்தப்படவும், நீதி செய்யப்படுவதற்கும் வாய்ப்பு உருவாகிறது.

என்றாலும், ஐந்தாண்டு திட்டங்கள்போல, பல முன்னேற்றத் திட்டங்கள் போடுவதன் மூலம் இறையறைசை நிறுவிட முடியும் என்பதல்ல. இதன் பொருள் மாறாக, இறையரசு உங்களுக்குள்ளேயே இருக்கிறது என்றார் இயேசுகிறிஸ்து. இதோ இங்கே என்றும் அதோ அங்கே என்றும்



சொல்லப்படுகிறதற்கு ஏதுவிராது. இதோ இறையரசு உங்களுக்குள்ளே இருக்கிறதே என்றார். (லூக்கா 17:21) தொடர்ந்து அவர் விளக்கம் கொடுக்கையில் மனுமைந்தனின் நாளில் ஒன்றையாகிலும் நீங்கள் காண்மாட்டீர்கள் (17:22); இதோ இங்கே என்றும், அதோ அங்கே என்றும் சிலர் சொல்லுவார்கள். நீங்களோ போகாமலும் பின் தொடராமலும் இருங்கள். மின்னல் வானத்தின் ஒரு திசையில் தோன்றி மறுதிசைவரைக்கும் வெளிச்சம் வீசுவதுபோல மனுமைந்தனும் தம்முடைய நாளிலே தோன்றுவார் (17:24) என்றார்.

இன்றைய காலகட்டத்திலோ சமய ஒளிபரப்பில் வெகுவாக பயன்படுத்தப்படும் செய்திகளிலும், மேடை அருளுரைகளிலும், நறசெய்திப் பெருவிழாக்களிலும், சுகமளிக்கும் கூட்டங்களிலும், இறையாளுகையைப் பற்றியத் தவறான திசைகாட்டுதல்களே மலிந்து காணப்படுகின்றன. நியாயம், நீதி, நேர்மை இவைகளை மையப்படுத்திய அருளுரைகள் குறைவாகவே உள்ளன.

## 12. இறை தொடர்பு கதைவடிவங்களை நமக்கு மீட்டுத்தருகிறது

தொடர்பியலில் சிறப்பான தொடர்பு மனிதத் தொடர்பாகும். ஏனெனில் விலங்குகளும், இயற்கையும் தங்களுக்குள்ளே தொடர்பு கொள்கின்றன. வாசனை, அதிர்வுகள், அசைவுகள், நிறங்கள், இயக்கம், ஒலி இவற்றைப் பயன்படுத்தி விலங்குகள் தங்களுக்குள்ளாக தொடர்பை ஏற்படுத்திக் கொள்கின்றன. ஆனால் மனிதர் மட்டுமே மொழி என்னும் ஊடகத்தைக் கூடுதலாக திருச்செவி வழியாகப் பயன்படுத்தி இன்னும் தொடர்புக்கு அழகு சேர்க்கின்றனர். இதனால் புரிதல் இன்னும் ஆழப்படவும் வாய்ப்பிருக்கிறது.

அந்த வகையில் தன்னுடைய கருத்துகளையும், சிந்தனை யையும் தெளிவுப்படுத்த, ஆழப்படுத்த, புரியவைக்க பயன் படுத்தப்படும் ஊடகம் தான் கதைவடிவமாகும். கதைவடிவம் என்பது கதைசொல்லுதல் எனக் குறிப்பிடுகின்றோம். இந்தக் கதைவடிவங்கள் இன்று நம்மிடையேயிருந்து மறைந்து கொண்டிருக்கின்றது. அதற்கு மீண்டும் உயிர் கொடுப்பது, இறைத்தொடர்பாகும்.

எப்படியெனில், இஸ்ரவேலர்கள் எகிப்தில் அடிமைத் தனத்திலிருந்து வெளியேறுவதுமுதல் கானானில் சென்றடைந்த நேரம் வரை தங்களுடைய பழைய நிலைமையைத் தங்கள் பிள்ளைகளுக்கு வாய்மொழி மரபின் ஊடாகக் கதைகளைச் சொல்லியே நினைவுப்படுத்தி வந்தனர். (உபா. 4:9; 26:5-11) மேலும் படைப்பு முதல் தொடக்கத் திருச்சபையின் உருவாக்கம் அதன் வளர்ச்சி வரை, திருமறை முழுவதுமே ஒரு கதைவடிவில் தாம் நமக்குத் தரப்பட்டிருக்கின்றன என்றால் திருமறை ஒரு கதைப்புத்தகம் அல்ல. மாறாக சிறுகதைகளும், நிகழ்வுகளும், பல கதைவடிவங்களால் சொல்லப்பட்டிருக்கின்றன.

இயேசு கிறிஸ்துவின் உவமைகள் அனைத்துமே இவ்வகைக் கதைவடிவங்களைக் கொண்டதாய் இருந்தன. மிக நுணுக்கமான, சிக்கலான, கருகலான, கருப்பொருள்கள் அனைத்தும் உவமை களாகச் சொல்லப்பட்டன. இவைகளையெல்லாம் இயேசு மக்களோடே உவமைகளாகப் பேசினார். உவமைகளாலேயன்றி, அவர்களோடேப் பேசவில்லை (மத்தேயு 13:34) என்றும் வாசிக்கின்றோமே!.

இன்று அருளுரையாற்றும் ஆயர்களாகிய நாம் இதைக் கருத்தில் கொள்ள அழைக்கப்படுகின்றோம். காரணம் இந்தக் கதை வடிவங்கள்தான் நம்முடைய மறந்துபோன முற்காலத்திய நற்பண்புகளை நினைவுக்குக் கொண்டுவரும். இக்காலச் சூழலில் அதன் பொருத்தத்தையும் மாற்றுச் சிந்தனையும் உருவாக்கும். நாம் தொலைத்துவிட்ட நம்முடைய அடையாளங்களை மீண்டும் மீட்டெடுப்பதற்கும், கடவுளின் தொடர் செயல் பாட்டை இனங்கண்டு கொள்ளுவதற்கும் உதவி செய்யும்.

* * *



# 8. தொடர்பின் வகைகள்

தொடர்பின் வகைகள் நான்கு வகைப்படும். அவை முறையே

1. தனக்குள்தானே தொடர்பு கொள்ளுதல்
2. இருவர் தொடர்பு / முகமுகமாய் தொடர்பு / தனித்தாள் தொடர்பு
3. குழு தொடர்பு
4. வெகுதிரள் தொடர்பு

## 1. தனக்குள்தானே தொடர்பு கொள்ளுதல்:

இது தன்னில் தொடங்கி தன்னில் முடிவடைகிறது. தானே தொடர்பாளரும் தானே பெறுபவருமாகிறார். தம் மீதும், தாம் சுற்றியுள்ள சூழலில் தாம் எப்படித்தொடர்பு கொள்கிறேன் என்ற நிலையில்தான் இவ்வகைத்தொடர்பு ஏற்படுகிறது. உலகைப்பற்றியும், வாழ்வின் தகவுகள் பற்றியும் தாம் கொண்டுள்ள சுயக் கண்ணோட்டத்தின் அடிப்படையில், தன்னுடைய வெற்றி தோல்விகளைப் பற்றிய சிந்தனையில் தொடக்கமாகிறது. இவ்வகைத் தொடர்பு, பல்வேறுநிலைகளில் வெளிப்படுத்தப்படுகின்றது.

எடுத்துக்காட்டாக, மன்றாடுதல், தியானித்தல், சிந்தித்தல், தமக்குள் பேசுதல், அமைதி காத்தல், திறமைகளை வளர்த்தல் ஆளுமையில் வளருதல், ஆன்மிக உறவில் முன்னேறுதல் ஆகிய அனைத்தும் இவ்வகைத் தொடர்பாகும். ஆள்தன்மையில் முன்னேறுதல் அதாவது உடல், உள்ளம், ஆன்மா இவற்றில் நிறைவான வளர்ச்சியை அடைவதே இதன் அடிப்படை நோக்கமாகும். அறிவுப்பூர்வமாக, உணர்வுப் பூர்வமாக, சூழல்சார்ந்து அர்த்தங்களைப் பரிமாறிக் கொள்ள உதவி செய்வது இவ்வகைத் தொடர்பு நமக்குள் நடக்கும். இவ்வகைத் தொடர்பு மிகத்தலையாய ஒன்றாகும்.

## தனக்குள் தொடர்பின் தன்மைகள்:

ஒரு மனிதம் என்பது மரபணுக்கள், உணர்வுகள், சமூகம், கலாச்சாரம் இவைகளால் உருவாக்கப்படுகின்றது அல்லது கட்டமைக்கப்படுகின்றது எனப்படுகின்றது. மனிதத்தை புரிந்து கொள்ள மூன்று விதமான கோட்பாடுகள் முன்வைக்கப் படுகின்றன. இவைகள் பெரும்பாலும் உளவியல் கோட்பாடு களின் அடிப்படையில் எடுத்துச் சொல்லப்படுகின்றது.

### 1. அகம் அல்லது ஆளுமை பற்றிய கருத்தமைவு(Self concept):

இக்கோட்பாட்டினை முன் மொழிந்தவர்கள் Joseph Luft மற்றும் Harrington Ingram ஆகியோர். மனிதம் அல்லது ஒரு நபர் பின்வரும் நான்குவிதமான அகத் தன்மைகளினால் உருவாக்கப் பட்டிருக்கிறார். அவைகள் முறையே உடல் (Physical self), உணர்வு (Emotional self), அறிவு (Intellectual self), மற்றும் பழக்கம் (Habbitual self). தனக்குள்தானே தொடர்பு கொள்வதைப் புரிந்துகொள்ள மேற்கூறியவற்றைப் பற்றிய புரிதல் உதவி செய்கின்றது எனலாம்.

### 2. ஜோஹாரி சாலரம் (Johari window) கோட்பாடு :

Joseph Luft Joe Harri'Harrington Ingram ஆகிய இருவரும் இணைந்து ஜோஹாரி எனும் பெயரில் ஒரு சாலரம் போன்ற வரைபடத்தை வரைந்தனர். இதன் மூலம் நான்கு வகையான மனித குணங்களை நாம் அறிய முடியும் என்றனர். அவைகள் முறையே திறவுண்ட அகம், புலப்படாத அகம், மறைக்கப்பட்ட அகம், தெரியாத அகம் ஆகியனவாகும். திறவுண்ட அகம் எனப்படுவது தன்னைப்பற்றி தானும் பிறரும் அறிந்தவை. புலப்படாத அகம் என்பது தன்னைப் பற்றி தான் அறியாதவை, ஆனால் பிறர் அறிந்தவை. மறைக்கப்பட்ட அகம் எனப்படுவது தன்னைப்பற்றி தான் அறிந்தவை. ஆனால் பிறருக்கு மறைக்கப்பட்டவை. தெரியாத அகம் எனப்படுவது தன்னைப் பற்றி தானும் பிறரும் அறியாதவை. இந்த நான்கு நிலைப்பாடுகளும் ஒரு நபருக்குள் புதைந்து கிடக்கின்றன. இவைகள் மூலம் அந்நபரின் தாலந்துகள், திறமைகள் மூலம் வெளிப்படலாம். பல வேளைகளில் மறைத்து வைக்கப்படலாம். இன்னும் சில நேரங்களில் வெளிப்படலாம். ஆனால் மேலே



சொல்லப்பட்ட நான்கு அகநிலைகளை புரிந்து கொள்ளும்போது ஒரு நபரை, அவரின் ஆளுமையை, அவரின் அகத்தைப் புரிந்து கொள்ள இயலும் எனப்புரிந்து கொள்ளப்படுகின்றது.

### 3. எரிக்ஸனின் ஆளுமை வளர்ச்சிக் கோட்பாடு

இக்கோட்பாட்டை முன்மொழிந்தவர் Erikson என்பவ ராவார். ஒரு ஆளுமை பிறப்பு முதல் இறப்புவரை பல்வேறு நிலைகளை அல்லது வாழ்க்கைப் படிகளை கடந்து வருகிறது. ஆங்கிலத்தில் Life stages என அழைக்கின்றது. இவை முறையே எட்டு நிலைகளாக, வயதின் அடிப்படையில் பிரிக்கப்பட்டு, அத்தருணங்களின் ஏற்படும் அடிப்படை உளவியல் சிக்கல்களும் (Crisis), அதன்பின் அந்நபர் கடந்து வரும் சமூக நிகழ்வுகளும் குறிப்பிட்டுக் காட்டப்படுகின்றது. இவ்வாறு கடந்து வரும் பாதையில் ஏற்படும் பலன்கள், என்னென்ன முடிவுகள், என்னென்ன விளைவுகள், என்னென்னவாக இருக்கலாம் என்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பின்வரும் அட்டவணை, ஆளுமை, வளர்ச்சியின் பல்வேறு உளவியல் நிலைகளை (Stages) புரிந்து கொள்ள உதவுகிறது.

## Table 1

| படிநிலை | அடிப்படை உளவியல் சிக்கல்கள் | முக்கியமான நிகழ்வுகள் | விளைவு / பலன்/ முடிவு |
|---|---|---|---|
| பிறந்த குழந்தை (பிறப்பு முதல் 18 மாதங்கள் | நம்பிக்கை X நம்பிக்கை யின்மை | உணவு முறை | பாதுகாப்பு, பராமரிப்பு, பாசம், அன்பு இவை கிடைக்காத குழந்தைகள் நம்பிக்கையின்மையை வளர்த்துக் கொள்கின்றனர். |
| குழந்தைப் பருவம் (2 முதல் 3 ஆண்டுகள்) | தன்னாட்சி X வெட்கம் மற்றும் ஐயம் | கழிவறைப் பயிற்சி | வெற்றி-தோல்விகள் ஒருமையைப் பாதிக்கும், பதிவாகும். |
| பள்ளிக்கு முந்தியப் பருவம் (3முதல் 5 ஆண்டுகள்) | தன்னூக்கம் X குற்றவுணர்வு | புதிதாகக் கண்டறியும் போங்கு | தன் சூழலைக் கட்டுப்படுத்த இயலாதக் குழந்தைகளும், தன் அதிகாரம் ஏற்றுக் கொள்ளப்படாத குழந்தை களும் குற்ற உணர்வில் வளர்கின்றனர். |

| | | | |
|---|---|---|---|
| பள்ளிப் பருவம் (6 முதல் 11 ஆண்டுகள் | சுறுசுறுப்பு X தாழ்வு மனப்பான்மை | பள்ளி | சமூக மற்றும் கல்வி தேவைகளைச் சந்திக்க முடியாத குழந்தைகள் போட்டி நிறைந்த சமூகத்தில் தாழ்வு மனப்பான்மையில் வளர்கின்றனர். |
| விடலைப் பருவம் (12முதல் 18 ஆண்டுகள்) | அடையாளம் X பங்கு | பள்ளி உறவுகள் | சுயஅடையாளத் தேடலில் வெற்றி தோல்விகள் ஒரு வாலிபரை பலவீனராக்கலாம். |
| முதிர்ச்சி பருவம் (19 முதல் 40 ஆண்டுகள்) | நெருக்கம் X தனிமை | உறவுகள் | பிறருடன் நெருக்கத்தை வளர்த்துக் கொள்வதில் வெற்றி - தோல்வியைச் சந்திப்பவர்கள் தனிமைக்குள்ளாகச் சென்று விடுகின்றனர். |
| இடை முதிர்ச்சிப் பருவம் (40 முதல்65 ஆண்டுகள்) | ஆக்கத்திறன் X தேக்கநிலை | | ஆதிக்கச் சக்தியுடைய வளர்ந்தவர்கள், சாதனையாளர்கள், செயல் வீரர்களாக வருவதற்கும், தோல்விகள், தேக்க நிலையும், பின்னடைவும், மேலோட்டமான சமூக ஈடுபாடும் கொண்டவர்களாயிருப்பர். |
| முதுமை (65 முதல் இறப்பு வரை) | தன்னிலை ஒருமைப்பாடு X மனச்சோர்வு | வாழ்க்கைப் பற்றி சிந்தித்தல் | வாழ்க்கையைத் திரும்பிப் பார்த்து ஒரு நிறைவைப் பெற்றுக் கொள்ளுதல் தோல்விகள், களைப்புணர்வு, மனச்சோர்வு, வருத்தம், மனஉளைச்சல் வருகின்றன. |

### *தனக்குள் தானே தொடர்பில் உள்ள கூறுபாடுகள்* (Elements)

- *சுயம் / அகம் / தான்* (Core of Self)
- தேவை (Need / Motivation)
- *அறிவுக்கூறு* (Cognition)
- *விழிப்பு மற்றும் கண்காணிப்பு* (Monitoring)



*மேலே கூறப்பட்ட நான்கு கூறுபாடுகளும் ஒரு மனிதத்தினை புரிந்துகொள்ள மேலும் உதவி செய்கின்றது. காரணம் தனக்குள்தானே தொடர்பு என்பது தன்னைப் பற்றியது. தன்னுடைய தேவைகளைப் பற்றியது. தன்னுடைய அறிவுக்கூறு தொடர்புடையது. தான் தன்னை கண்காணித்துக் கொள்வதில் நடைபெறுகிறது.*

### *தனக்குள் தானே தொடர்பு - தன்மைகள்* (Nature)

- *தனித்தாள் தன்மை கொண்டது*
- *சுய புரிதலைச் சார்ந்தது.*
- *உள்ளும் புறமும் ஏற்படும் தூண்டுதலினால் தானாக நடப்பது.*
- *தொடர்ந்து நடந்து கொண்டிருப்பது.*
- *தான் வெளிப்படுத்தினால் ஒழிய பிறர் புரிந்து கொள்ள இயலாது.*

### *தனக்குள் தானே தொடர்பு - அவசியம்* (Significance)

- *தன்னைப் பற்றி தான் பொருள் புரிதல்*
- *தன் உடலில் தனக்கு நிழ்வதில் தொடர்புபடுத்துதல்.*
- *தான் எண்ணியதை செய்கை வழிதொடர்பு மூலம் விளக்கமளித்தல்.*
- *தன்னுடைய நினைவலைகளில் தோன்றியவற்றை பதிவுசெய்தல்.*
- *தன் ஆழ்மனதில்தோன்றும் காட்சிகளை கனவு காணுதல்*

*உள்தூண்டுதல், புறத்தூண்டுதல் இவற்றின் மூலம் ஒரு மனிதம் தான் எண்ணுபவற்றை, காண்பவற்றை, உணர்பவற்றை, பதிவு செய்வது மூலம் தான் தன்னில்தானே தொடர்பு அவசியமாகிறது.*

*இறையியல் கண்ணோக்கில் சொல்லும்போது, இழந்து போன இறைசாயலை மீண்டும் பெறும்போதுதான், தனிமனித ஆளுமையும் நிறைவடைகிறது. இறைசாயலில் படைக்கப்பட்ட மனுக்குலம் (ஆதி 1:27) அதை இழந்துபோன வரலாறு நாம்*

யாவரும் அறிந்ததே. இதனை நிறைவு செய்ய மீண்டும் அவ்வகைச் சாயலுக்கான தேடுதல் நம் ஒவ்வொருவரிலும் நடந்து கொண்டிருக்கின்றது இதைத்தான் தனக்குள்தானே தொடர்பு என்கிறோம்.

'ஏல்' என்பது கடவுளைக் குறிக்கும் சொல், மனிதம் என்பது பிறப்பு, உடல், சூழல் உணர்வுகள் ஆகியவற்றால் உருவாக்கப்பட்டிருப்பதாகக் கூறுகிறது அறிவியல் உலகம். என்றாலும் இந்த மனிதம் பலவேளை தங்களுடைய நிலையிலிருந்து ஏற்றம்பெற விரும்புவதையே பலரும் விரும்புகின்றனர். சமூகவியல், உடலியல், உளவியல், கலாச்சாரவியல் இவையனைத்திலும் ஒருசேர முன்னேற்றம் காண்பதையே மனிதத்தை இறை சாயலுக்கு (ஏல்) மீண்டும் உயர்த்திச் செல்லும்.

சுய ஆய்வு, சுய உறுதிப்பாடு, சுய உந்துதல், சுய நம்பிக்கை, சுய மதிப்பீடு, சுய கண்டுபிடிப்பு இவை அனைத்தும் அதன் பயன்பாடுகளாகின்றன. இதனால் வாழ்க்கையின் அழகை தனிமையில் சுவைக்க முடிகிறது. இயேசுகிறிஸ்துவில் இவையனைத்தும் நிறைவாய் இருந்தன. காட்டுப்பூக்களைக் கவனித்துப் பாருங்கள்; அவை உழைப்பதுமில்லை; நூற்பதுமில்லை என்றார். (மத்தேயு 6:28). ஒரு தகைவிலான் குருவிகூட கடவுளின் பார்வையில் சிறப்பானது என்றார் (மத்தேயு 10:29). குழந்தைகளை அரவணைத்துக் கொண்டார் (மத் 19:13-15). என்றாலும் தம்மைப்பற்றி சுய ஆய்வு செய்து கொள்ளத் தவறியதில்லை.

திருமுழுக்கு முடிந்து தாம் சோதிக்கப்படுகையில் கடவுளின் வாக்கு, கடவுள் மேலுள்ள பற்றுறுதி, கடவுளின் அதிகாரம் இவை குறித்த தெளிவான பார்வையுடையவராய் இருந்தார் என்பது தம்மைச் சோதிக்க உட்படுத்திக் கொண்டதில் வெளிப்படுகிறது (மத் 4:1-11). அதைபோல சுய உறுதிப்பாடு உடையவராய் இருந்தார். தம்முடைய திருப்பணியின் நோக்கத்தைப் பற்றியும் பணிக்கான களத்தைத்தெரிவு செய்வதிலும் உறுதியோடு செயல்பட்டார் (மத்தேயு 4:12ff).

மேலும் சுயமதிப்பீடு என்பது ஓர் ஆளுமையை மேலும் வளர்ப்பதற்கு உதவியான ஒன்றாகிறது. அந்த வகையில் இயேசுகிறிஸ்து தம்மை முழுமையான ஒரு சுயமதிப்பீடு செய்யவும் தவறியதில்லை. எடுத்துக்காட்டாக தன்னைப்பற்றி



யார் என்று மக்கள் பேசிக் கொள்கிறார்கள் என்றுகேட்டுத் தெரிந்து கொண்டார் (மத்தேயு 16:13-20). அதோடு நின்று விடாமல் தம்முடைய இயலாத சூழ்நிலையில் "ஆண்டவரே இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடாததாகில் அது உம்முடைய சித்தம்" என்றார் (மத்தேயு 26:42) என்றார். இவ்வகைத் தொடர்பில் தனியாக, அவர் எடுத்துக்கொண்ட தொடர்பை உறுதிப்படுத்திக் கொள்ள வகுத்த தருணங்கள் பல உண்டு.

எடுத்துக்காட்டாக ஏழு இடங்களில், அவர் குறிப்பிட்டக் காரணங்களுக்காக மன்றாடியதைப் பார்க்கிறோம். ஆண்டவர் தம் வேண்டுதலைக் கற்றுக்கொடுக்கையில் மன்றாடுகிறார் (மத்தேயு 6:9-13); (லூக்கா 11:2-4). இரண்டாவதாகக் கடவுளைப் போற்றும் மன்றாட்டு எளிமையான பாலகருக்குக் கடவுள் தம்மை வெளிப்படுத்தினபடியினால் 'உமக்கு நன்றி' என்றார் (மத்தேயு 11:25-26); (லூக்கா 10:21). மூன்றாவது முறையாக, கெத்சமெனே தோட்டத்தில் இறைவேண்டல் செய்திறதாய்ப் படிக்கின்றோம் (மத்தேயு 26:36-44; மாற்கு 14:32-39; லூக்கா 22:46). இறுதியாக சிலுவையில் செபித்த நிகழ்வு, மத்தேயு 27:46, மாற்கு 15:34; லூக்கா 23:34,46 ஆகிய வசனங்களில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

இதுதவிர லாசருவின் மரணத்தை எதர்கொள்ளும்போது ஒரு முறை மன்றாடினார் (யோவான் 11:41-42). தாம் மரணத்தை எதிர்கொள்ளும்போது ஒரு முறை மன்றாடினார் (யோவான் 12:27,28). பின் சீடர்களுக்காய் இறுதியாக வேண்டினார் (யோவான் 17) எனவும் யோவான் நற்செய்தி நூலில் படிக்கின்றோம். இவ்வகை வேண்டுதல்கள் தமக்கு ஒருசுய உந்துதலைக் கொடுத்ததாக இயேசு உணர்ந்தார். ஏனெனில் ஒரு முறை சீடர்கள் ஆண்டவரே நீர் மட்டும் இவ்வளவு அற்புதங்கள் செய்கிறீரே, இது எப்படி சாத்தியமாகும் எனக் கேள்வி கேட்டபோது நீங்கள் நோன்பிருந்து மன்றாடுங்கள் என விளக்கம் கொடுக்கிறார் (மத்தேயு 17:21).

ஆக தனக்குள் தானே தொடர்பு கொள்ளுதல் வெறும் மன்றாடுதல் என்கிற பொருளில் மட்டும் வராது. மாறாக மன்றாட்டும், மனப்பான்மை, சிந்தனையோட்டம், கண்ணோட்டம் இவையனைத்தும் ஒருங்கிணைந்து செல்கின்ற ஒன்றாகும்.

## 2. இருவர் தொடர்பு:

இரு நபர்களுக்கிடையில் நடைபெறுகின்ற தொடர்பு அல்லது ஒருவருக்கொருவர் தொடர்பு என்றும் புரிந்து கொள்ளப் படுகின்றது. ஒரு நபரிடமிருந்து இன்னொரு நபருக்கும், இன்னொரு நபரிடத்திலிருந்து இன்னொரு நபருக்கும், இன்னொரு நபரிடத்திலிருந்து அவருக்கும் எண்ணங்கள், கருத்துகள், மனப்பான்மைகள், அறிவுப்பூர்வமான தகவல்கள் பரிமாறிக் கொள்ளப்படுகின்றன. இவ்வகை நேர் காணல் முறை சார்ந்ததாயும், இருவழித் தொடர்புடையதாயும் இருக்கிறது. சமதளத்திலிருந்து உற்றுக் கேட்டும், உரையாடியும் கருத்தைப் பரிமாறிக் கொள்ளும் நிலையுடையது.

இங்கே நெறிப்படுத்தப்பட்ட பரிமாற்றம் நிகழ்கிறது. இது சமூகப்பரிமாற்றத்தின் பொதுக் காரணியாகிறது. காரணம் இவ்வகை தொடர்பு முறை மிகுந்த பயனைத் தரும் முறையாகும். உறவைப் புதுப்பிக்க, ஐயங்களை நீக்கிட, சமய சமுதாய மாற்றத்திற்கான அடித்தளமிட இம்முறை ஒப்பற்றதாகும்.

இருவர் தொடர்பின் பயன்பாட்டினால், தாங்கள் யார் என்று அடையாளம் காட்டிக் கொள்ள உதவுகிறது. தனிமை, அலுப்பு, இயலாத நிலை இவற்றிலிருந்து விடுபட்டு, சமுதாயத்தோடு தங்களை ஒன்றுபடுத்திக் கொள்ள உதவுகிறது. ஒருவருக்கொருவர் உதவி செய்வதின் வாயிலாக இருவரின் நோக்கமும் நிறைவேறுகிறது. சமுதாயத்தில் நடக்கும் உறவுப் பரிமாற்றங்களில் சட்டதிட்டங்களை இனம் கண்டு கொள்ள உதவுகிறது.

### இருவர் தொடர்பை பின் வரும் மூன்று கோட்பாடு களினால் புரிந்து கொள்ள இயலும்.:

### 1. செயல்பாட்டு கோட்பாடு: (Functional Theory)

இதனை முன் மொழிந்தவர்கள் Frank Dance மற்றும் Larson. *1976*-ஆம் ஆண்டு இக்கோட்பாடு முன்மொழியப்பட்டது. இதனை, பயன்பாட்டுக் கோட்பாடு எனவும் அழைப்பர். காரணம் இருவர் தொடர்பை உருவாக்க, திட்டமிட, அதனை சமன் செய்து கொள்ள உதவுகிறது. எடுத்துக்காட்டாக ஒரு நபர்தான் பிறந்தது முதல், உளத்தேவை, உடல்தேவை ஆகியவைகள் சந்திக்கப்படும் போது,



அங்கே தொடர்பு நிகழ்ந்ததாக புரிந்து கொள்ளப்படுகின்றது. ஒரு குழந்தை அழும்போது, அதனைப் பெற்ற தாய் அந்தக் குழந்தைக்கு பசி உண்டாயிருக்கிறது எனப் புரிந்து கொள்கிறாள். ஒரு நபர் கவலைப்பட்டு அழும்போது, இன்னொரு நபர் அவருடன் உடனிருந்து, அவருடைய கவலைகளுக்கு செவி மடுத்து சரியான பதிலுரை வழங்கும்போது, அங்கே இருவர் தொடர்பு பொருளுள்ள வகையிலே நடைபெறுகிறதாக புரிகிறோம். ஆக தேவையிலிருக்கும் ஒருவருடைய தேவைகள் இன்னொரு நபரால் சந்திக்கப்படும் போது இருவர் தொடர்பு நடைபெறுகிறது.

### *2.* உறவு கொள்கின்ற கோட்பாடு: (Relational Theory)

இவ்வகை கோட்பாட்டினை முன் மொழிந்தவர்கள் Rogers, Millers, Fank Millers ஆகியோராவர். இதுவும் *1976*-ஆம் ஆண்டில் முன் வைக்கப்பட்டது. இதனை, உறவு கொள்ளும் அணுகுமுறையை கொண்டதாக புரிந்து கொள்ளப்படுகின்றது. காரணம் இருவர் தொடர்பில் உள்ள நம்பிக்கை, கட்டுப்பாடு, நெருக்கம் ஆகிய பரிமானங்களை குறிப்பிட்டுக் காட்டுகிறது. இக்கோட்பாடு, எடுத்துக்காட்டாக, இருவருக்கிடையில் ஏற்படும் உறவில் நம்பிக்கை மிக முக்கியமானதாக இருக்கிறது. கணவன் மனைவி உறவை எடுத்துக் கொண்டால், அங்கே அடிப்படையில் நம்பிக்கை மிக முக்கியமான ஒரு இணைப்புப் பாலமாக இருக்கிறது. அவ்வாறே அறிந்தோ அறியாமலோ இருவரில் ஒருவர் அதிகாரப் போங்குடையவராய் இருப்பதை பற்றி இருவருமே விழிப்புடையவராய் இருத்தலோடு, அதனை கட்டுப்படுத்தவும் உதவுகிறது. அவ்வாறே நெருக்கம் என்பது, இருவருடைய தேவைகளை சந்திப்பதில் உள்ள அளவை சுட்டுகிறது. ஆக, கட்டுப்பாட்டையும், நம்பிக்கையையும், நெருக்கத்தையும் அளவிட பயன்படுவது உறவுக் கோட்பாடு.

### *3.* பொருளை ஒருங்கிணைத்து மேலாண்மை செய்யும் கோட்பாடு: (The Co-ordinated Management of Meaning Theory)

இதனை முன் மொழிந்தவர்கள் W.B.Pearce மற்றும் V. Cronen. *1980*-ஆம் ஆண்டு முன் மொழியப்பட்டது. இருவர் தொடர்பு நிகழும் போது, வார்த்தைகள் மட்டும் பரிமாறிக் கொள்ளப்படுவதில்லை. அதனூடே அர்த்தங்கள், பொருள்,

மனப்பான்மை, கருத்தியல், பண்பாடு, கலாச்சாரம் இவைகளும் பரிமாறிக் கொள்ளப்படுகின்றன, இதன் மூலம் பொருள் புரிந்து கொள்ள வாய்ப்பிருக்கின்றது. அதாவது, ஒருவர் மற்றொருவருக்கு தெரிவிக்க விரும்பும், கருத்துக்கள், சுட்டுப்பொருள், விளக்கம், தெரிவிக்க விரும்பும் சொற்பொருள் இவைகளை, இருவரும் மேலாண்மை செய்து, ஒருங்கிணைத்துச் செல்லுதல் எனலாம். இவ்வாறாக இருவர் தொடர்பில் நடைபெறும் பரிமாற்றத்தில் பயன்படுத்தப்படும் அடையாள மொழிநடையின் உட்பொருளை புரிந்து கொள்ள இவ்வகைக் கோட்பாடு உதவி செய்கிறது.

## இருவர் தொடர்பின் தன்மைகள்:

- **தவிர்க்க இயலாதது:** இருவர் தொடர்பு, மனித்தொடர்பின் மிக முக்கியமானதாகின்றது. ஒருவருடைய இருத்தல் நிலைக்கு மிக அவசியமானதாகவும், அந்நபரின் இருத்தல் நிலைக்கு தேவையானதாகவும் இருக்கிறது.
- **பின்னோக்கிச் செல்லவோ அல்லது நேர்மாறாக்கவோ இயலாது:** இருவர் தொடர்பில் பரிமாறிக் கொள்ளப்பட்ட வார்த்தைகள், உதிர்த்துவிட்ட சொற்கள் இவைகளை தலைகீழாக்க இயலாது. உதிர்த்தவை உதிர்த்தவையே. அவற்றை பதிவு செய்து, திரும்பக் கேட்கலாம், படிக்கலாம், பார்க்கலாம். ஆனால் உறவைப் பொருத்தவை தலை கீழாக்கவோ, நேர்மாறாக்கவோ இயலாது என்பது கருத்து.
- **சிக்கலானது:** இருவர் தொடர்பை புரிந்து கொள்வது எளிதானதல்ல. இருவரின், ஆளுமை, கருத்தியல், மனப்பான்மை, சமூகப்பின்னணி, அறிவுக் கூர்மை, கண்ணோட்டம் இப்படி பல கூறுபாடுகளை உள்ளடக்கியதால். இது அவ்வளவு எளிதானதல்ல. எனவே இருவர் தொடர்பின் தன்மையை புரிந்து கொள்ள, பலவிதமான அணுகுமுறைகளை கையாள வேண்டியிருக்கலாம்.
- **சூழல் சார்ந்தது :** இருவர் தொடர்பு வெறுமையில் நடப்பதல்ல. மாறாக குறிப்பிட்ட சூழலில் நடைபெறுகிறது. இரு நபர்கள் உறவாடும் பொழுது, எடுத்துக்காட்டாக சமூகச் சூழல், குடும்பச் சூழல், பணிச் சூழல், என பல சூழல்கள்



இயற்கையாகவும், இயல்பாகவும், இருக்கலாம். உருவாக்கப் பட்ட சூழலாகவும் இருக்கலாம். இருவர் தொடர்பில், சூழல் என்பது தவிர்க்க இயலாத ஒன்றாக இருப்பதாக கருதப் படுகின்றது.

**இருவர் தொடர்பில் முன்னேற பின்வரும் மூன்று முறைகளைப் பின்பற்றலாம் :**

- பேச்சைத் திட்டமிடல்: இருவரின் பேச்சைத் திட்டமிட்டுப் பேசுதல் அவசியமாகின்றது.
- சரியான நோக்கம் அதற்கான வழிமுறைகள், கொடுக்கப் பட்டுள்ள சூழலை தெரிவு செய்தல் அவசியம்
- தன்னுடைய (ஒரு நபருடைய) வெற்றித் தோல்விகள், பலம் பலவீனம் இவைகளை இனம் கண்டு கொள்ளுதல் அவசிய மாகின்றது.

**மேலே சொல்லப்பட்ட முன்னேற்றத்தை அடைய, பின்வரும் இரண்டு முறைகளைப் பின்பற்றலாம்:**

- **செவிமடுத்தல்:** குறிப்பாக ஒருவருக்கொருவர் பேசும் போதும், பகிர்ந்து கொள்ளும் போதும், செவி மடுக்கின்ற பண்பு இருவருக்கிடையே உள்ள உறவில் முன்னேற வாய்ப்பை உருவாக்குகிறது.
- **பதிலுரைத்தல்:** சிறப்பாக ஒருவருக்கொருவர் உறவாடும் போதும், உரையாடும் போதும், சரியான பதிலுரைகளை கொடுத்தல் என்பதும், இருவருக்கிடையே உள்ள உறவில் முன்னேற வாய்ப்பை அதிகப்படுத்தும்.

இருவர் தொடர்பின் முக்கியத்துவமும், அதில் வெளிப்படும் உறவுப் பரிமாணங்களும் நம்மை ஓர் ஆரோக்கியமான உறவுநிலைக்கு இட்டுச் செல்வதாக அமைய வேண்டும். எடுத்துக் காட்டாக, சுட்டிக்காட்டுதல் என்பது இருவர் தொடர்பில் ஒரு விரிசலை உண்டாக்கிவிடலாம். ஆனால் சுட்டிக்காட்டும் தன்மை, உறவில் ஒரு நிலையை அடைந்தபிறகே உருவாகிறது. என்றாலும் இவ்வகைத் தொடர்பில் சுட்டிக்காட்டுதல் என்பது தேவையான ஒன்றாகிறது.

இயேசுகிறிஸ்துவைச் சந்தித்த பலர் ஏன் அவருடைய தாயிடம் கூட, இந்த இருவர் தொடர்பின் அடிப்படையில் பல எடுத்துக்காட்டுகளை முன்வைக்கிறார். இயேசுவுக்கு பன்னிரண்டு வயதாயிருக்கும்போதே தமக்கும் தம்மைச் சேர்ந்தவர்களுக்கும் உறவு எப்படி இருக்க வேண்டும் எனத் தெளிவுள்ளவராயிருந்தார். எருசலேம் கோயிலில் தங்கி விட்டவரைப்பார்த்து அவருடைய தாயார் "மகனே ஏன் எங்களுக்கு இப்படிச் செய்தாய்? இதோ உன் தகப்பனும் நானும் விசாரத்தோடே உன்னைத் தேடினோமே! என்றாள்; அதற்கு அவருடைய பதிலுரை நாம் யாவரும் அறிந்ததே," "நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? என் பிதாவுக் கடுத்தவைகளில் நான் இருக்க வேண்டியதென்று அறியீர்களா?" என்றார் (லூக்கா *2:48,49*). இதுபோல பல தருணங்களில் முரண்பாடுகளைச் சந்திப்பதில், இருவர் தொடர்பில், ஒரு சுட்டிக்காட்டுதலைச் சிறப்பாக நடப்பித்துக் காண்பிக்கிறார்.

இயேசுவுக்கும் அவருடைய தாயாருக்கும் நடைபெற்ற உரையாடல் (லூக்கா *2:48,49*)

இயேசுவுக்கு பேதுருவுக்கும் இடையே நடந்த உரையாடல் (மத்தேயு *16:21-28*)

இயேசுவும் யோவானும் பேசிக்கொண்டது (மத்தேயு *3:13-17*, மாற்கு *1:9-11*; லூக்கா *3:21-22*)

இயேசுவும் தொழுநோயாளியும் உரையாடியது (மத்தேயு *8:2-4*; மாற்கு *1:40-45*; லூக்கா *5:12-16*)

இயேசுவும் நூற்றுவர் தலைவரும் பேசியது (லூக்கா *7:1-10*)

இயேசுவும் கானானியப் பெண்ணும் உரையாடியது (மத்தேயு *15:21-28*; மாற்கு *7:24-29*)

சமாரியப்பெண்ணோடு நடத்திய உரையாடல் (யோவான் *4*)

மேலே சொல்லப்பட்ட உரையாடல்களைச் சுட்டிக் காட்டியதற்குக் காரணம், இருவர் தொடர்பில் வரும் சிக்கல்களை முரண்பாடுகளை இயேசு மேற்கொண்ட விதம் சிறப்புக் குரியதாய் இருக்கிறது. இது தவிர பிறரிடம் அன்பும், பரிவும் பாசமும் காட்டவேண்டிய தருணங்களில் இருவர் தொடர்பில்



அப்படிப்பட்ட பாசமான முறைகளை ஏராளம் கையாண்டார். எடுத்துக்காட்டாக உடல் நலமற்றவர்களிடம் பரிவுடனும், பாசத்துடனும், பண்புடனும் நடந்து கொண்டார். தேவையான முறையில் சமூக இடைவெளிகளைக் கடைபிடித்தார். தொடுதல் மூலம் ஒருவரைக் குணப்படுத்தமுடியுமானால் அவரைத் தொட்டு குணப்படுத்தினார். நம்பிக்கையால் ஒருவரை நெறிப்படுத்த இயலுமெனில் அதையும் செய்தார். எனவே இருவர் தொடர்புக்கு இயேசுவின் மாதிரிகள் சிறப்பான மாதிரிகளாகும்.

## 3. குழுத்தொடர்பு

குழுத்தொடர்பு என்பது முறை சார்ந்த குழு, முறை சாராத குழு என இருவகைப்படும். இவ்வகை தொடர்பில் குழு உறுப்பினருடைய எண்ணிக்கை நிர்வகிக்கக் கூடியதாகவும் கண்காணிக்கக்கூடியதாகவும் இருக்கிறது. குறிப்பிட்ட எல்லைக் குள்ளிருந்து செயல்பட விரும்புகிறவர்களின் தொடர்புமுறை சார்ந்ததாக இருக்கிறது. குழுதொடர்பு இயங்குவதற்கு இருவர் தொடர்பும் அடிப்படையாக உள்ளது. நாம் வாழும் வாழ்க்கை குழுத் தொடர்புமுறை சார்ந்ததாகும். குழு என்பதை விளக்கு வதற்காகவே நாம் மற்றவற்றிலிருந்து குழுவைப் பிரிக்க வேண்டியுள்ளது. ஒரே குழுவாகவும், குழுவுக்குள் குழுக்களும் இருக்கலாம்.

எடுத்துக்காட்டாக, ஒரு பேருந்து பயணத்தை எடுத்துக் கொண்டோமேயானால், அந்தப் பேருந்து முழுவதும் இருப்பவர்கள் ஒரேக் குழுவைச் சார்ந்தவர்கள் ஆகிறார்கள் இவர்களுக்குள் சிலர், பலர் தங்களுக்குள்ளாகவே ஏற்கெனவே குழுவாயிருப்பார். இவர்கள் சிறு சிறு குழுக்களாக உறவாடிக் கொண்டிருப்பர். இவ்வகைத் தொடர்பை முறை சாராத (Non formal) குழுக்கள் எனச் சொல்கிறோம். ஆனால் குடும்பம், திருச்சபை, பள்ளிக்கூடங்கள் போன்ற இடங்களில் உருவாக்கப் பட்டிருக்கும் குழுக்கள் ஒரே குழுவாகவும் சிறு சிறு குழுக் களாகவும் செயல்பட்டாலும் அவை முறைச்சார்ந்த குழுக்கள் எனப்படும்.

## குழுக்கள் எங்கு உருவாகலாம் :

- இடம், பொருள், எண்ணிக்கை, உறவு நோக்கம் இவைகளுடன் சூழல் என அனைத்தும் குழு உருவாவதைத் தீர்மானிக்கின்றன.

## குழுக்களின் வகைகள் :

நாம் வாழும் சமூக வாழ்க்கை குழுத் தொடர்பு முறையை அடிப்படையாகக் கொண்டிருந்தது. பல்வேறு குழுக்களின் வகைகளை அறிந்து கொள்வதும் அவசியமாகின்றது.

| வகை | செயல்படுத்துவோர் |
|---|---|
| • பிரச்சனையைத் தீர்க்கும் குழுக்கள் | வல்லுநர்கள் குழு |
| • கருத்துக் குழுக்கள் | அறிவாளிகள், ஆய்வாளர்கள் |
| • கற்றல் குழுக்கள் | சங்கங்கள் மற்றும் இயக்கங்கள் |
| • உணர்வுக் குழுக்கள் | சமூக மற்றும் உளவியல் வல்லுநர்கள் |
| • சமூகக் குழுக்கள் | இல்லங்கள், விடுதிகள், உணவகங்கள் நடத்துவோர் |

எடுத்துக்காட்டாக, குழுத் தொடர்பு முறை ஒருவரோ டொருவர் இணைந்து செயல்படுவதோடு, பொதுவான இலக்கைக் கொண்டுள்ளது. சட்டத்திட்டங்களுக்குட்பட்டது. ஏற்கனவே முடிவு செய்யப்பட்ட கதாப்பாத்திரங்களால் உருவாக்கப்பட்டது. மற்றவர்களுக்குத் தங்களை இனங்காட்டிக் கொள்வது குழுவின் வேலை. மனித உறவுகளில் ஏற்படும் உறவுகளையும், பாதிப்புகளையும், ஆய்வு செய்வது குழுத் தொடர்பைப் புரிந்து கொள்ள உதவுகிறது.

## குழுத்தொடர்பை பாதிக்கக் கூடியவைகள்:

| | | |
|---|---|---|
| 1. | பங்கு | Role |
| 2. | தலைமைத்துவம் | Leadership |
| 3. | எதிர்பார்ப்பு | Expectations |
| 4. | முரண்பாடுகள் | Corylicts |
| 5. | கூட்டு இணைத்திறன் | Cohesiveness |
| 6. | ஆளுமைகள் | Personalities |
| 7. | விதிமுறைகள் பழக்கமாகிவிடுதல் | Dogmas |
| 8. | இணையம் | Network |



மேலே சொல்லப்பட்ட அனைத்து குறிப்புகளும் குழுத் தொடர்பு முறைகளை ஏதாவது ஒரு நிலையில் பாதிக்கக்கூடும். எடுத்துக்காட்டாக 'தலைமைத்துவம்'. இது குழு செயல்படும் விதத்தை பெரிதும் பாதிக்கக் கூடிய ஒன்றாகும். அன்று முதல் இன்று வரை சமூக அமைப்பில் தலைமைத்துவ பண்புகள் ஒரு நபரிடம் இருக்க வேண்டிய மிக சிறப்பான பண்பாக எதிர்பார்க்கப்படுகின்றது. சமய தலைவர்கள்/தலைவிகள், சமூகத் தலைவர்கள்/தலைவிகள் என பல்வேறு தலைமைகளை அறிந்திருக்கலாம். இதைக் குறித்த தெளிவான அறிவும் கண்ணோட்டமும் ஒரு ஆயருக்கு கட்டாயம் தேவை. தலைமைத்துவம் என்பது குழுத்தொடர்பில் சிறப்பான பங்கு வகிக்கிறது.

## 1. தலைமைத்துவம் என்றால் என்ன?

தலைமைத்துவம் என்பது அடிப்படையில் ஒருவரின் ஆள் தன்மையில் உள்ள ஒரு தரத்தைக் குறிப்பதாகும். இத்தன்மையினால் இவர் பலரைத் தம்மோடு வைத்துக் கொள்ளும் பக்குவமுடையவராகின்றார். இவ்வகை நடத்தை, நடைபெறுவதற்கான சாத்தியக் கூறுகள் சமுதாய வாழ்க்கையில் மனித உறவுகளிடையே பல்வேறு நிலைகளில் நடைமுறைப் படுத்தப்படுகின்றது. இது எவ்வாறென்றால், சமுதாயம் என்பது ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய பல மக்கள் குழுக்களைக் கொண்டதாகும். இம்மக்கள் குழுக்களை ஆள்வதுதான் தலைமைத்துவம் என்பது மரபு ரீதியாக ஏற்றுக் கொள்ளப்படுகிற ஒரு கருத்தியலாகும். இதனை அலசி, ஆராய்ந்து புரிந்து கொள்வது என்பது முக்கியமானதும், சிக்கலானதுமான செயல்பாடாகும்.

ஒவ்வொரு தனி மனிதமும் சமுதாயத்திலுள்ள குழுக்களில் ஒரு உறுப்பினராக இருந்து அவற்றின் செயல்பாடுகளில் பங்கு பெறுகின்றனர். ஒவ்வொரு குழுவும் அதில் உறுப்பினராக

இருக்கும் நபருக்கு தொடர்புடையதாகவும், அவரைச் சார்ந்ததாகவும் இருக்கின்றது. ஆக தனி மனிதம் என்பது குழுவைச் சார்ந்ததாக இருக்கின்றது. குழு, தனிமனித உறவுகளின் அடிப்படையில் செயல்படுகின்றது. இவ்வகைப் படிமுறை வளர்ச்சியில், நாளடைவில் தனிமனிதர்கள் குழுக்களைத் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொணர்ந்து குழுவின் தலைமைப் பொறுப்பேற்கின்றனர். அவ்வாறு குழுக்களின் மேல் ஆதிக்கம் செலுத்துவோர் தலைவர்கள் எனப்பட்டனர். அவ்வாறே தனி மனிதரும் குழுக்களின் செயல்பாட்டினால் ஈர்க்கப்பட்டு தங்களின் நடவடிக்கைகளை மாற்றிக் கொள்கின்றனர். இது ஒரு தொடர் நிகழ்ச்சியாகும்.

வேறொரு கோணத்திலிருந்து பார்க்கும்போது தலைமைத்துவம் என்பது ஏற்கனவே அனுமானித்திருக்கின்ற ஒரு சில நிகழ்ச்சிகளை நிறைவேற்றும் பொருட்டு குழு உறுப்பினர்களைச், செயல்பட வைக்கும் செயல்முறை என்று விளக்கம் தரப்படுகின்றது. இது எவ்வாறு நிகழ்கிறது என்றால், தலைமைப்பொறுப்பில் இருப்பவர்கள் குழு நடவடிக்கைகளை உருவாக்குவதும், அதைத் தாங்கள் நினைத்தவாறு மாற்றி அமைக்கவும் இயலும். குழு அங்கத்தினருக்குள்ள விருப்பு வெறுப்புகளையும் பங்கினையும் செயல்களையும் தங்கள் விருப்பப்படி இவர்கள் உருவாக்குவதற்கும் வாய்ப்பு இருக்கிறது, என்றாலும் குழு உறுப்பினர்கள், தலைமையைப் பின்பற்றுவதில் தங்களுக்குத் தன்உரிமை இருப்பதையும் தங்களுக்கும் ஆற்றல், அதிகாரம் இருக்கிறது என்பதை உறுதிப்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகளும் நடைமுறையில் இருப்பதைப் பார்க்கலாம்.

மற்றுமொரு கோணத்திலிருந்து நோக்கும்போது தலைமைத்துவம் என்பது பொறுப்பிலிருப்பவர்களுக்கும் குழு உறுப்பினர்களுக்கும் இடையில் உள்ள உறவு நிலையைக் குறிப்பதாகும். இவ்வுறவு நிலை குழுவினரிடையே உள்ள அதிகார உறவைப் புரிந்து கொள்வதற்கு வாய்ப்பாகின்றது. இரண்டு வகையான தலைமைத்துவ மாதிரிகள் அதிகார உறவை விளங்கிக் கொள்வதற்கு உதவி செய்கின்றன.



### ஆ. சர்வாதிகார போங்குடைய தலைமைத்துவம்

அடிப்படையில் ஆதிக்கம் செலுத்த வேண்டுமென்ற சிந்தனை அதிகம் கொண்டவராக தங்களுடைய வழிமுறை தான் ஒரே வழி என்ற மனப்பான்மை காணப்படும். தங்களுடன் பணிபுரிந்தவர்களை மனிதர்களாக கருதாமல் பொருளாக கருதி ஆதிக்கம் செலுத்துவர். தாங்கள் நினைக்கும் கருத்தையே பிறரும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற நிலைமையை ஏற்படுத்துவர். பணியாளர்கள் எவரிடமும் பேச மாட்டார்கள். பணியாளர்கள் எல்லாரும் குழுவில் ஒன்றாக இணைவதையும் விரும்ப மாட்டார்கள். இலாப நோக்கில் செயல்பாடே குறியாக இருந்து செயல்படுவர். தோல்விக்குக் காரணம் குழு உறுப்பினரே என்று குற்றம் சாட்டுவர். எனக்குத் தான் சரியாகத் தெரியும். என் சொல்லைத்தான் மற்றவர்கள் கேட்க வேண்டும். என்னைத்தான் கவனிக்க வேண்டும். என்னுடைய வழிமுறைதான் சிறந்தது, என்ற மனப்போங்கு உடையவராக இருப்பர். கோபம், எரிச்சல் இப்படிப்பட்ட எல்லாவற்றிற்கும் வருத்தம் காட்டிக் கொள்ளாமல் இருத்தல் போன்ற நடத்தைகள் சாதாரணமாகவே காணப்படும்.

சமுதாய வரலாற்றில் ஹிட்லர் இவ்வகைத் தலைமைத் துவத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு. திருமறையில் நேபுகாத் நேச்சார், பிறர் தன்னை வழிபட வேண்டும், தம்முடைய அணுகு முறைகளை மற்றவர்கள் மறுத்துப் பேசக் கூடாது என்ற போங்குடையராகக் காணப்பட்டார். ஆதித் திருச்சபையினர் வளர்ச்சியடைந்து கொண்டிருந்த கால கட்டத்தில் அரசியல் அதிகாரத்திலிருந்த உரோமை அதிகாரிகளும், அரசியல் தலைவர் களும், சமயத் தலைவர்களும் மேலே சொல்லப்பட்ட சர்வாதிகாரப் போங்குடையவர்களாய் காணப்பட்டனர்.

### ஆ. மக்களாட்சி முறையிலான தலைமைத்துவம்

குழுவினர்களின் ஈடுபாடு இருக்க வேண்டும். குழுவினர் களின் உணர்வுகளுக்கும், கருத்துகளுக்கும் மதிப்புக் கொடுத்து ஊக்கப்படுத்த வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் செயல்படுவர். இவ்வகைத் தலைவர்கள் குழுவினர் மீதும், மக்கள் மீதும், மக்கள் சக்தியின் மீதும் நம்பிக்கையுடையவர்களாக இருப்பதால் மக்களை ஒருங்கிணைப்பதால் பலவற்றை

சாதித்துக்காட்ட முடியும் என்ற நம்பிக்கையுடையோராக இருப்பர். முரண்பாடுகளைச் சந்தித்து அவற்றை நீக்குவதற்கான முயற்சியில் பிறரின் உதவியைக்கேட்டு பெற்றுக் கொள்வார்கள். கூட்டாக முடிவு எடுப்பதையும், குழுவாகத் திட்டமிடுவதையும், ஊக்கப் படுத்துவார்கள். குழு மனப்பான்மையுடையவர் களாகவும், உறுப்பினரின் திறமையை வெளிப்படுத்த வாய்ப்பும் உருவாக்கப்படும்.

தலைமைப் பொறுப்பு சுழற்சி முறையில் வருவதும், தங்களை மாற்றிக் கொள்ளும் திறந்த மனதுடையவர்களாயும் இருப்பர். தனிமனிதத் திறமைக்கு மதிப்பு கொடுத்து குழுவின் செயல்பாடுகளுக்கு ஏற்ற வகையில் தனிமனிதத் திறமைகளை பயன்படுத்த உதவி செய்வார்கள். புரிந்து கொள்ளுதலோடு, உண்மையினைத் தேடுவதற்கான முயற்சியில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வர். முரண்பாடுகளில் கற்றுக் கொள்ளும் மனப்பான்மை உடையவர்களாக இருப்பர். வெற்றி கிட்டும் போதும், சாதனை படைக்கும் போதும் அது அனைவரின் வெற்றி என அறிக்கை செய்வார்கள். ஆரம்ப காலத்தில் ஆதித் திருச்சபை மக்களாட்சி அடிப்படையிலான அணுகுமுறையை கொண்டிருந்தாலும் காலப்போக்கில் நிறுவனமயமாகி சர்வாதிகார போங்குடையதாக மாறியிருக்கின்றது. அதிகார உறவுகள் சமன்படுத்தப்படாமல், ஒருவரையொருவர் ஆதிக்கம் செலுத்துகின்ற நிலை ஏற்பட்டிருக்கின்றது. இவ்வகைப் போங்குகள் மாற்றம் பெறுவதற்கு திருமறையை மீண்டும் ஒருமுறை புதிய வெளிச்சத்தில் படிக்க வேண்டியிருக்கின்றது.

## திருமறை காட்டும் தலைமைத்துவம்

திருமறை காட்டும் அதிகாரமும் தலைமைத்துவமும், ஊழியம் பெற்றுக் கொள்ளும்படி அல்ல, மாறாக ஊழியம் செய்யும்படி பணிக்கப்பட்டதாகும். அப்படியானால் இஸ்ரவேலின் வரலாற்றில் தலைவர்கள் இருக்கவில்லையா? இவர்கள் அதிகாரம் செலுத்தவில்லையா? என்ற பல வினாக்கள் ஒருவருக்கு தோன்றுவது இயல்பே!. உண்மையில் இறைமக்களின் வரலாற்றில் தலைவன் / தலைவி பொறுப்புகளில் பலர் இருந்திருக்கின்றனர். எடுத்துக்காட்டாக,



| | |
|---|---|
| 1. படைத்தலைவர்கள் | 2 சாமு. 17 : 25; 23:2-23 |
| 2. சிறைச்சாலைத் தலைவர்கள் | தொ.நூ. 39 : 21-23 |
| 3. குலத் தலைவர்கள் | 1குறி. 15 : 22 |
| 4. சபைத் தலைவர்கள் | மாற். 16 : 22 |
| 5. ஆலோசனைச் சங்கத் தலைவர்கள் | ச.உ. 12:11- ; : 3-11 |
| 6. பாடகர் தலைவர்கள் | 1 குறி. 15 : 27; 23:3-11. |
| 7. அப்பம் சுடுவோரின் தலைவர்கள் | தொ.நூ.40:2,16,20,22; 41:10 |
| 8. இன குழுக்களின் தலைவர்கள் | எரே. 31:4 |

இவ்வாறு பல தலைவர்கள் இருந்ததைப் பார்க்கின்றோம். காலப்போக்கில் இவ்வகைத் தலைவர்கள், எதிர்பார்த்தபடி நீதியை நிலைநாட்ட தவறியதினால் இன்னொரு தலைமையை எதிர்பார்த்து காத்திருக்க வேண்டியதாயிற்று. அவ்வகைத் தலைவரை பாடுபடுகின்ற செயல்படுகின்ற தாசனாக எதிர்பார்த்தனர். இவ்வகைத் தலைமைத்துவம் இயேசுவில் நிறைவேற்றியதை நற்செய்தி நூல்கள் வாயிலாகப் புரிந்து கொள்கிறோம். தலைமைத்துவ பண்பினைக் குறித்து இயேசு சொல்லியதை இங்குக் குறிப்பிட்டாக வேண்டும்.

இயேசு சீடர்களை தம்மிடம் வரவழைத்து, "பிறஇனத்தவ ரிடையே தலைவர்கள் எனக் கருதப்படுகிறவர்கள் மக்களை அடக்கி ஆளுகிறார்கள். அவர்களுள் பெரியவர்கள் அவர்கள் மீது தங்கள் அதிகாரத்தைக் காட்டுகிறர்கள். ஆனால் உங்களிடையே அப்படி இருக்கக்கூடாது. உங்களுள் பெரியவராக இருக்க விரும்புகிறவர் உங்கள் தொண்டராக இருக்கட்டும். உங்களுள் முதன்மையானவராக இருக்க விரும்புகிறவர், அனைவருக்கும் பணியாளராக இருக்கட்டும்" (மாற்கு 10 :42-44) என்றார். இதை இயேசு தம்முடைய வாழ்க்கையில் வாழ்ந்து காட்டினார், இதன் சான்றினை அவரின் வாழ்க்கை, பாடு இறப்பு, உயிருற்றெழல் மூலம் அறிந்துகொள்கின்றோம்.

"கடவுள் வடிவில் விளங்கிய அவர், கடவுளுக்கு இணை யாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக் கொண்டிருக்க வேண்டிய தொன்றாகக் கருதவில்லை. ஆனால் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார்" (பிலிப்பியர் 2 : 6,7). மேலும்,

இயேசுவுக்கு ஏற்பட்ட சோதனைகள், ஆன்மிக உந்துதல்கள் தனிமையான அனுபவங்கள், இறைவேண்டுதல்கள், மக்கள் மீது அவருக்கிருந்த அன்பு உரோமை அரசில் விளிம்பிற்கு தள்ளப்பட்ட மக்கள் மீது அவர் காட்டிய பரிவும்,பாசமும் இவை யாவும் இயேசுவை முழுமனிதராகவும், கடவுளின் மைந்தராகவும், மக்கள் தலைவராகவும் இறையரசின் செயல் வீரராகவும் உருவாக்குவதில் பெரும்பங்கு வகிக்கிறது.

## 2. ஆதித்திருச்சபையில் தலைமைத்துவம் எவ்வாறிருந்தது?

### 1. கூட்டுறவு மனப்பான்மை :

ஆதித் திருச்சபையில் விசுவாசிகள் அனைவரும் ஒன்றா யிருந்து யாவற்றையும் பொதுவாய் வைத்து அனுபவித்தார்கள். காணியாட்சிகளையும், உடைமைகளையும் விற்று அவனவன் தேவைக்கேற்ப எல்லாருக்கும் பகிர்ந்து கொடுத்து வந்தார்கள். அவர்கள் ஒரே மனத்தோடு கோவிலில் ஒவ்வொரு நாளும் பேருவகையோடும், எளிய உள்ளத்தோடும், வீடுகள்தோறும் அப்பத்தைப் பிட்டு, உணவைப் பகிர்ந்து உண்டு கடவுளைப் போற்றி வந்தார்கள்.

மக்களெல்லாரும் திருத்தூதுவரிடத்தில் அன்பாய் இருந்தார்கள் (திப. 2:43-47). கூட்டுறவு மனப்பான்மை இருந்ததினால் கடவுளை மையப்படுத்திய கலாச்சாரம் பின்பற்றப்பட்டது. ஒருவருக்கொருவர் அன்பாயிருத்தல், பகிர்ந்து கொள்ளுதல், உறுதியாயிருத்தல், உண்மையுள்ளவர் களாயிருத்தல், சொத்துகளைச் சுரண்டாமலிருத்தல், அப்படியே சுரண்டினாலும் அதற்காக மனம் வருந்துதல், திருந்தி வாழ்தல், உயிரை விடுதல் போன்ற வரலாற்று நிகழ்வுகளை அறிந்திருக் கின்றோம். அதோடுகூட முரண்பாடுகளைச் சந்தித்து அவற்றைக் களைந்து வாழ்தல் பெண்களோடு இணைந்து பணியாற்றுதல் போன்ற நற்பண்புகளை அடிப்படையாகக் கொண்டு வாழ்வதற்கு, ஆதித் திருச்சபையில் இருந்த கூட்டுறவு மனப்பான்மை பெரிதும் உதவியாக இருந்தது.



### 2. முரண்பாடுகளைச் சந்தித்தலும், குற்றங்களைச் சுட்டுதலும்

ஆதித் திருச்சபையில் காணப்பட்டத் தலையாய சிக்கல்கள் என்னவெனில், யூதருக்கும், யூதரல்லாத கிறிஸ்தவர்களுக்கும் இடையில் காணப்பட்ட சமுதாய, சமயச் சட்டங்களைப் பின்பற்றுவதில் உள்ள முரண்பாடுகள். எடுத்துக்காட்டாக, திருச்சட்டம், விருத்தசேதனம் உணவுப் பழக்கவழக்கங்கள் போன்ற மரபு ரீதியான செயல்களை நடைமுறைப்படுத்துவதில், பின்பற்றுவதில் உள்ள சிக்கல்கள். எருசலேம் மாமன்றத்தில் பேதுரு ஆற்றிய உரை (திப. 15). மேலே சொல்லப்பட்ட சிக்கல்களை மையப்படுத்தியதாக அமைந்திருந்தது. மேலும் சபையில் பெண்கள் நடத்தை இவ்வாறுதான் இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பைக் குறித்து பவுல் விளக்கம் தர முயல்வது, அடிமைகள் அடிமைகளல்லர். கிறிஸ்துவுக்குள் அனைவரும் சமம் என்ற (கலாத்தியர் 3:28) உண்மையை உணர வைத்தது.

அனனியா, சப்பிராள் (திப. 5 : 1-11) நிலத்தை விற்று பணத்தைத் திருடியதைக் குற்றம் என்று சுட்டிக்காட்டியது, நற்செய்திப் பணியில் பவுலும், பர்னபாவும் தர்க்கத்தில் ஈடுபட்டது. அரசியல் அதிகாரத்தில் இருப்பவர்களிடம் குற்றங்களைச் சுட்டிக் காட்டியது போன்ற செயல்பாடுகள் அனைத்தும் ஆதித் திருச்சபை தலைவர்களான திருத்தூதர்களின் துணிவைக் காட்டுகின்றது. முரண்பாடுகளைச் சந்தித்து குருதிச்சான்றினராய் மரித்தனர். முரண்பாடுகளை சுட்டிக் காட்டவும் தயங்கவில்லை.

ஒநேசிமு தப்பி ஓடி வந்த அடிமையாயிருந்தும், அவரைத் தண்டிக்காமல் உடன் பணியாளராய் ஏற்றுக் கொள்ளும்படி பிலோமோனைக் கேட்டுக் கொள்கின்ற பண்புநலன் பவுலிடம் காண்கிறோம். குறிசொல்லிப் பிழைத்துக் கொண்டிருந்த பெண்ணை மற்றவர்கள் தவறாகப் பயன்படுத்தி, உழைப்புச் சுரண்டலில் ஈடுபடுத்தினர். அதைக் கண்டித்து, அந்தப் பெண்ணை நலப்படுத்துவதின் மூலம் அன்புக்கும், உறவுக்கும் முக்கியத்துவம் கொடுத்து பணியாற்ற வேண்டும் என்ற சிந்தனையைப் பெற்றுக் கொள்கிறோம்.

### 3. அதிகாரமும் பொறுப்புகளும் பகிர்ந்தளிக்கப்படல்

கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை பெருகும் போது, அறிவிப்புப் பணிக்கும், பிறபணிக்கும் குறிப்பாக பந்தியமர்கின்றவர்களை கவனிக்கின்ற பணிகளைச் சரியாக நடத்துவதற்காக ஏழு பேர் நியமிக்கப்படுகின்றனர் (திப. 6:5). இதனால் பொறுப்புகளைப் பகிர்ந்தளித்தனர். அதிகாரக் குவிப்புத் தவிர்க்கப்படுகின்றது. பவுலும் பர்னபாவும் சபைதோறும் மூப்பர்களை ஏற்படுத்தினர் (திப. 14:23). ஊர்தோறும் மூப்பர்களை ஏற்படுத்த தீத்துவுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது (தீத்.1:5). அப்பொல்லோ என்னும் திறமையான விசுவாசிக்கு போதிப்பதற்கான அனுமதி கொடுக்கப்பட்டது (திப. 18:24). தீத்துவும் தீமோத்தேயுவும் திருத்தூதர்களின் சார்பாளராகப் பணியாற்றினர். கடவுள் பணியில் அனைவரும் உடன் ஊழியர்கள் (1கொரி. 3 : 7-9) என்ற கருத்தியலின் அடிப்படையில் அனைவரும் பணியாற்ற அழைக்கப்பட்டனர்.

திருத்தூதர், இறைவாக்கினர், ஆயர், மேய்ப்பர், மூப்பர், பேராயர், உதவிக்காரர்கள், பணிப்பெண்கள் என்ற அமைப்புமுறை பணிசெய்வதற்காக அமைக்கப்பட்டதேயன்றி, அதிகாரம் செய்வதற்காக அல்ல என்பதே ஆதித் திருச்சபையில் தலைமைத்துவப் பொறுப்பில் இருந்தவர்களின் போதனையாகும்.

1பேதுரு 5:1-3இல் பேதுரு மூப்பருக்குப் பின்வருமாறு அறிவுபுகட்டக் காண்கிறோம். "கிறிஸ்துவின் துன்பங்களுக்குச் சாட்சியும், வெளிப்படவிருக்கும் மாட்சியில் பங்குகொள்ளப் போகிறவனுமாகிய நான், உடன் மூப்பன் என்னும் முறையில் மூப்பர்களுக்குக் கூறும் அறிவுரை: உங்கள் பொறுப்பிலிருக்கும் கடவுளின் மந்தையை நீங்கள் மேய்த்துப் பேணுங்கள்; கட்டாயத்தினால் அல்ல, கடவுளுக்கேற்ப மனஉவப்புடன் மேற்பார்வை செய்யுங்கள்; ஊதியத்திற்காகச் செய்யாமல், விருப்போடு பணி செய்யுங்கள். உங்களிடம் ஒப்படைக்கப் பட்டவர்களை அடக்கி ஆளாமல் மந்தைக்கு முன்மாதிரிகளாய் இருங்கள்" என்று குறிப்பிடுகிறார்.



### 4. ஒப்படைப்பும் தியாக மனப்பான்மையுடையவராயிருத்தல்

அக்கிலா, பிரிஸ்கில்லா தம்பதியினர் கூடாரத்தொழில் செய்பவர்கள் (திப. 18:2). பவுலுக்கு அடைக்கலம் கொடுத்தவர்கள். அவர்களின் ஒப்படைப்பு பாராட்டுக்குரியது. இவர்களைக் குறித்து பவுல் கூறுகையில், அக்கிலா, பிரிஸ்கில்லா இவர்கள் "என் உயிரைக் காக்கத் தலைகொடுக்கவும் முன்வந்தார்கள். அவர்களுக்கு நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் மட்டும் அல்ல, பிற இனத்துத் திருச்சபைகள் அனைத்துமே நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கின்றன. அவர்கள் வீட்டில் கூடும் திருச்சபைக்கும் வாழ்த்து சொல்லுங்கள்" (உரோ. 16 :4-5) என்றார்.

ஆதித் திருச்சபையில் கூடிவந்த பல பெண்கள் தங்களின் பொருள்களையும், சொத்துக்களையும், வீடுகளையும் திருச்சபை வளர்ச்சிக்காக ஒப்பு கொடுத்தனர். ஸ்தேவானின் இறப்பு கிறிஸ்துவின் மீது அவருக்கிருந்த பற்றுமையையும், மக்கள் வாழ்வடைய வேண்டுமென்ற ஆதங்கத்தையும் வெளிப் படுத்துகின்றது. பேதுரு, ஸ்தேவான், யாக்கோபு ஆகியோரின் இறப்பு அவர்களின் உறுதிப்பாட்டையும், தியாகத்தையும் முன்னிறுத்துகின்றது. இயேசுவின் வாழ்வு, இறப்பு, உயிர்த்தெழல் இவற்றை அறிவிக்க வேண்டும் என்ற அர்ப்பணிப்பும், சமய சமுதாய அரசியலில் துரைத்தனங்களைக் கண்டித்து இவர்கள் குருதிச்சான்றினராக மரித்தனர், கொலையுண்டு செத்தனர்.

### 5. பெண்களோடு இணைந்து பணியாற்றுதல்

- **யோவானின் தாயார் மரியாள்** - சபை கூடிவருவதற்கு உதவியாக இருந்தவர். பேதுரு சிறையிலிருந்து தப்பிவந்த போது அவருக்கு அடைக்கலம் கொடுத்தவர் (திப. 12:12).
- **ரோதை :** மரியாளின் பணிப்பெண் திருத்தூதருக்கும், ஆதித் திருச்சபைப் பெண்களுக்கு தன் உழைப்பால் உதவியவர் (தி.ப. 12:13).

- **தபீத்தாள்** என்னும் தொர்க்காள் பேதுரு உயிரோடு எழுப்பிய பெண் தம் உழைப்பின் திறமையால் சபை வளர்ச்சிக்காகப் பெரிதும் உதவியவர் (திப. *9 : 36-43).*
- **லிதியாள்** : பிலிப்பி நகரின் துணி வியாபாரியான பெண் திருத்தூதரை விருந்தோம்பி, கிறிஸ்தவத்தை வளர்க்க உதவி செய்தவர் (திப. *16:14).*
- **அப்பியாஸ்** : வசதியானவர், பிலோமோனின் மனைவி இவர்களின் வீட்டில் சபை கூடி வருதலை உற்சாகப் படுத்தியவர் (பிலேமோன் *2).*
- **தாமரி** : அத்தேனே பட்டணத்தில் முதல் முதலாக இயேசுவை ஏற்றுக் கொண்டு கிறிஸ்தவரான பெண். அங்குச் சபை வளர பொறுப்பெடுத்து உதவியவர் (திப. *17 : 19-34).*
- பெயிபா:(போபே) கெங்கிரேயாவில் அருட்பணியாளராக இருந்தவர், பவுலின் பாராட்டைப் பெற்றவர். அவருடன் பல பெண்கள் பணியாற்றி இருக்கின்றனர் (உரோ. *16:1-2).*
- **பிலிப்புவின் நான்கு மகள்கள்** : ஆதித் திருச்சபையில் கடவுளின் வார்த்தையைக் குறித்துக் கற்பிப்போராய் இறைவாக்குரைப்போராய் வாழ்ந்தனர் ( தி.ப. *21:8-10).*
- **பிரிஸ்கில்லாள்** : திருச்சபை வளர்ச்சிக்கு குடும்பமாக உதவி செய்தவர்கள் ( திப. *18 : 1-8).*
- **யெயோதியாள் சிந்திக்கேயாள்** : பவுலோடு கூட உடன் ஊழியர்களாய் பணியாற்றியவர்கள் (பிலிப்பியர். *4 : 2,3).*
- **லோவிசாள், ஐனிக்கேயாள்** : தீமோத்தேயுவைச் சிறப்பான திருச்சபை ஊழியராக உருவாக்கிய தாயும் மகளுமாவார்கள் *(2* தீமொ. *1:5).*

இவ்வாறு பெண்களின் உழைப்பை அவர்களின் பங்களிப்பை ஏற்பது. தலைமைப் பொறுப்பிலிருப்பவர் களுக்குத் தேவையான அடிப்படை பண்பாகும்.



### *3.* இன்றையத் திருச்சபைத் தலைவர் சந்திக்கின்ற அறைகூவல்கள்

1. **கூட்டுறவு:** அதிகாரப்பகிர்வு, முரண்பாடுகளைச் சந்தித்தல், தீர்த்தல், அர்ப்பணிப்பு, ஒப்படைப்பு மற்றும் அனைவரையும் ஒருங்கிணைந்து நற்பண்புகளோடு கூட தொலை தூர பார்வை, பணிவு, அடக்கம், அன்பு, சுயக்கட்டுப்பாடு, உறுதிப்பாடு, விழிப்புணர்வு, உற்சாகம், திறமைகளை வளர்த்தல், உண்மையுள்ளவர்களாய் இருத்தல், நம்பகத் தன்மையுடையவராதல், சீர்தூக்கல் செய்தல், உழைக்க வேண்டும் என்ற எண்ணம் இவற்றைக் கொண்ட தலைமைத்துவப் பண்புகள் உள்ளனவா? என சீர்தூக்கிப் பார்க்க வேண்டிய கட்டத்தில் நிற்கிறோம்.
2. **ஒருங்கிணைத்தல்:** மக்களை இயக்க ரீதியில் கொண்டு செல்லுதல், உறவுக்குள்ளாக வளரச் செய்தல், திருச்சபையின் நோக்கத்தை நோக்கி வழிநடத்துதல், பிறர் நம்மை அணுகுவதற்கு வழிவகுத்தல், தற்காப்புக் கவசங்களை அகற்றி விடுதல், பாராட்டி உற்சாகப்படுத்துதல், பிறருடைய சொல்லுக்கு மதிப்புக் கொடுத்தல், இதன் மூலம் திருச்சபை மக்களை ஒருங்கிணைத்து இயங்கச் செய்து உடன் பணியாளராக இருத்தல்.
3. **சிறப்பான தொடர்பாளராக இருத்தல்:** பேராயத்திற்கும், திருச்சபைக்கும் பாலமாக அமைந்திருத்தல் மட்டுமல்ல. திருச்சபையை ஒரு சமுதாயமாகக் கட்டி எழுப்புவதில் சிறப்பான எடுத்துக்காட்டாக, குழுத் தொடர்பு முறை ஒருவரோடொருவர் இணைந்து செயல்படுவதோடு, பொதுவான இலக்கைக் கொண்டுள்ளது. சட்டத்திட்டங் களுக்குட்பட்டது. ஏற்கனவே முடிவு செய்யப்பட்ட கதாப்பாத்திரங்களால் உருவாக்கப்பட்டது. மற்றவர்களுக்குத் தங்களை இனங்காட்டிக் கொள்வது குழுவின் வேலை. மனித உறவுகளில் ஏற்படும் உறவுகளையும், பாதிப்புகளையும், ஆய்வு செய்வது குழுத் தொடர்பை புரிந்து கொள்ள உதவுகிறது. ஊக்குநராகப் பணியாற்றுதல், இந்தியா பல்சமயச் சூழலில் இயங்கிக் கொண்டிருப்பதால் பிற சமயத்தவருடன்

உரையாடலில் ஈடுபடவும் வேண்டியிருக்கின்றது. திருச்சபை இதழ்கள், கடிதங்கள் இவைதவிர, மனித ஊடகங்களாக மாறி தொடர்பை உறவை வளர்த்துக்கொள்ள வேண்டியிருக்கிறது.

4. **ஆற்றலற்றத் தன்மையில் தான் கடவுளின் ஆற்றல் செயல் படுகின்றது என்பதைப் புரிந்து கொண்டு செயல்படுதல்:** வலுவிழந்து, வாய்ப்பேச இயலாத, தங்களின் உரிமைகளைக் கேட்டுப் பெற்றுக்கொள்ள முடியாத சக்தியற்ற மக்களின் ஒருங்கிணைந்த சக்தியாக இயேசு நிற்கிறார் (Power of the Powerless) என்பதை ஏற்றுக் கொள்வது. உலகில் பலமுள்ள வற்றை வெட்கப்படுத்த கடவுள் பலவீனமானவர்களைத் தெரிந்து கொண்டார் என்ற ஒப்புமைக்கிணங்கச் சிந்திப்பது. கிறிஸ்தவப் பண்புநலன்களை உடையவர்களைப் பார்த்து இவ்வுலகப் போங்குடையவர்கள் முட்டாள்கள் எனக் கணித்தாலும், பலவான்களை அரியணையிலிருந்து தள்ளி தாழ்மையானவர்களை கடவுள் உயர்த்துவார் என்ற உறுதிப்பாட்டோடு இறைப் பணியாற்றுதல்.

5. **பெண்களின் உழைப்பை ஏற்றல், மதிப்புக் கொடுத்தல்:** ஆதித் திருச்சபையில் பெண்களின் பங்களிப்பைக் குறித்த பகுதிகளை மீண்டும் திருச்சபையில் படித்து இன்றைக்குள்ள பெண்களின் பங்களிப்பை ஏற்றல். குறிப்பாக, திருமறைப் பெண்கள் (Bible Women) எனப்படுவோருக்கு உழைப்புக்கு ஏற்ற ஊதியம் கிடைப்பதில்லை. அவர்கள் கடைநிலை ஊழியர்களைக் காட்டிலும் குறைவாகவே ஊதியம் பெறுகின்றனர்.

   (ஒரு சில திருச்சபைகளில்) இதைக்குறித்த விழிப்புணர்வுக் குள்ளாக வருதல் தேவையாகின்றது. குறிப்பாகத் திருமறையில் பெண்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்படும் திருமறைப் பகுதிகளைக் கற்றிருந்தால் அவற்றையே திரும்பத் திரும்பச் சொல்லி, பெண்களை ஓரங்கட்டாமல் இருத்தல் தேவையாகின்றது.

6. **நம்முடைய அடையாளங்களை மீட்டெடுத்தல்:** இறைச் சாயலை இழந்துவிட்ட நாம் மீண்டும் மனிதத்தைப் பெற்றுக் கொள்வதற்காக, இறைசாயலைப் பெற்றுக் கொள்வதற்காக பல்வேறு முயற்சிகளில் ஈடுபட வேண்டியிருக்கிறது. கடவுளின் வார்த்தையை, வாழ்க்கையின் அனுபவங்களோடு புரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. இயேசுவின் இயக்கத்தில் ஒன்றுபடுத்திக்கொண்டு வாழ்வுக்கான போராட்டத்தில் ஈடுபட வேண்டியிருக்கிறது. வாழ்விழந்த மக்களுக்காகத் தங்களை அர்ப்பணித்துக் கொள்ள தனிநபர்களின் செயல் பாடுகளில் இறைச்சாயலைக் காண வேண்டியிருக்கிறது.



   மற்றவர்கள் மனிதத்தை இழந்துபோகச் செய்தவர்கள் இருதயத்தில் விருத்தசேதனம் செய்ய வேண்டியிருக்கிறது. பெண்களை இழிவாக எண்ணுகிறவர்கள் மனம் திரும்பு வதினால் மருவுருபமாக வேண்டியிருக்கிறது. குழந்தைகளின் உழைப்புச் சுரண்டலை எதிர்த்துப் பேசாதவர்கள் இறை அரசுக்குத் தகுதியற்றவர்கள் என்று உரக்கச் சொல்ல வேண்டியிருக்கிறது. கடவுளைத் தாயாக, தந்தையாகப் பார்க்க வேண்டியிருக்கிறது. அனைவரும் "கிறிஸ்துவுக்குள்" ஒன்றே என்பதை வலியுறுத்த வேண்டியிருக்கிறது.

7. **பொறுப்பாண்மை:** 'Economics' என்ற ஆங்கிலச்சொல்லும் (OIKUMENE) என்ற கிரேக்கச் சொல்லும் ஒரே வேர்ச் சொல்லிலிருந்து வருகின்றன. கிறிஸ்தவப் பொறுப்பாண்மை என்பது பொருளாதாரத்தை எவ்வாறு கையாளுகின்றோம் என்பதை காட்டுகிறது. திருச்சபைச் சொத்துக்கள் வணிக வளாகங்களாக உருவாவதைத் தடுக்க முடியுமா? அனனியா, சப்பிராள் தம்பதிகள் பொது பணத்தைத் தவறாகப் பயன்படுத்தியதால் தலைவர்களையும், மக்களையும் சந்திக்க முடியாமல் உயிர்விட்டனர். பொருளாதாரத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் உலகப் போங்கை கடிந்துரைக்க வேண்டியிருக்கிறது. இதைத்தான் இவ்வுலகப் போங்கு என்கிறது திருமறை. தற்போது நடைமுறையிலிருக்கும் உலகமயமாக்கலும் இதைத்தான் சுட்டுகிறது.

உலகமயமாக்குதல் என்பது இரண்டு நிலையில் நடைபெறுகிறது.

முதல் நிலை, உலகமெங்கும் போய் நற்செய்தியை அறிவிப்பதினால், பிற மக்களைச் சென்று அடைவதற்கான வாய்ப்பு உருவாகிறது.

இரண்டாவது நிலை, பொருளாதார ரீதியான உலகமய மாகுதல் இதன் மூலம் மக்கள் பொருளாதார அடிப்படையான ஒடுக்குதலுக்குள்ளாக தள்ளப்படுகின்றனர். இன்றையத் திருச்சபை தலைவர்கள் இதனைக் குறித்த தெளிவான பார்வை உடையவர்களாக இருத்தல் வேண்டும். பணத்திற்குத் தலை வணங்குகிறோமா? கடவுளுக்குத் தலை வணங்குகிறோமா? என்ற நிலைப்பாட்டை எடுக்க வேண்டும். அதிகாரக் குவிப்பா? அதிகாரப் பகிர்வா? என்ற வினா எழுப்ப வேண்டும். மக்கள் வாழ்வுக்கு நேராக வழிநடத்தப்படுவதற்கான வழிமுறைகளை கையில் எடுக்க வேண்டும். ஒருசில வினாக்களை எழுப்பி இதனை நிறைவு செய்வோம்.

1. வளர்ச்சிப் படிகளில் மிகத் தலையாயது ஒளிவுமறைவற்ற நிலை (Transperancy). நிர்வாக அமைப்புகளிலும், இயக்கங் களிலும், முடிவெடுக்கின்ற சூழ்நிலைகளிலும், குழு உறுப்பினர் அனைவருக்கும் தகவல் அறிந்திருத்தல் தேவையானது. திருத் தூதர் தங்களுக்குள் தகவல் பரிமாறிக் கொள்வதிலும் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதிலும் ஒளிவுமறைவற்றத் தன்மையைப் பின்பற்றினர். திருத்தூதர்கள், இறைவாக்கினர், நற்செய்திபணியாளர், ஆயர், மேய்ப்பர், மூப்பர், பேராயர்கள், உதவிக்காரர் என பல நிலைகள் இருப்பினும் அவர்கள் கிறிஸ்துவை மையப்படுத்திய பணியினை செய்கிறோம் என்று உறுதியான முடிவுவோடு இருந்தனர். இதனால் அவ்வப்போது சிறு சிறு குழப்பங்களும் சிக்கல்களும் ஏற்பட்டாலும் ஒளிவு மறைவற்ற தன்மை அவர்களிடம் இருந்தது.

இதனை இன்றையத் திருச்சபையில் நடைமுறைப்படுத்து வதற்கான வாய்ப்புக் கூறுகளை வெளிக்கொண்டு வரவேண்டும்.

2. பதில் சொல்ல வேண்டிய பொறுப்பாண்மையுடைய வராய் (Accountability) இருத்தல் என்பது இன்றைக்குள்ள தலையாய சிக்கலாக இருக்கின்றது. பேராயர்கள் (கண்காணிக் கின்றவர்கள்) பற்றி பவுல் கூறுகையில் தங்கள் சொந்த குடும்பத்தை நன்றாய் நடத்த தெரிந்திருப்பது தேவை (1தீமொ. *3:4*). அதே வேலை ஆயர்பணியும் தெரிந்திருப்பது தேவை *(1 தீமொ. 3:2; தீத். 1:9)* என அறிவுரை தருகின்றார். இப்பேர்பட்டவர்கள் நிர்வாகத் திறமையும், பற்றுதலை கற்பிக்கும் திறன் உடையவர்களாய் இருத்தல் நன்று என்கிறார். தீத்துவும், தீமோத்தேயும், திருச்சபைகளுக்கெல்லாம் முதல் பேராயர்கள் எனக் கருதப்படுகின்றனர். இவர்கள் பலருக்கு பதில் கொடுக்க வேண்டிய பொறுப்பில் இருப்பவர்கள் என்ற உண்மையை பவுல் இவர்கள் மூலம் எடுத்துரைக்கிறார். அனனியா, சப்பிராள் திருச்சபையின் பொதுப் பணத்தைக் கையாடல் செய்ததால் கடவுள் முன்னிலையில் பதில் சொல்ல முடியாதவர்களாய் முகம் குப்புற விழுந்து செத்தார்கள் என்று பார்க்கின்றோம். இன்றைக்கு திருச்சபைச் சொத்துகள் கையாடல் செய்யப்படுகின்றது. பதிவுகளில் முறைகேடு, இவ்வாறு செய்வோர் கடவுளுக்கும், சபைக்கும் பதில் சொல்லி ஆக வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றனர்.



அவ்வாறு பதில் கொடுக்கும் பொறுப்பு நம்மிடம் இருக்கிறதா? என ஆய்ந்து பார்க்க வேண்டும்.

3. முடிவெடுக்கின்ற நிலையில் பங்கேற்பை (Participatory) அதிகப்படுத்துதல், அதாவது இன்றையத் திருச்சபை நிறுவன மயமாகிவிட்ட ஒன்றாக இருக்கும்போது, மக்களாட்சி அடிப்படையிலான கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு செயல்பட வேண்டும். அவ்வாறு நோக்கும்போது, முடிவெடுக்கின்ற நிலையில் பிறரை, அதாவது மக்களை எந்த அளவுக்குப் பங்கேற்க வைக்கிறோம் என ஆராய வேண்டிய நிலையில் இருக்கின்றோம். திருச்சபையின் அனைத்து அமைப்பு முறைகளிலும் முடிவெடுத்தல் என்பது பங்கேற்பு முறையில் செயல்படுத்தப்படும்போது கடவுளின் நீதி செயல்முறைப் படுத்தப்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. திருச்சபையில் அனைத்து உறுப்பினரின் ஈடுபாட்டிற்கும், கருத்திற்கும் வாய்ப்பிருக்கிறதா? எனப் பார்க்க வேணடும். திருச்சபையின் வளர்ச்சி, நோக்கம், முன்னேற்றம் ஆகியவை சபை மக்களால் முடிவெடுக்கப்பட்டு நிர்வாகத்தினரால் நிறைவேற்றப்படு கின்றதா? அல்லது அதிகாரத்தில் இருக்கும் ஒரு சிலரின் முடிவே இறுதியானதா என்ற வினாவை எழுப்ப வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம்.

அதேபோன்று வழிபாட்டிலும் அனைவரும் பங்கேற்கும் வகையில் வழிபாடு அமைந்திருக்கிறதா? என்று நோக்க வேண்டும். இல்லையென்றால் மீண்டும் ஆதித் திருச்சபையை நினைவுக்குக் கொண்டு வருவோம். அங்குச் சொல்லப் பட்டிருப்பது என்னவெனில், "இறுதி நாள்களில் நான் மாந்தர் யாவர் மேலும் என் ஆவியை பொழிந்தருள்வேன். உங்கள் புதல்வரும், புதல்வியரும் இறைவாக்கு உரைப்பர். உங்கள் இளைஞர்கள் காட்சிகளையும், உங்கள் முதியோர் கனவு களையும் காண்பர். அந்நாள்களில் உங்கள் பணியாளர் பணிப்பெண்கள் மேலும் என் ஆவியைப் பொழிந்தருள்வேன். அவர்களும் இறைவாக்கு உரைப்பர்" (தி.ப. 2:17,18). இது யோவேல் தீர்க்கன் மூலமாகவும் முன் உரைக்கப்பட்டது. அறிவிப்பு பணி, அரசியல் ஈடுபாடு இரண்டிலும் அனைவருக்கும் பங்கு உண்டு, என்பதை இன்றையத் திருச்சபையில் உறுதிப்படுத்துவது எவ்வாறு என்று எண்ணிப்பார்க்கவும் அழைக்கப்படுகின்றோம்.

தலைமைத்துவம் என்பது மேற்கூறிய அனைத்து காரியங்களையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது என்பதை நினைவில் கொண்டு குழு தொடர்பை வலுப்படுத்த வேண்டும்.

குழுத்தொடர்பை வலுப்படுத்தக்கூடிய தொடர்பு முறைகளாக பின்வருவனவற்றைச் சுட்டிக்காட்டலாம். குழு விளையாட்டுகள், கலந்துரையாடல்கள், பயிற்சிகள், வினாடி வினாக்கள், பேட்டிகள், பட்டிமன்றங்கள், பயிற்சிப் பட்டறைகள், கருத்துப் பட்டறைகள், உரையாடல்கள், அருளுரைகள், ஒலி-ஒளித்தொடர்பு சாதனங்கள், தெருக்கூத்து, தெரு-நடனங்கள், பொம்மலாட்டம், சுவரொட்டி தவிர ஒரு தனிநபரே மனித ஊடகமாக உருவாக முடியும்.

எடுத்துக்காட்டாக இயேசுவுக்கு எதிராகக் கூடிய குழுக்கள் ஒரு குறிப்பிட்ட நோக்கத்தை மனத்தில் நிறுத்தி இயேசுவைக் கொலைச் செய்ய வகைதேடி அவருக்கு எதிராகத் திட்டம் தீட்டுவதற்காகக் கூட்டப்பட்ட குழுக்களாகும். இயேசுவுக்கு ஆதரவான குழுக்கள் அவரிடம் உண்மையைக் கண்டுக் கொண்டாலும் பலவேளை சிதறடிக்கப்பட்டார்கள். என்றாலும் இயேசுகிறிஸ்து பலவேளைகளில் குழுத் தொடர்பில் சிறப்பாகச் செயல்பட்டார் எனச் சொல்லலாம்.



குறிப்பாக, பரிசேயர், மறைநூல் அறிஞர், சதுசேயர், இவர்கள் ஒரு குழுவாக இணைந்து கொண்டு கேள்வி எழுப்பிய போதெல்லாம், சரியான முறையான பதிலுரை கொடுத்தார். சீடர்களும், இயேசுவும் எப்பொழுதும் சிறு குழுவாகவே செயல்பட்டனர். பெரிய குழுக்களைச் சந்தித்த போதும் உரைகளும், உணவும் பகிரப்பட்டன. மலைப்பொழிவு (மத்தேயு *5:1-7:29*) ஐயாயிரம் பேருக்கு உணவு வழங்குதல் (யோவான் *6:9-14*) போன்ற தருணங்கள் பெரிய குழுக்களைச் சந்தித்து பேசியபோது நடைபெற்ற நிகழ்ச்சிகளாகும்.

இயேசுவின் பிறப்பு ஒரு பங்கேற்பு முறைச்சார்ந்த குழுத்தொடர்பாகும் இது கடவுள் மேலிருந்து ஆட்சி செய்கிறவர் எனும் நிலையை மாற்றி கடவுள் மனுக்குலத்தின் பங்கேற்பை விரும்புகிறார் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் ஒரு பெண்ணின் மூலம் அதுவும் சமுதாயத்தினால் ஒரு சாதாரண சாட்சியாகக்கூட மதிக்கப்படாத நிலையில் இருந்த ஒரு பெண்ணின் மூலம் இந்த உலகத்தின் மீட்பர் பிறக்கிறதைக் காண்கிறோம் (லூக்கா *1:26-28*). கலாத்தியர் திருமுகத்தில், "காலம் நிறைவேறினபோது, ஒரு பெண்ணிடத்தில் பிறந்தவரும் நீதிச் சட்டத்திற்கு கீழ்ப்படிந்தவருமாகிய தம்முடைய மகனைக் கடவுள் அனுப்பினார்" என்று (கலாத்தியர் *4:5*) எழுதப்பட்டிருக்கிறது.

நிச்சயமாக மனுமக்கள் அனைவருக்கும் இச்செய்தியை அறிவிப்பதில் பங்குண்டு என்பதும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. "அந்நாள்களில் மனுமக்கள் யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன் அப்பொழுது உங்கள் மகன்களும், மகள்களும், இறைவாக்கு சொல்லுவார்கள், உங்கள் மூப்பர் சொப்பனங் களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள். வேலைக்காரர்கள் மேலும், வேலைக்காரிகள் மேலும் என் ஆவியை ஊற்றுவேன்" (யோவேல் 2.28,29) எனும் இறைவாக்கு நிறைவேறும்படியாக இறைதொடர்பு நிகழ்ந்துள்ளது எனக் காண்கிறோம்.

## 4. வெகுதிரள் தொடர்பு:

வெகுதிரள் தொடர்பு அல்லது மக்கள் திரள் தொடர்பு என்பது ஒரே நேரத்தில் பெரிய திரள் கூட்டத்தினருடன் கொள்ளும் தொடர்புமுறையாகும். பெரும்பாலும் கருவிகளைச் சார்ந்து நடைபெறுகிறது. தொடர்பாளருக்கும், பெறுபவருக்கும் இடையேயுள்ள ஊடகமே வெகுதிரள் தொடர்பை உறுதிப் படுத்துகிறது. தகவல் பரிமாற்றமானது, அதிகமாக, மின்னணு தொடர்புச் சாதனங்கள் மூலம் கட்டுப்படுத்தப்படுகின்றது. இவற்றின் வீச்சுப்பரந்து பட்டிருந்தாலும், பயன்பாடும், பாதிப்பும் குறித்தத் தொடர் ஆய்வு தேவைப்படுகிறது. குறிப்பாக, மின்னணு தொடர்புச் சாதனங்களான வானொலி, தொலைக்காட்சி, அச்சுத்துறை, திரைப்படம் போன்றவற்றின் பங்கு, தேவை, தன்மை, என்பது பற்றியும் புரிந்து வைத்திருப்பது தேவையாகிறது.

### தொடர்பு - வெகுதிரள் தொடர்பு :

தொடர்புக்கும், வெகுதிரள் தொடர்புக்கும் உள்ள அடிப்படை வேறுபாடுகள்

| தொடர்பு | வெகுதிரள் தொடர்பு |
|---|---|
| • எளிமையான முறையில் நடைபெறுவது | சிக்கலான அமைப்பு முறை கொண்டது. |
| • ஒரு சில நபரிடையே, சிறிய அளவில் இயல்பாக நடைபெறுவது | வெகுதிரள் மக்களைக் கொண்டு நடைபெறுவது |
| • மனித புலனுணர்வுகள் அடிப்படையில் ஊடகங் களாகின்றன. | பெருந்திரள் கருவிகள் ஊடகங்களாகின்றன. |
| • செய்தி அனுப்புநரும், பெறுநரும் சமதளத்தில் பார்க்கப்படுகின்றனர் | வெகுதிரள், மக்கள் கூட்டமாக பாவிக்கப்படுகின்றனர். |
| • ஒரு தனி நபரோ, குழுவோ தகவல் பெறுநராகின்றனர். | ஒரே நேரத்தில், பல லட்சம் அல்லது கோடி மக்கள், பல செய்திகளை பெற்றுக் கொள்கின்றனர். |
| • தகவல் கொடுத்தல்/ பெறுதல், கற்றல், பொழுது போக்கு, பரிமாற்றம், ஊக்குவித்தல், அறிவித்தல், வளர்ச்சி போன்றவை, தொடர்பின் நோக்கமாக கண்ணோக்கப் படுகின்றது. | சந்தைப் பொருளாதாரத்தை மய்யப்படுத்திய விற்பனை இவைகளே பெருவாரியான நோக்கமாக கருதப்படுகின்றது. |



வெகுதிரள் தொடர்பு பெரும்பாலும், வெகுதிரள் தொடர்புச் சாதனங்களின் மூலம் நடைபெறுகிறது. ஒரு செய்தி, பல கோடி மக்களுக்கு ஒரே நேரத்தில் சென்றடைய, கருவி ஊடகங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவைகள் வெகுதிரள் தொடர்பு சாதனங்கள் என அழைக்கப்படுகின்றன.

### வெகுதிரள் ஊடகங்களின் பங்கு :

**கற்பித்தல் :** வளர்ந்து வரும் சமூக அமைப்பில் பன்மை ஊடகங் களின் பயன்பாடும் பெருகி வருகிறது. ஆங்கிலத்தில் இதனை Multimedia என அழைப்பதுண்டு. புதிதான கண்டுபிடிப்புகள், அறிவியல் வளர்ச்சி, தொழில் திறமை, இப்படி கற்றுக் கொள்ள ஏராளம் இருக்கின்றன. அவைகளைக் கேட்டும், பார்த்தும், படித்தும் அறிந்து கொள்ள வெகுதிரள் ஊடகங்கள் கற்றல் பணியை செய்கின்றன.

**அறிவித்தல்:** ஒரு நபர் தன்னைச் சுற்றி நடப்பவற்றை அறிந்து கொள்ள ஊடகங்கள் உதவி செய்கின்றன. நாட்டு நடப்புகள், செய்திகள் மூலமாக அறிவிக்கப்படுகின்றன. அறிவித்தல் பணி என்பது ஊடகங்களின் முக்கியமான பணிகளில் ஒன்றாகும்.

**மகிழ்வித்தல்:** வளர்ந்து வரும் சமூக அமைப்பில் மகிழ்தல், சிரித்தல், பொழுது போக்கு இவைகளுக்கு நேரம் கிடைக்காமல், மக்கள் வேலையோடு மட்டுமே உறவாடிக் கொண்டிருப்பதாக கருதப்படுகின்றது. மக்களை மகிழ்வித்தல் என்பதும் ஊடகங்களின் சிறப்புப் பணியாக பாவிக்கப்படுகின்றது.

**பறைசாற்றுதல்:** அறிவித்தல் என்பதும் பறை சாற்றுதல் என்பதும் ஒரே பணி என தோன்றினாலும், இரண்டும் வேறாகும். காரணம் ஊடகங்கள் வாயிலாக நடக்கும் பறைசாற்றுதல் ஒரு குறிப்பிட்ட கொள்கையையோ கோட்பாட்டையோ மட்டுமே பறைசாற்றி அறிவிக்கின்ற பணியை செய்து வருகின்றன. அரசியல், சமய அமைப்புகள் தங்களின் இப்பணிக்கு ஊடகங்கள் பயன்படுகின்றன.

**தூண்டுதல்:** ஊடகங்கள், வெளியிடும் விளம்பரங்கள் மக்கள் ஒரு பொருளையோ, கருத்துக்களையோ வாங்க தூண்டப் படுகின்றன. விளம்பரங்கள் கையாளும் முறைகள், வண்ணங்கள், பின்னணி இசை, வாதத்திறமை, மனித உளவியல் இவைகளை அடிப்படையில் மனதில் கொண்டு காட்சிகள் கட்டமைக்கப் படுகின்றன. இதனால் பார்ப்பவர்கள், படிப்பவர்கள், கேட்பவர்கள் ஈர்க்கப்பட்டு பொருட்களை வாங்கத் தூண்டப்படுகின்றனர்.

**நிகழ்ச்சி தயாரித்தல்:** மக்கள் எதைப்பற்றி பேச வேண்டும் எதைப் படிக்க வேண்டும் என, செய்தி நிறுவனங்களும் ஊடக உரிமையாளர்கள் முடிவு செய்கின்றனர். எனவே, தொலைக் காட்சியிலும், அச்சுத்துறையிலும் பிற ஊடகங்களிலும், நிகழ்ச்சி தயார் செய்து தரும் பணியிலும் ஈடுபட்டிருக்கின்றனர்.

**காவல் நாய் வேலை செய்தல் :** நாட்டு நடப்புகளை உற்றுக் கவனித்து தவறுகள், அத்துமீறல்கள், உரிமை மீறல்கள் நடைபெறும் போது, அதனை சுட்டிக் காட்டுவதும், ஊடகங்களின் பணி என கருதப்படுகின்றது.

**முன்னேற்றம் செய்தல்:** ஒரு நாட்டின் முன்னேற்றத்தை தெரிந்து கொள்ள, அந்த நாட்டின் ஊடகங்களின் வளர்ச்சி மூலம் அறிந்து கொள்ளலாம் என நம்பப்படுகின்றது. ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கோ, பின்னடைவிற்கோ ஊடகங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன.



வெகுதிரள் ஊடகங்கள் பெருகிவிட்ட இக்கால கட்டத்தில், திருச்சபைக்கும், அருள்பணியாளர்களுக்கும் இருக்கும் இழுவையையும் கண்ணோக்க வேண்டியிருக்கின்றது.

அறிவியல் வளர்ச்சியினால் ஏற்பட்டுவிட்ட தகவல் தொழில் நுட்பம் என்பது, பல நிலைகளில் வளர்ச்சியைக் காட்டுவதாக இருந்தாலும், உண்மையிலேயே வளர்ச்சி என்பது என்ன என்ற அடிப்படைக் கேள்வியை அனைவரும் கேட்டுப்பார்க்க வேண்டியிருக்கிறது. அறிவியல் விடுக்கின்ற சவால்களுக்கு இறையியல் தளங்களிலிருக்கின்றவர்கள் செவிமடுக்க வேண்டியிருக்கின்றது. ஒவ்வொரு காலகட்டத்திலும் பல்வேறு விதமான அறிவியலும் அதைச் சார்ந்து உருவாக்கப்படும் தகவல் தொழில் நுட்பங்களும் பல சவால்களை முன்வைக்கின்றன என்றாலும் அருள்பணி என்பது என் மீது விழுந்த கடமை என புனிதர் பவுல் கூறுகிறார்.

* * *

# 9. அருட்பணியும், தகவல் தொழில் நுட்பமும்

## தகவல் தொழில் நுட்பம் என்றால் என்ன?

தகவல் தொழில்நுட்பம் என்பது தகவல் பரிமாற்றத்தினை மிகத்துல்லியமாக, சரியாக, விரைவாக பரிமாறிக் கொள்வதற்காக உருவாக்கப்பட்ட தொழில்நுட்பமாகும். இவ்வகைத் தொழில் நுட்பத்தில் கணிப்பொறி (Computer), தொலைத் தொடர்புக் கருவிகள் (Tele-Communications) மற்றும் சிலிகான்சிப் (Integrated Circuit/I.C.) எனப்படும் ஒருங்கிணைக்கப்பட்ட தொழில் நுட்பமும் இணைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அனைத்துத் தகவல்களும் சேகரிக்கப்படுகின்றன. இவை பல்வேறு வடிவங்களில் வடிவமைக்கப்பட்டு பரிமாறிக் கொள்ளப்படுகின்றன.

## அருட்பணிக்கும் தகவல் தொழில்நுட்பத்திற்குமுள்ள வேறுபாடுகள் என்ன?

| அருட்பணி | தகவல் தொழில் நுட்பம் |
|---|---|
| 1. அனைவருக்கும் இலவசம். | பணம் செலுத்தி, செய்திகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். குறிப்பாக, மாஸ்டர் கார்டு, சிட்டி கார்டு இவைகளுக்குத் தான் மதிப்பு அதிகம். |
| 2. நற்செய்தியாகிய உண்மையை உலகுக்கு அறிவித்தல் நம் ஒவ்வொருவரின் அடிப்படை உரிமையாகின்றது. | உண்மையைத் திரித்துச் சொல்லும் போங்கும், மிகைப்படுத்திக் காட்டும் போங்கும் காணப்படுகின்றது. |
| 3. கூட்டு வாழ்க்கையும், கூட்டுமுயற்சியும் வலியுறுத்தம் பெறுகின்றது. இதனால் சமூக வாழ்க்கை கட்டப்படுகின்றது. | தனிமனித வாழ்க்கையும், தனிமனிதக் கோட்பாடும் வலியுறுத்தம் பெறுகின்றன. |
| 4. ஆவிக்குரிய மீட்புக்கு வழிவகுத்து, முழுமனித வளர்ச்சிக்கு வழிநடத்தி, இறைச்சாயலை மீண்டும் பெறுவதற்குத் துணையாக அமைகின்றது. | இலாபநோக்கில் செயல்படும் நிறுவனங்களுக்கு ஆதரவாக அமைந்து மனிதத்தை இழந்து, உணர்வுகள் மழுங்கடிக்கப்பட்ட நிலை உருவாகி, ஆற்றலற்றத் தன்மைக்கு துணைபோவதாக இருக்கின்றது. |
| 5. நானே வழியும் உண்மையும் வாழ்வுமாயிருக்கிறேன் என்ற இயேசுவின் பாதை இறையரசுக்கு நேராக வழி நடத்துகிறது. | தகவல் மீப்பெருஞ்சாலை Information Super Highway காட்டும் பாதை சந்தைப் பொருளாதாரத்தைப் பெருக்க வழி நடத்துகிறது. |
| 6. ஓரங்கட்டப்பட்டவர்கள், விளிம்பிற்குத் தள்ளப் பட்டவர்கள் ஒருங் கிணைக்கப்படுகின்றனர். | Information rich x Information poor என்ற நிலை உருவாகி இரண்டு நிலைகளுக்கிடையேயுள்ள இடைவெளி அதிகப்படுத்தப்படுகின்றது. |
| 7. அனைவரின் மேலும், கடவுளின் ஆவி ஊற்றப் படுவதால், அவரவர் தங்கள் தங்கள் மொழிகளில் பேசுவதைப் புரிந்து கொள்ளவும், அனைவரும் இறை மக்களாக தீர்க்கதரிசனம் சொல்வதற்கான வாய்ப்புண்டு. | Media Literate x Media Illiterate என்று பிரிக்கப்பட்டு மக்கள் வெறும் சந்தையாக மாற்றப் படுகின்றனர். |
| 8. மக்கள் கலாச்சாரத்தை தக்கவைக்கிறது. | உலகம் முழுவதும் ஒரே கலாச்சாரத்தை, அதாவது நுகரும் கலாச்சாரத்தை உருவாக்குகிறது. |
| 9. ஒருவரைக்கூட இழக்கக் கொடுக்க விரும்பாது, அனைவர் மீதும் அக்கறைக் காட்டுகின்ற போங்கு. | மனிதம் என்பது வெகுதிரளாகப் பார்க்கப்படுகின்றது. |

## இவ்வகைத் தொழில் நுட்பத்தில் நமது பங்கு என்ன?

அருட்பணியைக் குறித்த தெளிவான பார்வை தேவை. அருட்பணி குறித்து பல விளக்கங்கள் திருமறைச் சார்ந்தும், இறையியல் சார்ந்தும், அனுபவம் சார்ந்தும் பேசப்பட்டு வருகின்றன. இதில் இரண்டு கருத்தாக்கங்கள் வெளிவருகின்றன.

1. இயேசுவையே அறிவித்தல், அவர் நாமத்தை அறிக்கை பண்ணுதல், இயேசுவை "கிறிஸ்து " என்று ஏற்றுக் கொள்ளுதல், இயேசுவுக்குச் சாட்சியாக வாழ்தல், என்ற கருத்தியல். இந்த கருத்தியலின் அடிப்படையில், இயேசு நேசிக்கிறார், இயேசு அழைக்கிறார், இயேசு விடுவிக்கிறார் என்று அறிவித்தல் மட்டுமே, அதாவது இப்படிப்பட்ட வார்த்தைகளை உச்சரிப்பது மட்டுமே அருட்பணி என்று எண்ணும் கருத்தியல்.

2. இயேசுவின் குறிக்கோளை உணர்ந்து செயல்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தல், இறையரசின் தகவுகளுக்கு ஏற்ப வாழ முயற்சித்தல், இறையரசைக் குறித்த அறிவிப்பும், அதனை உருவாக்குவதில் உள்ள செயல்பாடு சார்ந்த அணுகுமுறையும் வலியுறுத்தம் பெறுகின்றது.

இரண்டாவதாகச் சொன்ன கருத்தியலின் அடிப்படையில் இயேசுவின் செயல்பாடுகள், அரசியல் ஈடுபாடுகள், ஆதிக்க வர்க்கத்துடன் அவருக்கிருந்த முரண்பாடுகள், உரோம அரசியல் விளிம்பிற்குத் தள்ளப்பட்ட மக்களிடம் அவர் காட்டிய பரிவும், பாசமும், ஈடுபாடும், தொடர்ந்து நம்மால் செயல் படுத்தப்படுவது மட்டுமே, அருட்பணி என்று எண்ணும் கருத்தியல் போங்கினைக் காண முடிகின்றது.

மேலே கூறப்பட்ட இரண்டு நிலைகளுக்கிடையே இருக்கின்ற இழுவை நிலை ஓர் அருட்பணியாளருக்கு அடிக்கடி வருகின்ற சோதனையாகும். இயேசுவை அறிவிப்பதா? இயேசு அறிவிக்கச் சொன்னதை அறிவிப்பதா? இவை போன்ற பிரச்சினை தொடர்ந்து காணப்படும் ஓர் உண்மை நிலையாகும்.



## இயேசுவுக்கு அருட்பணி என்பது என்ன?

"கர்த்தருடைய ஆவி என் மேலிருக்கிறது. தரித்திரருக்கு நற்செய்தியை அறிவிக்க அவர் என்னை அபிஷேகம் பண்ணினார். சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்கு பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாகவும், கர்த்தருடைய அனுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும் அவர் என்னை அனுப்பினார்." (லூக்.4:17-19; ஏசாயா 61:1-3).

அப்படியானால் இயேசு தம்மை அனுப்பின கடவுளின் நோக்கத்தை (சித்தம்) நிறைவேற்றவே இவ்வுலகத்தில் வந்தார் என்பதும் உண்மையாகின்றது. எனவே, இயேசுவின் கூற்றுப்படி,

"ஆண்டவரே, ஆண்டவரே என்று என்னிடம் சொல்லுகிற ஒவ்வொருவருமல்ல, பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தைச் செய்கிறவனே பரலோக இராஜ்யத்திற்குள் பிரவேசிப்பான்"(மத்தேயு 7:21).

கடவுளின் சித்தமென்ன என்பதை இயேசுவின் பார்வையில் புரிந்துகொண்ட பிறகுதான், அருட்பணியாளர்களாக பொறுப் பேற்க முடியும். இயேசுவுக்கு ஏற்பட்ட சோதனைகள், ஆன்மீக உந்துதல்கள், தனிமையான அனுபவங்கள், இறைவேண்டுதல்கள் இவை யாவும் இயேசுவை முழுமனிதனாகவும், கடவுளின் குமாரனாகவும், இறையரசின் செயல் வீரராகவும் உருவாக்குவதில் பெரும் பங்கு வகிக்கின்றது.

### திருச்சபையின் இழுவை நிலை:

இயேசுவை அறிவிப்பதாகவும், இயேசு சொல்லியவற்றை செயல்முறைப்படுத்தவும் தகவல் தொழில் நுட்பத்தை பயன்படுத்தலாமா? பயன்படுத்தக் கூடாதா?

அருட்பணியில் புதிய தகவல் தொழில்நுட்பத்தின் பங்கென்ன?

புதிய தகவல் தொழில்நுட்பத்தின் மீதுள்ள சார்புநிலையை சமன்படுத்துவது எவ்வாறு?

Media Education - வெகுதிரள் தொடர்புச் சாதனங்கள் குறித்த விழிப்புணர்வுக் கல்வியை திருச்சபையில் அறிமுகப் படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் யாவை? இவைகள் யாவும் திருச்சபைக்குள்ள இழுவை நிலைகளாகும்.

**வெகுதிரள் தொடர்புச் சாதனங்களின் தன்மைகள்**

1. **மிகவும் சிக்கலான அமைப்புடையது :** தகவல் தொடர்புச் சாதனங்களில் உள்ள தொழில் நுட்பம், மக்கள்திரள் தொடர்பு அமைப்பு முறைகள் இவற்றின் தொழில் நுட்பமும், தகவல் பரிமாற்றமும், சிக்கலான அமைப்பைக் கொண்டது. இருவர் தொடர்பில் நேர்காணல் முறையில், இருவழித் தொடர்பு உடனுக்குடன் நடைபெறுவதுபோல இதில் நடைபெற வாய்ப்பு இல்லாததினாலேயே இது ஒரு சிக்கலான அமைப்பை உடையதாக இருக்கிறது.
2. **தொழில் நுட்பம் சார்ந்தது:** ஒரு செய்தியோ, திரைப்படமோ, நிகழ்ச்சியோ, எதுவானாலும், தொழிற் சாலையில் ஒரு பொருள் உற்பத்தி செய்யப்படுவதைப்போல பலரால் உற்பத்தி செய்யப்படுகிறது.
3. **சக்தி வாய்ந்தது :** பலரை ஈர்க்கும் சக்தி இதற்கு உண்டு. நாட்டு மக்களின் வாழ்க்கையின் அனைத்து நிலைகளிலும் ஊடுருவிச் சென்று எல்லா நிலையிலிருப்பவரையும் கவர்ந்திழுக்கும் சக்தி இதற்கு உண்டு.
4. **திறமை வாய்ந்தவர்கள்தான் இதற்குத் தேவை :** தொழில் நுட்பம் தெரிந்த பயிற்சி பெற்ற ஆட்கள்தான் பணியாற்ற முடியும்.
5. **செல்வாக்குடையவர்களால் பாதிப்பு அடையக்கூடியது** பணம், அதிகாரம், அரசியல் செல்வாக்குடையவர்கள் தங்களின் செல்வாக்கை இதில் பயன்படுத்துவதற்கு வாய்ப்பு உண்டு. குறிப்பாகத் திரைப்படங்களின் தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள், நடிகை, நடிகர்கள் , அரசியல் தலைவர்கள் போன்றோர் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தலாம்.
6. **ஒருவழித் தொடர்பு :** இருவழித்தொடர்புக்கு உடனடி சாத்தியக்கூறுகள் கிடையாது. இலக்கு மக்கள் இத்துணை நபர்களை, செய்தி சென்றடைய வேண்டும் என்கிற நோக்கம் மட்டுமே குறிக்கோள். மாறாக, உடனடி பின்னூட்டம் பற்றிய அக்கறையும், மக்கள் மையமான முன்னேற்றமும், தகவல் பரிமாற்றமும் மையப்படுத்துவதும் கிடையாது.
7. **நகர் மயமாக்கப்பட்டது :** நகரத்து மக்களை நடுத்தர வகுப்பு மக்களைக் கருத்தில் கொண்டுதான் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்படுகின்றது.



**வெகுதிரள் தொடர்புச் சாதனங்கள் ஏற்படுத்தும் பாதிப்புகள்**

Don Bosco Communications நிறுவனத்தார் – ஊடகக் கல்வி குறித்து வெளியிட்டுள்ள பயிற்சி நூல் பின்வரும் ஆய்வுக் கருத்துக்களை நம் சிந்தனைக்கு முன்வைக்கிறது.

இதில் வெகுதிரள் தொடர்புச் சாதனங்கள் தக்க வைக்கும் தகவுகளும், அவற்றுக்கெதிராக தற்காத்துக் கொள்ள வேண்டிய தகவுகளும், திருவிவிலியத்தின் வெளிச்சத்தில் இனம் கண்டு கொள்ளப்பட்டிருக்கின்றன.

## Table 2

| வெகுதிரள் தொடர்புச் சாதனங்களின் தாக்கம் வைக்கப்படும் தகவுகளும் அது தொடர்பாக உருவாக்கப்படும் பாதிப்புகளும் | மனுக்குலம் காத்துக் கொள்ள வேண்டிய தகவுகளும் அது தொடர்பான திருமறைப் பகுதிகளும். |
|---|---|
| 1. **நுகர்வோர் பண்பாடு :** இதனால் பேராசை, மன அழுத்தம் வாங்க முடிய வில்லையே என்ற ஏக்கம் ஏற்படுகின்றது. | எளிமையான வாழ்க்கை முறை, தாராளமாய் பகிர்ந்து வாழும் தன்மை, நம்பிக்கை, பற்றுறுதி. லூக்கா *9:57-62;* மத்தேயு *7:13-14; 6:19-21;*யோவான் *5:1-6;* மாற்கு *12:41-44;* 2கொரிந்தியர் *9:6-15;* யாக்கோபு *5:1-6;* சீராக்கு *31:1-11.* |
| 2. **குருட்டுத்தனமான குறிக்கோள் :** இதனால் தனிமனித போக்கும், எதைக் கொடுத்தாவது வெல்ல வேண்டும் என்ற எண்ணமும், வெறியும். | பணிவு, பகிர்தல், பொறுமை மனவுறுதி. மத்தேயு *9:35-38; 10:35-45; 20:20-28;* லூக்கா *12:35-48; 14:7-14;* மாற்கு *9:33-37,* ரோமர் *12:1-8;* பிலிப்பியர் *2:5-11.* |

| | |
|---|---|
| 3. **பெருமை:** சுயப்போற்றுதல், தன்னையே புகழுதலும், போலி தற்பெருமையும் வளருதல். | தாழ்மை, தியாகம், பகிர்வு ஆதி 1-11; லேவி 19:9-18; லூக்கா 9:23-27; யோவான் 3:11-18; சீராக் 29:8-13. |
| 4. **ஒத்துப்போதல்:** எதிர்த்துக் கேட்கும், துணிவின்மை, தனித்தலைவன் வழிபாடு, நோக்கமின்மை. | சுயத்தைப் பற்றிய மதிப்பு, ஏற்றுக் கொள்ளுதல், ஊக்கம் மத்தேயு 25:14-30; லூக்கா 7:36-50; 15:11-32; 1பேதுரு 2:9-10; ரோமர் 6:1-5. |
| 5. **நேர்மையற்றச் செயலை ஆதரித்தல்.** ஊழல், அதிகாரம் தவறாகப் பயன்படுத்தப்படல், ஏற்றத் தாழ்வுகள். | நீதி, உண்மை. எரேமியா 9:23-24; ஆமோஸ் 5:21-24; மீகா 6:6-8; லூக்கா 6:27-36; 16:1-13; மாற்கு 11:15-19; மத்தேயு 21:33-46, யோவான் 15:18. |
| 6. **தப்பெண்ணம் :** பல்வேறு விதமான அடிப்படை வாதங்கள், சாதி, சமய, கலாச்சாரம், சமயம் சார்ந்து மக்களை வேறுபடுத்தல். | சகிப்புத்தன்மை, அன்பு - லூக்கா 6:37-45; 10:25-37; 11:34-36; மத்தேயு 7:1-5; 12:1-14; 25:31-46. |
| 7. **எழுதப்படாத சட்டங்களை உருவாக்குதல்.** மக்கள் எதைப் பின்பற்ற வேண்டும் எப்படி வாழ வேண்டும் போன்ற நியதிகள் கற்றுத்தரப்படுகின்றன. | சுய ஒழுங்கு, ஒப்படைப்பு, அன்பு. 1கொரி 6:12-20; 13:1-13; கலா 5:13-24; மத்தேயு 26:6-13 யோவான் 15:9-17; லூக்கா 6:27-36; மாற்கு 9:42-48. |
| 8. **பாலியல் ஒரு சார்புத் தன்மை:** பெண்களை, தரக்குறைவாக அணுகுதல் | மதிப்புக் கொடுத்தல், சமத்துவத்தை நடைமுறைப்படுத்துதல் ஆதி. 1:26-31; யோவான் 4:7-15,27; 8:1-14, மத்தேயு 5:27-32; லூக்கா 7:36-50; 8:1-3; மாற்கு 7:24-30. |
| 9. **வன்முறை :** வெறுப்பு, பழிவாங்குதல் | சமாதானம், மன்னிப்பு. 2கொரி 13; மாற்கு 2:1-12; மத்தேயு 5:21-26; 5:38-48; 10:34-39. |

வெகுதிரள் தொடர்புச்சாதனங்கள் உயர்த்திப்பிடிக்க வேண்டிய நற்பண்புகளான ஒற்றுமை, ஒருமைப்பாடு, படைப்புத்திறன், கற்றல், உண்மை, உறவு, ஆரோக்கியமான உடல், இடர்பாடுகளை சந்திக்கும் சவால், பன்மைவாதம் இவைகளுக்கு இடம் கொடுத்து நிகழ்ச்சிகளும், கதைகளும், கருத்துகளும், கட்டுரைகளும், வெளிவரவேண்டும்.

* * *



# 10. தொடர்பியல் கல்வி இறையியல் கல்லூரிகளில் பாடத்திட்டமான வரலாறு

தொடர்பியல் வல்லுநர்கள் வரலாற்றை நான்கு கால கட்டங்களாக வகுக்கின்றனர்.

## 1.மொழி வழித்தொடர்பின் காலம் :

மொழிவழித்தொடர்பின் காலம் அல்லது வாய்மொழித் தொடர்பின் காலம் எனலாம். அடையாளங்கள், குறியீடுகள், போன்றவற்றைப்பயன்படுத்தி மொழிவழியாக, ஒலிகள், மூலம், ஓசை வடிவில், ஒளி, மூலமாக, புகைமூட்டி, தங்கள் செய்திகளைப் பரிமாறிக் கொண்டனர். குகை ஓவியங்கள் இப்படிப்பட்ட முன்னோர்களின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் காட்சிப் படங்களாக இருக்கின்றன.

## 2. மொழியிலிருந்து எழுத்து வடிவங்கள் மூலம் தொடர்பு கொண்ட காலம் :

சீனாவில் கி.மு 200-இலும், எகிப்தில் கி.மு. 3/100-இலும் ஓவியவடிவ எழுத்துகள் உருவாகின. கி.மு. நான்கிலும் முதல் நூற்றாண்டு மைய தரைக்கடலின் கிழக்குப்பகுதியிலுள்ள பொனிஷிய, கானானிய, எபிரேய எழுத்துகளில் அரிச்சுவடிகள் புழக்கத்தில் இருந்தன. மனிதர்கள் கணக்கு வைக்க முயன்ற முயற்சியின் விளைவே கல்விக்கு வித்திட்டது. என்று வரலாறு கூறுகிறது. எழுத்தோவியங்கள், எண்கள், வரைபடங்கள் இவற்றைத் தொடர்ந்து அரிச்சுவடிகள் மொழியில் ஒலிக்கேற்ற வாறு கண்டுபிடிக்கப்பட்டன.

ஏறக்குறைய 300-400க்கும் இன்னும் 20,000 முதல் 40,000 வரை எழுத்துகள் இருந்தாகவும் அவை சொல்லின் ஒலிக்கேற்ற வகையில் பொறுக்கிச் சேர்க்கப்பட்டு, உச்சரிக்கப்பட்டதாகவும்

கூறப்படுகின்றது. இறுதியாக காலப்போக்கில் கிரேக்க மொழியில் இருபத்து நான்கு ஒலிவடிவ எழுத்துக்களும், இலத்தீனில் இருபத்துமூன்று எழுத்துகளும், ரோமமொழியில் இருபத்தாறு எழுத்துகளும், பசிபிக் மொழியில் பதினான்கு ஒலிவடிவ எழுத்துகளும் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டு, மத்தியதரைக்கடலில் கிழக்குப்பகுதியிலுள்ள நாடுகளும், சீனா, ஜப்பான் போன்ற நாடுகளும் பின்பற்ற தொடங்கின.

### 3. அச்சுக்கருவி கண்டுபிடிப்பும், நூல்கள் வெளியான காலக்கட்டமும்:

கி.பி. 1450இல் ஜெர்மனியில் மைன்ஸ் என்ற இடத்தில் வாழ்ந்த பொற்கொல்லரான ஜான் குட்டன்பர்க் என்பவர்தான் அச்சுப்பொறியைக் கண்டுபிடித்தார் என்ற ஆணித்தரமான வரலாறு ஒன்று எல்லா நூல்களிலும் எடுத்துச் சொல்லப் பட்டாலும், எகிப்தில் கி.மு. 1350இல் பப்பைரஸ் என்ற நாணலில் "இறந்தோர்களின் புத்தகம்" என்ற ஒன்று எழுதியதாகக் குறிப்பு காணப்படுகிறது. அவ்வாறே, ரோமில் ஆக்டோ டியூயோனா என்ற தினப்பத்திரிக்கை கி.மு. 131 இல் வெளியிட்டதாகவும் குறிப்பு காணப்படுகின்றது. கி.பி. 1550 ஆண்டு இந்தியாவில் அச்சகம் கொண்டுவரப்பட்டது. முதல் நூல் 1557 ஆண்டு கோவாவில், டாக்ட்ரினா கிறிஸ்டா Doutrina Christa என்னும் பெயரில் வெளியிடப்பட்டது. இந்தியாவில் முதல் ஆங்கிலப் பத்திரிக்கை 1780 ஆம் ஆண்டு கல்கத்தாவில் ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி (James Augustus Hicky) என்பவரால் தொடங்கப்பட்டது. இது, பெங்காலி கேசட் (Bengali Gazette) என அழைக்கப்பட்டது.

1818இல் செராம்பூர் அருட்பணியாளர்களால் வங்காளி மொழியில் இதழ்கள் தொடங்கப்பட்டன. அவை திக்தர்சன், சமாச்சர் தர்பன் என பெயர் கொண்டிருந்தன. அருட்பணியாளர் வில்லியம் கேரி தமக்குக்கிடைத்த மர அச்சுக்கருவியின் உதவியைக் கொண்டு மாற்கு நற்செய்தி நூலை வங்காள மொழியில் அச்சிட்டு வெளியிட்டார். தமிழ்நாட்டில் 1711ஆம் ஆண்டு அச்சுக்கருவி இந்தியாவிற்குக் கொண்டுவரப்பட்டது. ஜெர்மானிய நாட்டு அருள்பணியாளர் பர்தொலிமியோ சீகன்பால்கு அவர்களுக்கே இப்பெருமை சேரும். 1712ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் போர்த்துகீசிய மொழியில் வழிபாட்டு முறைமைகளை நூல் வடிவில் அச்சிட்டு வெளியிட்டார்கள். 1713 ஆம் ஆண்டில் லூதரின் சிறிய ஞான உபதேசத்தையும், கிறிஸ்துவின் பாடு, மரணம், மற்றும் பிற அருள்பணி பற்றிய அறிக்கையும் போத்துகீசிய மொழியில் அச்சிட்டு வெளியிட்டார்கள். 1714 ஆம் ஆண்டு முதல் புதிய ஏற்பாடு தமிழில் அச்சிட்டு வெளியானது. 1717 ஆம் ஆண்டு முதன் முதலில் இந்தியாவில் நாள்காட்டி அச்சிடப்பட்டு வெளியானது.

### 4. மின்னணு தொடர்புச் சாதனங்களின் காலம்:

இக்கால கட்டத்தில்தான் பல புதிய கண்டுபிடிப்புகள் வெளிவந்தன. இவைகளின் வரவால் மரபு வழித் தொடர்புச் சாதனங்கள் அச்சுத்துறை போன்றவற்றிற்கு சற்று சறுக்கு நேர்ந்தாலும், அச்சுத்துறை இன்றும் சக்தி வாய்ந்ததாக இருக்கிறது. ஏற்கனவே குறிப்பிட்டது போல 1804 இல் தந்தியும், 1877 இல் திரைப்படமும், 1921 இல் வானொலியும், 1925 இல் தொலைக்காட்சிப் பெட்டியும், 1947இல் மின்பிம்பப் பெருக்கியும், (Transister) 1963 இல் செயற்கைக்கோளும் கண்டுபிடிக்கப்பட்டு ஒவ்வொரு துறையும், அதனை தன் வளர்ச்சியில் மேலோங்கி தற்காலத்தில் இணையத்தில் (Internet) இணைக்கப்பட்டுள்ளது. இதன் பாதிப்புகள் குறித்த, விளக்கங்களை இதற்கு முன் பார்த்தோம்.

மனிதர்களின் மேம்பாட்டிற்காகவும், முன்னேற்றத் திற்காகவும், முறையான தகவல் பரிமாற்றத்திற்காகவும், நீதி, நேர்மை, சமத்துவம் நிலவிட வேண்டியும், புதுப்புது தொடர்புக் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டன. ஆனால் இன்றைய கால கட்டத்தில் நடக்கும் போர், வறுமை, நேர்மையற்ற அரசியல், சுரண்டல்கள், கொடுமைகள் விக்கிரங்கள் இவைகளைக் காணும் போது தொடர்பு முறை மற்றும் அதன் மூலம் நடைபெறும் தகவல் பரிமாற்றத்தையும் குறித்தும் ஆய்வு செய்ய வேண்டியிருக்கிறது.

வரலாற்று ரீதியாகப் பார்க்கும்போது, இரண்டாம் உலகப் போருக்கு பின்னால், வளரும் நாடுகள் அரசியல் சுயஉரிமை பெற்றாலும், பொருளாதாரத்தில் வளர்ந்துப்பட்ட நாடுகளைச்

சார்ந்திருக்கும் நிலைமை உருவாகியது. இதையுணர்ந்த ஐக்கிய நாடுகள் 1960களில் முதலாவது வளர்ச்சித் திட்டம் ஒன்றை அறிவித்தது. இதன் மூலம் ஏழை நாடுகளின் வருமானத்தைப் பெருக்குவதற்கான வழிமுறைகளை உருவாக்கித் தருவதற்கு முயற்சி செய்தது. இம்முயற்சி பெருமளவில் தோல்வியே தழுவியது. 1975இல் இரண்டாம் வளர்ச்சித் திட்டத்தில் புதிய அனைத்துலகப் பொருளாதார ஒழுங்கு [New International Economic Oder – N.I.E.O] தேவை என்பதை வலியுறுத்தினர்.

1976 இல் கூட்டுச்சேரா நாடுகள் / நடுநிலை நாடுகள்/ அணிசேரா நாடுகள் ஒன்றிணைந்து தங்களின் வறுமைக்கும் ஆற்றலற்ற தன்மைக்கும் அன்று நிலவி வந்த அனைத்துலகத் தொடர்பு முறையும், தகவல் பரிமாற்றமுமே காரணம் என்ற ஒரு விழிப்புணர்வுக்குள்ளாக உந்தப்பட்டனர். ராய்ட்டர், யு.பி.ஐ. அசோசியேட் பிரஸ், ஏஜென்சி பிரான்ஸ் மற்றும் டாஸ் போன்ற அனைத்துலக செய்தி நிறுவனங்கள் பிற நாட்டைப் பற்றிய செய்திகளைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது பிறநாட்டின் மீது தமக்குள்ள அதிகாரத்தை வலுப்படுத்துவது போன்ற சிக்கல்கள் தீவிரமாக அனைத்துலக அளவில் பேசப்பட்டன.

ஏழை நாடுகளைப் பற்றிய செய்திகள் தவறாகத் திரித்துச் சொல்லப்படுவதாகவும், குறைத்துச் சொல்லப்படுவதாகவும் குரல் எழுப்பினர். இதனால் 1977 இல் புதிய அனைத்துலக தகவல் ஒழுங்கு [New International Information Order – NIIO] தேவை என்று வளரும் நாடுகள் குரல் எழுப்பின. குடியேற்ற ஆதிக்கத்தின் கீழ் உள்ள மூன்றாம் உலகநாடுகளைப் பற்றிய ஒலிபரப்பும், செய்தியில் சீரான ஒழுங்கு இல்லை என்பதாலும், பொருளாதார நடவடிக்கையையும், வர்த்தக ஒழுங்கையும் சரிசெய்ய புதிய தகவல் ஒழுங்கு தேவை என்னும் கோரிக்கை ஐக்கிய நாடுகளின் சபைக்கு வைக்கப்பட்டது.

1980 இல் யுனெஸ்கோ அமைப்பானது சீன் மாக் பிரைட் (Sean Mac Bride)என்பவரின் தலைமையில் ஒரு குழுவை நியமித்து, அனைத்துலகத் தகவல் ஒழுங்கை ஆய்ந்து, மூன்றாம் உலகநாடுகளின் சிக்கல்களையும், அலசி பரிசீலனை செய்யக் கேட்டுக் கொண்டது. 1982 இல் இவ்வறிக்கை பல் குரல் ஒருலகு



(Many Voices, One world) என்கிற பெயரில் வெளிவந்தது. தகவல் ஒழுங்கு என்பது அனைத்துலக ரீதியிலேயும், உள்நாட்டிலேயும் ஆதிக்கம் கொண்டிருப்பதாக அது தெரிவித்தது. எனவே Mac Bride அறிக்கையின்படி “புதிய உலகத்தகவல் தொடர்பு ஒழுங்கு” [New World Information and Communication Order – NWICO] என்பதை வலியுறுத்தினார்.

எது எப்படியானாலும், நற்செய்தியை அறிவித்துக் கொண்டிருப்பதை நம் கடமை என்று என்கடன் பணி செய்துகிடப்பதே என்று பணியாற்றிக் கொண்டிருந்த The World Association for Broadcating (1968). The Co-ordinating Committee on Christian Broad Casting (1968) Agency for Christian literature (1975) ஆகிய மூன்று நிறுவனங்களும் இணைந்து World Association for Christian Communication (W.A.C.C) என்னும் அமைப்பை உருவாக்கின. இவர்களுடைய முயற்சியின் பேரில்தான் இறையியல் கல்லூரிகளில் தொடர்பியல் பாடம் ஒரு தலையாய பாடமாகக் கற்றுக் கொடுக்கப்பட்டது.

பல்வேறு நிலைகளில் நடந்த ஆய்வுக்கூட்டங்கள், பயிற்சிப் பட்டறைகள், கலந்தாலோசனைகள், இவற்றிற்குப்பிறகு 1989ஆம் ஆண்டு சியோல் மாநாட்டின் டபுள்யு.எ.சி.சி. கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி இறையியல் மாணவர்கள் தொடர்பியல் படிக்க வேண்டியதன் தேவை என்னென்ன என்பதற்கான அறிக்கை ஒன்று வெளியிடப் பட்டது. அந்த அறிக்கையிலிருந்து சில பகுதிகள் இங்கு சுட்டிக் காட்டப்படுகின்றன.

1) திருமறை, தூய ஆவி, திருச்சபை, கடவுளைப் பற்றிய அறிவு, வெளிப்பாடு, சமூகம், போன்றவற்றைப் பற்றி தெளிவான புரிந்து கொள்ளுதல் தேவை, எனவே தொடர்பியல் பற்றிய தெளிவான பார்வையும் அதன் மொழிநடையும் இதைக் கொண்டு வர முடியும்.

2) அழிவை ஏற்படுத்தக் கூடிய, மனிதத் தன்மையை குறைக்கக் கூடிய சில அதிகார சக்திகளை இனங்கண்டு கொள்ள வேண்டிய நிலை தேவை. தொடர்பியல் விழிப்புணர்வு, கல்வி இதனைப் புரிந்து கொள்ள உதவிச் செய்யும்.

3) கதைகள், அவை ஒவ்வொரு மனித சமுதாயத்திலும் பல்வேறு தகவுகளையும், சாயல்களையும் உடையது. மறக்கடிக்கப் பட்ட கதைவடிவத் தொடர்புகளை மீட்டெடுத்தல் தேவை. மரபு வழித் தொடர்பியலைப் படிப்பதின் மூலம் இதை உணர முடியும்.

4) நற்செய்திப்பணியில் சமூகமாக, உரையாடல் பாணியில் ஓர் ஒருங்கிணைக்கப்பட்ட அணுகுமுறை தேவை. உண்மையை ஏற்றுக் கொள்வதற்கும், உண்மையாய் பதிலுரைக் கொடுக்கவும், அருட்பணியைப் பல்சமய சூழலில் பொருளுள்ள வகையில் நடைமுறைப்படுத்துவது அவசியம். எனவே சமயம் சார்ந்த தொடர்பு முறைகளைப்பற்றிய தெளிவான அறிவு, சூழலை சார்ந்த இறையியலுக்கு இன்னுமொரு மைல் கல்லாகும்

* * *



# 11. தொடர்புத் தடைகள்

### 1. மொழி சார்ந்த தடைகள் :

பல்மொழி மட்டுமல்ல, பல் கலாச்சாரப் பின்னணியத்தில் மொழியின் பொருள் பலவாறு புரிந்து கொள்ளப்பட்டிருக்கும் போது தொடர்பாளருக்குப், பொருள் புரிய வைப்பது ஒரு தடையாக இருக்கிறது. ஆனால் திருத்தூதர் பணிகள் இரண்டாம் அதிகாரத்தில் அனைவரும், பேசியதை எல்லோரும் புரிந்து கொண்டார்கள் ( திருத்தூதுவர் 2). அதுபோன்ற தூய ஆவியின் வழிநடத்துதலால் இவ்வகைத் தடையை மேற்கொள்ள நாம் வழிநடத்தப்பட வேண்டும்.

### 2. அமைப்பு முறைசார்ந்த தடைகள் :

இன்றைக்குள்ள தகவல் தொழில் நுட்பம், மக்களிடையே இடைவெளியை உருவாக்கியிருக்கிறது. எடுத்துக்காட்டாக தகவல் ஏழைகள், தகவல் பணக்காரர்கள் மற்றும் ஊடகக் கல்வியறிவுடையவர்கள், ஊடகக் கல்வியற்றவர்கள் என மக்களைத் தரம் பிரித்து இடைவெளியைக் கூட்டியுள்ளது. இச்சூழலில் நாம் சொல்லும் செய்திக்கு அமைப்புமுறைகூட ஒரு தடையாக இருக்கலாம். நிறுவன மயமாக்கப்பட்ட கலாச்சாரத்தில், தகவல் பரிமாற்றமும் பல்வேறு நிறுவன அமைப்பைக் கொண்டதாக இருக்கிறது. பவுலடிகளார் தம்முடைய நற்செய்திப்பணியில் இப்படிப்பட்ட தடைகள் பலவற்றை மேற்கொண்டார். அதில் வெற்றியும் கண்டார் (திருத்துவர் நூல் முழுமையும்)

### 3. கருவி சார்ந்த தடைகள் :

ஒலி, ஒளி சாதனங்களினால் ஏற்படும் தடைகள், ஒலிபெருக்கிக் கலாச்சாரத்திளால் உண்டாகும் தடைகள் போன்றவைகளைச் சொல்லலாம். இயேசு வாழ்ந்த காலத்தில் அவருக்கும் இப்படி

ஒரு தடை ஏற்படவில்லை. பெரிய மக்கள் கூட்டத்துடன், ஒரு மலையின் மேல் உட்கார்ந்து பேசினார் (மத்தேயு 5) கடற்கரை அருகில் ஒரு படகில் ஏறி உட்கார்ந்து பேசினார். பெரிய பெரிய குளிர் அறைகளோ, ஒளிப்பட அமைப்புகளோ ஏதுவுமின்றியே அவர் பேசினார் என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

### 4. உளவியல் சார்ந்த தடைகள் :

இது ஒருவருடைய ஆளுமையில் ஏற்படும் தடைகள் குறிப்பாக, சமூக உறவில் ஏற்படும் சிக்கல்களை தனக்குள் உள்வாங்கிக் கொண்டு அவற்றிலிருந்து வெளிவர இயலாததால் இவ்வகைத் தடைகள் ஏற்படுகின்றன. ஆற்றுப்படுத்துநருக்கு என்னென்ன தகுதிகள் இருக்க வேண்டுமோ அவையனைத்தும் ஒரு சிறப்பானத் தொடர்பாளருக்கும் இருத்தல் வேண்டும். குறிப்பாக அன்பானவராக, அறிவுக்கூர்மையுடைய நபராக, ஆர்வம் காட்டுபவராக, நம்பகத்தன்மை கொண்டவராக, மக்களின் விருப்பம் காட்டுபவராக, ஒருங்கிணைத்துச் செல்லும் பக்குவமுடையவராக, சுய உள்ளுணர்வுடன் செயல்படக் கூடியவராக, சுய கட்டுப்பாடுடையவராக, பதற்றமற்ற பணியுடையவராக சமத்துவத்தைப் பாவிப்பவராக, சகிப்புத் தன்மையுடையவராக, அர்ப்பணிப்புடன், சுயமாக. புரிந் துணர்வுடன், பொறுப்புடன், விரிவான ஆற்றலுடையவராக, திறமைமிக்கவராக, தற்படைத்திறம் உடையவராக, நெளிவு சுளிவு தெரிந்தவராக, தெளிவான கண்ணோக்குடையவராக, சுறு சுறுப்பானவராக இருத்தல் தேவை. இவற்றில் உள்ள குறைபாடுகளை ஒரு தடையாக கருதி மேற்கொள்வதும் தேவை. (இவை ஆண் பெண் இருபாலருக்கும் பொருத்தமுடையதாகும்).

### 5. உடல் சார்ந்த தடை :

உளம், உடல் இரண்டு தடைகளும் உளவியல் தடைகளை மேற்கொள்ளும் அணுகுமுறையில் யெம்பது விழுக்காடு குறைவதற்கு வாய்ப்பிருக்கிறது. என்றாலும், பேதுருவின் மாமி உடல் நலன் குன்றியிருந்தபோது அவளை கடிந்து எழுப்பினார் என நூலில் படிக்கின்றோம். (லூக்கா. 4:38-39) கையைத்தூக்கி



எழுப்பினார் எனவும் காண்கிறோம். பிறகு அவர்கள் ஆர்வத்துடன் அவருக்கு உதவி செய்தார்கள். எனவே உடல்சார்ந்த தடைகளை அப்புறப்படுத்துவது தேவை.

மேலும் கலாச்சாரம் சார்ந்த தடைகள், சூழல்சார்ந்த தடைகள் போன்றவை, அமைப்பு முறைச்சார்ந்த தடைகளை மேற்கொள்வதில் கண்டு கொள்ளலாம்.

இறையியல் என்பது எவ்வாறு ஒரு பயணமோ? அதுபோலவே, தொடர்பியலும் ஒரு பயணமாகும். சூழல் சார்ந்த இறையியலில் இன்னுமொரு மைல்கல் பதிப்பதற்கு இக்கல்வி பெரிதும் உதவியாக இருக்கிறது. கடவுளின் அன்பை முழுமையாக அறிந்துகொள்ள இயேசு கிறிஸ்துவை நமக்கு கொடுத்தார் அவர் உடல் நமக்காக பகிரப்பட்டது. பகிர்வின் ஆழத்தை அவர் மரணத்தில் நினைவுகூருகிறோம். ஐக்கியத்தின் வலிமையை அவருடைய உயிர்தெழுதலில் கண்டு கொள்கிறோம். இன்றைய சூழல் இதற்கு ஒரு சவாலாகவே இருக்கிறது. ஆனால் இயேசுவின் இயக்கத்தில் இருந்தவர்கள் பரிமாறிக் கொண்ட குறியீடுகளில் ஒன்று மீன் அடையாளம் ஆகும். உயிருள்ள மீன்கள் எதிர் நீச்சல் போடும். உயிரற்ற மீன்கள் ஓடுகிற வெள்ளோட்டத்தில் அடித்துச் செல்லும். இன்றைக்குள்ள தகவல் தொழில் நுட்பங்களும், அதனைச் சார்ந்து பேசப்படுகின்ற தகவல் புரட்சியும் நம்மை வெள்ளோட்டத்தில் அடித்துச்சென்று விடாதவாறு, தற்காத்துக் கொள்வோம், தொடர்ந்து எதிர் கலாச்சாரத்தை உருவாக்கு வோம். மக்கள் கலாச்சாரத்தை வளர்த்தெடுப்போம்.

* * *

# கலைச் சொற்கள்

1. Alternative Communication - மாற்றுத் தொடர்பு
2. Audio Cassette - ஒலிப்பேழை
3. Barrier - தடை
4. Browsing Centre - இணைய கொய்தல் மையம்
5. C.D. - குறுந்தட்டு
6. Channel - வழி (ஊடகம்)
7. Communication - தொடர்பு
8. Communication Gap - தொடர்பு இடைவெளி
9. Computer - கணனி
10. "Corporatevillage" - விற்பனையை மையப்படுத்திய உலக கிராமம்
11. Decode - குறிமீட்டல்
12. Destination - சேருமிடம்
13. E.Mail - மின் அஞ்சல்
14. Effect - தாக்கம்
15. Elements - கூறுபாடுகள்
16. Encode - குறியாக்கல்
17. Fax - தொலை நகல்
18. Feed - Back - பின்னூட்டம்
19. Folk Media - மக்கள் மரபுத் தொடர் ஊடகம்
20. Forms of Communication - தொடர்பு வடிவங்கள்



21. Group Communication - குழுத் தொடர்புறவு
22. Hardware - வன்பொருள்
23. Information Age - தகவல் ஊழி (யுகம்)
24. Information Explosion - தகவல் வெள்ளம் (புரட்சி)
25. Information Poor - தகவல் இல்லார்
26. Information Rich - தகவல் மிக்கோர்
27. Information Society - தகவல் சமுதாயம்
28. Information Technology - தகவல் தொழில் நுட்பம்
29. "Infotaunment" - தகவல் கேளிக்கை
30. "Infomercials" - தகவல் வணிகம்
31. Inter Personal Communication - இருவரிடைத் தொடர்பு
32. Internet - இணையதளம்
33. Intra Personal Communication - அகத் தொடர்பு
34. Mass Communication - வெகுதிரள் தொடர்பு
35. Mass Media - வெகுதிரள் தொடர்பு ஊடகம்
36. Media - வெகுதிரள் தொடர்பு
37. Media Education - தொடர்பு ஊடகக் கல்வி - (விழிப்புணர்வு சார்ந்த கல்வித்திட்டம்)
38. Media Literate - தொடர்பு ஊடகந்தெரிந்தோர்
39. Media Illiterate - தொடர்பு ஊடக அறிவற்றோர்
40. Medium - ஊடகம்
41. Message - செய்தி
42. Models of Communication - தொடர்பு மாதிரிகள்
43. Monitor - செய்திகாணி
44. Mouse - சுட்டெலி
45. Narratives - செயல் வரைவு
46. Non- Verbal Communication - சொல் கடந்த தொடர்பு (செய்கை வழித் தொடர்பு)

47. Process - இயங்கியல் (படிமுறை)
48. Process of Communication - தொடர்பு இயங்கியல்
49. Receiver - பெறுநர்
50. Semeotic - குறியீட்டியல்
51. Sender - அனுப்புநர்
52. Software - மென்பொருள்
53. Source - மேலாதாரம்
54. Traditional Media - மரபு வழித் தொடர்பு ஊடகம்
55. Transmitter - கடத்தி
56. Type of Communication - தொடர்பு வகைகள்
57. Verbal Communication - சொல்வழி தொடர்பு (தொடர்பு)
58. Video Cassette - ஒலி, ஒளிப் பேழை

* * *



## துணைநின்ற நூல்கள்


1. Challenges of Communication by Carlos A. Valle, ISPCK, Delhi, 1995.
2. Communication Workship I & II by WACC and BTESSC, Bangalore, 1983-1984.
3. Communicatiom in Theological Education. A curriculam Edi by CRW. David, TTS, Madurai.
4. Communicating the Gospel today by Ganana Robinson, TTS, Madurai, 1986.
5. Communication for Social Change, A Christian Perspective, by Dhyanchand Carr, A Build Publication, Bombay, 1989.
6. Communication and Human Dignity Asian Christian Perspective Ed. By Pradip Thomas, ISPCK 1995.
7. Communicating in Community. An Introduction to Social Communication by Franz - Josef Eilers, SVD, LOGOS Publication, Indore, 1996.
8. Communication playing the basics, Neepa Metha, M.S. University - Baroda, 1997.
9. Communication and Theology - Introduction and Review of the literature by Paul. A. Soukeep by WACC, London, 2001.
10. Communication and Reconciliation Challenges Facing the 21st Century Edi by Philiplee and WACC London, 2001.
11. Developing Communication Skills, by Krishna Mohan & Meena Bonerj 1. Macmillan India limited, New Delhi, 1990.
12. Exercises in media Education, by Peter Gonsalves. SDB, Don Bosco Communications, Bombay, 1995.
13. Facing the Reality of Communication, Culture, Church and Communication, John Joshva Raja, ISPCK, Delhi 2001.

14. Folklore for change, by J.T. Appavoo, TTS, Madurai, 1986.

15. Introduction Communication by John Fiske Mathuen & Co Ltd. N.Y. 1982.

16. Mass Communication in India by Keval J.Kumar, Jaico Pub. House Bombay, 2001.

17. Mass Communication Theory Third Edition Dennis Mc Quail. SAGE Publication, New Delhi, 1994.

18. Religion and Mass Media Audiences and Adaptations by Daniel A.Stout, Judith M.Budden bauon, SAGE Publications New Delhi, 1996.

19. The Communication Revolution and NWICO. The Challenge to the Churches by CCA Singapore 1985.

20. The Process of Communication by David Berlo London 1960.

21. The myth of the information Revolution Social and Ethical Implications of Communication Technology Ed. by Michael Traber, SAGE Communications in Society Series, New Delhi, 1986.

22. Theories by Mass Communication by Melvin - L.Defleur, New York 1989.

23. Trends in World Communication on Disempowerment and self empowerment by Cess Homelink, South Bound Penang, Third World, New York, 1994.

24. Why Narrative? Readings in Narrative Theology Stanley Hauerwar. Michigan William B.Berdmans Pub. Co. 1989

25. *தகவல் தொடர்பு மாதிரிகளும் கோட்பாடுகளும். சிவ. சசிரேகா, சகா பப்ளிகேஷன்ஸ், மதுரை 1992.*

26. *தகவல் தொடர்பில் வெ.கிருட்டிணசாமி, மணிவாசகப் பதிப்பகம், சென்னை 1992.*



## Encylopedia

International Encylopedia of Communication Vol 1,2,3,4, Oxford University Press, Oxford 1989.

## DICTIONARIES

1. *மக்கள் தகவல் தொடர்பியல் கலைச்சொல் அகராதி, டாக்டர். அ. ஆலிஸ், மதுமதி வெளியீடு, திருச்சி, 1995.*

2. *விளம்பரக் கலைச்சொற்கள்* Adman 's Language, *முனைவர். ஆர். விஜயராணி, என். ரங்கநாதன் சங்கப் பலகை வெளியீடு, மதுரை, 1995.*

3. Dictionary of information Technology Ed. By S.M.H. Collin, Universal Book Stall, New Delhi, 1996.

4. A Dictionary of Cammunication and Media Studies Second Edition by James Watson and Anne Hill, Universal Book Stall, New Delhi, 1991.

## Journal

Arasaradi Journal of Theological Reflection (AJTR), Vol. No1 & 2 January – December, 1992.

*இறையியல் மலர், தொடர்புச் சாதனங்கள் மலர் 16, இதழ் 1, 1985* TTS *அரசரடி , மதுரை.*

* * *